[illegible] பதிவு பெற்றது

ரூ 5/50

# சிந்தாமணி

சிந்தாமணி

THE MOST INFLUENTIAL TAMIL WEEKLY WITH THE LARGEST CIRCULATION IN SRI LANKA

CHINTAMANI

இல 1022 9—7—1989 சுக்கில ஆனி 25 உ. 1989 ஜூலை 9 ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1409 துல்ஹஜ் பிறை 5 ★

# அரச ஊழியர்கள் நாளை வேலைக்கு வரவேண்டும்

## தவறின் அவசரகால விதியின் கீழ் நடவடிக்கை எடுப்பது பற்றி அரசு ஆலோசனை

கொழும்பு, ஜூலை 8

அரசாங்க ஊழியர்கள் அனைவரும் நாளை கட்டாயமாக கடமைக்கு செல்லவேண்டும் என அரசாங்கம் பணித்திருக்கிறது. இதனை மீறுவோருக்கு எதிராக அவசர கால சட்ட பிரமாணங்களின் கீழ் கடும் நடவடிக்கை எடுப்பது குறித்து அரசு ஆலோசித்துவருகிறது.

போக்குவரத்து சேவைகளில் ஈடுபடும் சகல பஸ், லொறி, வான் சாரதிகளும் உடனடியாக தத்தமது வேலைத்தளங்களுக்கு செல்ல வேண்டும் என பாதுகாப்பு அமைச்சு ஏற்கனவே அறிவித்துள்ளது.

போக்குவரத்து சேவையில் ஈடு[illegible] வாகனங்கள் உடனடியாக சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும். இன்றேல் வாகனங்களை பாதுகாப்பு படையினர் தம்முடன் எடுத்துச் செல்வார்கள்.

இப்படி பாதுகாப்பு அமைச்சு வாகனச் சொந்தக்காரர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாளை முதல் சிவில் [illegible]த்தை [illegible] களின் வரவில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

இதேவேளை பாதுகாப்பு அமைச்சின் எச்சரிக்கையை அடுத்து நேற்று சனிக்கிழமை சுமார் பதினைந்து சத வீதமான தனியார் பஸ்கள் கொழும்பில் சேவையில் ஈடுபட்டிருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. (ண—மு—ம)

## பயிற்சி பெற்ற மாலுமிகளுக்கு வெளிநாட்டு கப்பல்களில் வேலை வாய்ப்பு

கொழும்பு ஜூலை 8

இலங்கையில் பயிற்சி பெற்ற மாலுமிகளுக்கு வருடாந்தம் வெளிநாட்டுக் கப்பல்களில் வேலை பெற்றுக் கொடுக்கப் படும்—

கப்பற்றுறை ராஜாங்க அமைச்சர் திரு இந்திரதாச ஹெட்டி ஆராச்சி இவ்வாறு தீர்மானித்திருக்கிறார்—

தற்போது வேலையில்லாமல் இருக்கும் 3000 மாலுமிகளின் தொழில் பிரச்சினையைத் தீர்த்த பின் இத்திட்டம் ஆரம்பிக்கப் படும்—

வர்த்தகக் கப்பற்றுறை அமைச்சின் பேச்சாளர் ஒருவர் இவ்வாறு தெரிவித்தார்—

15000 ரூபாவைப் பெற்றோ அல்லது ஒரு மாத சம்பளத்தைப் பெற்றோ வெளிநாட்டுக் கப்பல்களில் வேலை வழங்க கப்பற் பிரதிநிதிகள் நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது—

சில இளைஞர்களிடமிருந்து பல லட்சக்கணக்கான ரூபா பணத்தை பெற்றுக் கொண்டு கப்பல்களில் வேலை வழங்குபவர்களின் செயலை முறியடிக்கவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (த—007)

## கடந்த மாதம் மட்டும் எயிட்ஸ் நோயால் 10,000 பேர் பிடிப்பு

ஜெனீவா, ஜூலை 8

கடந்த மாதம் எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை பத்தாயிரத்தால் அதிகரித்தது.

உலக சுகாதார ஸ்தாபனம் இந்த விவரத்தை கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்டது.

அமெரிக்காவில் மட்டும் எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டவர்கள், இறந்தவர்கள் ஆகியோரின் எண்ணிக்கை கடந்த முதலாம் திகதி 95,661 ஆக அதிகரித்திருக்கிறது.

உலகில் சுமார் 1,67,370 பேர் வரை இந்த நோயால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்த எண்ணிக்கை உண்மையில் இரண்டு மடங்காக அல்லது மூன்று மடங்காக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நோயினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடுகளில் அமெரிக்கா முதலிடத்தைப் பெறுகிறது. இரண்டாவது இடத்தைப் பெறும் பிரேஸிலில் 6,421 பேரும், அதற்கு அடுத்தபடியாக பிரான்ஸில் 6,409 பேரும், கென்யாவில் 5,945 பேரும் எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள். (ஏ)

## இருவரும் ஒருவராகி இப்புவி மறந்தார்



6,345 பேரும் எயிட்ஸ் நோயினல் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள்.
(ண)

ளது.

போக்குவரத்து சேவையில் ஈடுபடும் வாகனங்கள் உடனடியாக

எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாளை முதல் சிவில் நிர்வாகத்தை வழமையாக நிலைக்கு கொண்டு வருவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பஸ்கள் கொழும்பில் சேவையில் ஈடுபட்டிருந்ததை காணக் கூடியதாக இருந்தது. (ண-மு-மு)

# ஜெர்மனியில் முதியவர்கள் தனி அரசியல் கட்சி அமைப்பர்

பொன், ஜூலை 8

மேற்கு ஜெர்மனியில் முதியவர்கள் தமக்கென தனியான அரசியல் கட்சி ஒன்றை அமைக்க இருக்கிறார்கள்.

"நரை தட்டிய சிறுத்தைகள்" (கிரே பாந்தர்) என்ற முதியவர்கள் அமைப்பின் தலைவர் டிரூட் உன்ரு (வயது 64) இத் தகவலை கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

இந்த அமைப்பில் சுமார் 30,000 முதியவர்கள் அங்கம் வகிக்கிறார்கள். இவர்களின் புதிய கட்சிக்கு "கிரே" என்று நாமகரணம் சூட்டப்படும்.

மேற்கு ஜெர்மனியில் இறப்பு விகிதம் குறைந்து வருகிறது. அதேவேளை மக்களின் ஆயுசு அதிகரித்து வருகிறது. இதனால் முதியவர்களின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது.

அங்கு சராசரி மக்களில் ஐந்து பேருக்கு ஒருவர் 60 வயதைத் தாண்டியவராக இப்போது இருக்கிறார்கள். (ண)

இதற்கு முன்னோடியாகவே போக்குவரத்து சேவையை சீர் செய்வதற்கு மேற் சொன்ன ஏற்பாடுகளை அரசாங்கம் எடுத்திருக்கிறது.

போக்குவரத்துச் சபை ஊழியர்கள் இன்றுடன் 27 ஆவது நாளாக வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள். ரயில்வே பகுதியினரும் வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளனர்.

இதனால் போக்குவரத்து சேவைகள் ஸ்தம்பித்துள்ளன. அரசாங்க ஊழியர்களும், தனியார் துறை ஊழியர்களும் கடமைக்குச் செல்ல முடியாமல் இருக்கின்றனர்.

இதன் காரணமாக ஊழியர்

## மூளைக் காய்ச்சல்

கொழும்பு, ஜூலை 8

குருநாகல், குளியாப்பிட்டி, வாரியப்பொல, தம்பதெனி, பொல்கஹவெல ஆகிய பிரதேசங்களில் மீண்டும் மலேரியா நோய், மூளைக்காய்ச்சல் நோய் பரவத் தொடங்கியுள்ளது.

இந்த நோய்களுக்கான அறிகுறிகள் தென்படுகின்றவர்கள் உடனடியாக அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்குச் சென்று பரிசோதனைகள், சிகிச்சைகளை பெற்றுக் கொள்ளுமாறு வடமேல் மாகாண சபை சுகாதாரத் திணைக்களம் பொதுமக்களை கேட்டுள்ளது. (த-138)



கடற்கரை தனிலிருந்து கடலைகள் கொறித்த வேளை
காற்றுவாங் கிடவே வந்த காதலன் சிறுகல் லொன்றை
படக்கென முதுகில் வீசிப் பாவையைக் கவர்ந்தான். அந்த
பாவையோ திடுக்குற் றுற்போல் திரும்பியே
பார்த்தான். பற்கள்
மடல்விரி பாளை போல மயக்குபுன் சிரிப்பு உதிர்த்து
மாரனை அருகே வாவென் றழைத்திட அவனும் சொக்கி
இடம்பெயர்ந் தங்கு வந்தான். இன்பவா ரிதியில் மூழ்கி
இருவரும் ஒருவ ராகி இப்புவி மறந்தார் ஆனார்.

## வேலை இன்மை

ஜூலை 8

மேற்கு ஜெர்மனியில் வேலை வாய்ப்பு இல்லாதோரின் எண்ணிக்கை

(2ஆம் பக்கம் பார்க்க)

# நிலத்தடி நீர் வளத்தை கண்டுபிடிப்பது எப்படி?

நிலத்தடி நீரைக் கண்டுபிடிக்கப் பழங்காலத்திலிருந்து பல முறைகள் கையாளப்பட்டு வருகின்றன.

நமது கிராமங்களில் இருக்கும் பல விவசாயிகள் தங்கள் அனுபவத்திலிருந்து நீர் இருக்கும் இடத்தைக் குறிப்பிட்டுக் கூறும் அனுபவ அறிவைப் பெற்றிருக்கிறார்கள்.

நிலத்தடி நீர் இருக்கும் இடங்களில் மேல் மண்ணிலும் சிறிது நீர்ப்பிடிப்பு அதிகமாக இருக்கும்.

இந்த இடங்களில் வளரும் மரங்கள் பசுமையாகவும், அடி மரம் பெருத்தும் இருக்கும். குறிப்பாக இப்படிப்பட்ட மரங்கள் மழை நீர் வடியும் ஓடைகள் அருகில் இருக்கும்.

அப்படிப்பட்ட இடங்களில் கிணறுகள் வெட்டினால் நீர் கிடைக்கும் வாய்ப்புகள் அதிகமாக இருக்கும்.

இம்மாதிரி குறிப்புகளைக் கொண்டு அனுபவம் மிக்க பெரிய விவசாயிகள் கூறும் இடங்களில் பொதுவாக கிணறுகள் வெற்றிகாரமாக அமையும்.

நிலத்தடி நீர் நிலைகள் அதிகம் இருக்கக் கூடிய இடங்களை அறியும் குறிப்புகள் வருமாறு:—

(2ஆம் பக்கம் பார்க்க)

# முதலாவது "ஜனாதிபதி நடமாடும் அமைச்சு சேவை" அம்பாறையில்

கொழும்பு ஜூலை 8

முதலாவது "ஜனாதிபதி நடமாடும் அமைச்சு சேவை" அம்பாறை மாவட்டத்தில் எதிர்வரும் 14ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை நடைபெறும்.

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசவின் யோசனைக்கு இணங்க இது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

அம்பாறை நகருக்கு அருகிலுள்ள புதிய நீதிமன்றப் பேட்டையில் இந்தச் சேவை அமையும்.

அரச நிர்வாகத்தை மக்களின் வீட்டு வாசற் கதவு வரை கொண்டு சென்று மக்களின் நீண்டகாலப் பிரச்சினைகளையும், குறைகளையும் தீர்ப்பதே இந்த ஜனாதிபதி நடமாடும் அமைச்சு சேவையின் பிரதான நோக்கமாகும்.

ஜனாதிபதி நடமாடும் அமைச்சு சேவை நடைபெறும் நாட்களில் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசவும், பிரதமர் திரு. டீ. பீ. விஜேதுங்கவும் சமுகம் அளித்திருப்பர்.

இந்தச் சேவையில் அமைச்சர்களும், ராஜாங்க அமைச்சர்களும் பங்குபற்றுவர்.

அமைச்சுக்களின் செயலாளர்களும், மற்றும் அதிகாரிகளும்

(2ஆம் பக்கம் பார்க்க)

# விளையாட்டு உபகரணங்கள்: சுங்கவரி நீக்கப்படும்

விளையாட்டு உபகரணங்களுக்கு சுங்க வரி அறவிடுவதில்லை என அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இளைஞர் விவகார விளையாட்டுத் துறை அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டு உபகரணங்களை இறக்குமதி செய்பவர்களுக்கு மாத்திரமே சுங்க வரி அறவிடப்பட மாட்டாது.

இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. நந்த மத்தியூவின் சிபார்சின் பேரிலேயே சுங்க வரியை ரத்துச் செய்வதென அரசு தீர்மானித்துள்ளது. (ண-மு)

## 3000 கொள்கலன்கள் துறைமுகத்தில் தேக்கம்

கொழும்பு துறைமுகத்தில் வெளிநாட்டு பொருட்கள் அடங்கிய சுமார் 3,000 கொள்கலன்கள் அப்புறப்படுத்தப்படாமல் இருந்து வருகின்றன.

கொழும்பு துறைமுகத்திற்கு லொறிகள் வராமையே இதற்குக் காரணம் என்று துறைமுக உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

கொள்கலன்கள் துறைமுகத்தில் தேங்கி கிடப்பதால் பெரும் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் அவ் அதிகாரி கூறினர்.

(ண-மு)

## அண்ட வெளியில் மூன்றாவது சந்திரன்

வாஷிங்டன், ஜூலை 8

நெப்டியூன் என்ற கிரகத்தைச் சுற்றி வரும் புதியதொரு மூன்றாவது சந்திரனை அமெரிக்க விண்வெளிக் கலம் வொஜேயர் 2" கண்டுபிடித்திருக்கிறது.

இது மூன்றாவது சந்திரனாகும். இந்தச் சந்திரனின் குறுக்களவு சுமார் 125 மைலில் இருந்து 400 மைலாகும்.

இந்தச் சந்திரனை பூமியில் இருந்து பார்க்க முடியாது. இது நெப்டியூனுக்கு மிக அண்மித்ததாக இருக்கிறது. நெப்டியூனின் பிரகாசத்தினால் இதனை பூமியில் இருந்து பார்க்க முடிவதில்லை.

நெப்டியூனைச் சுற்றி திரிடோன் என்ற சந்திரனும், நெறீட் என்ற சந்திரனும் வலம் வந்து கொண்டிருக்கின்றன.

இவை முறையே 1846ஆம் ஆண்டிலும், 1949ஆம் ஆண்டிலும் கண்டுபிடிக்கப்பட்டன. (ண)

# இடமாற்றங்களால் ஆசிரியர் பற்றுக்குறை

கொழும்பு, ஜூலை 8

ஆசிரியர்களின் வருடாந்த இடமாற்றத்தால் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றுக் குறை மேலும் அதிகரித்திருக்கிறது.

இதுவரை கல்விச் சேவைகள் ஆணைக்குழு 5,000 ஆசிரியர்களுக்கு இட மாற்றங்களை வழங்கியிருக்கிறது. எனினும் அவ் இடங்களுக்குப் புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை.

மாகாண மற்றும் பிரதேச கல்விப் பணிப்பாளர்களின் ஆலோசனையைப் பெறுமல் இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதனை பிரதேச, மாகாண கல்விப் பணிப்பாளர்கள் கல்வி அமைச்சரிடம் சுட்டிக் காட்டி உள்ளனர்.

பாடசாலைகளில் ஏற்பட்டிருக்கும் ஆசிரியர் பற்றுக் குறை தொடர்பாக கடந்த வியாழன் அன்று மாகாண பிரதேச பணிப்பாளர்கள் கல்வி கலாசார தகவல் துறை அமைச்சருடன் பேச்சு வார்த்தை ஒன்றை நடத்தினர்.

அண்மையில் இடம்பெற்ற இடமாற்றங்களினால் அம்பாறை மாவட்டத்தில் 1000 ஆசிரியர்களுக்கும் பொலன்னறுவை பிரதேசத்தில் 890 ஆசிரியர்களுக்கும் பற்றுக் குறை ஏற்பட்டுள்ளது.

இப்படியே ஏனைய மாவட்டங்களிலும் ஆசிரியர் பற்றுக் குறை ஏற்பட்டிருப்பதாக கல்வி அமைச்சரிடம் சுட்டிக் காட்டப்பட்டது. (ண-ய-007)

## யானைகள் இனவிருத்தி திட்டம்

யானைகளின் இன விருத்திக்கான திட்டம் ஒன்றை மிருகக் காட்சிச்சாலைத் திணைக்களம் ஆரம்பித்துள்ளது—

அருகி வரும் யானை இனத்தைப் பாதுகாப்பதற்காக இத்

(2ஆம் பக்கம் பார்க்க)

ஆகக் கூடுதலான விற்பனையுள்ள தமிழ் வார இதழ் சிந்தாமணி தான்

## வங்க தேசத்தில் சட்ட திருத்தம்

டாக்கா, ஜூலை 8

வங்காளதேசத்தில் உப ஜனதிபதி ஒருவரைத் தெரிவு செய்யும் சட்ட திருத்த மொன்றுக்கு பிரேரணை முன் வைக்கப்பட்டுள்ளது.

ஆளும் ஜாதியா கட்சி மேற்படி பிரேரணையைச் சமர்ப் பித்தது.

அண்மையில் பிரதமர் மஹ்மூத் அஹ்மத் நாடாளுமன் றத்தில் 9ஆவது சட்டத் திருத்தப் பிரேரணையைச் சமர்ப்பித்தார்.

ஜனதிபதியின் 5 ஆண்டு கால பதவிக் காலத்தில் மேலும் 2 ஆண்டுகள் ஆட்சி செய்யவும் புதிய சட்டத் திருத்தப் பிரேரணை யில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ட)

## கென்பரா மாநாட்டில் ஈரான்—ஈராக் பங்கு

கென்பரா, ஜூலை 8

சர்வதேச இரசாயன ஆயுத மாநாடு ஆஸ்திரேலிய கென்பரா நகரில் நடைபெற வுள்ளது.

இதில் பங்கேற்குமாறு 69 நாடுகளின் இரசாயன தொழிற்சாலைப் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் 1ஆம் திகதி நடைபெற வுள்ள மேற்படி மாநாட்டில் பங் கேற்குமாறு ஈரான், ஈராக் நாடு களுக்கும் அழைப்பு விடுக்கப்பட் டுள்ளது.

எனினும், மேற்படி வளைகுடா நாடுகள் இரண்டும் இதில் பங் கேற்கும் என எதிர்பார்க்கப்படுகி றது.

இவை கலந்து கொள்வது குறித்து சிறிது சந்தேகம் காணப் படுவதாக வெளிநாட்டமைச் சின் பேச்சாளர் தெரிவித்தார். (ட)

## சவூதி அரசிடம் சூடான் பொருளாதார உதவி கோருகிறது

### தூதுவர் ஜித்தா பயணம்

றியாத், ஜூலை 8

சூடானிய ராணுவ அரசாங் கம் தனது தூதுவர் ஒருவரை சவூதி அரேபியாவுக்கு அனுப்பி வைத்துள்ளது.

அரசியல் பொருளாதார உதவி களைப் பெறும் நோக்கில் அண் மையில் இவர் அனுப்பி வைக் கப்பட்டுள்ளார்.

சவூதி அரேபிய செய்தி ஸ்தாப னம் இதனை தெரிவித்தது.

புரட்சிகர ராணுவ கவுன்ஸி லின் உதவித் தலைவரான பிரி கேடியர் ஜெனரல் அல்ஸுபைர் முகம்மது சாளெற் சவூதி ஜித்தா வந்து சேர்ந்தார்.

முடிக்குரிய இளவரசர் அப் துப்பா பின் அப்துல் அஸீஸுடன் இவர் பேச்சு நடத்தினர் என்றும் செய்தி நிறுவனம் மேலும் கூறி யது.

இச்சந்திப்பின் போது வெளி நாட்டமைச்சர் சவூத் அல் பைஸல் உட்பட அரச பிரமுகர் களும் கலந்து கொண்டனர்.

உதவிகள் கோரி எகிப்துக்கும் தூதவர் ஒருவரை சூடான் அர சாங்கம் அனுப்பிவைத்துள்ளது. (ட)

## ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 8

கொழும்பு வை எம் எம் ஏ மண்டபத்தில் இன்று நடை பெறவிருந்த "வதனம்" நூல் வெளியீட்டு விழா பின்போடப் பட்டுள்ளது. (ண-007)

# சிந்தாமணி சிறு விளம்பரங்கள்

### மணமகன் தேவை

கொழும்பை பிறப்பிடமாக வும் ராகமத்தை வசிப்பிடமாக வும் கொண்ட இந்திய வம்சா வளி பண்டார வகுப்பை சேர்ந்த 38 வயதுடைய தையல் வேலை செய்து மாத வருமானம் 1500/- பெறும் கன்னிப் பெண்ணுக்கு பெற்றோர் நற்குணமுடைய வர னைப் பார்க்கிறார்கள். முழு விவரத் துடன் விண்ணப்பிக்கவும். விளம் பரதாரர் இலக்கம்- ஜு-09-02 மே/பா சிந்தாமணி த பெ 1257 கொழும்பு.

களுத்துறை மாவட்டத்தில் வசிக்கும் பயிற்றப்பட்ட முஸ்லிம் ஆசிரியைக்கு சிறந்ததொரு மண மகனை சகோதரன் தேடுகிறார்- மணமகன் சிறந்த குணமுடைய வராகவும், குடிப்பழக்கமற்றவ ராகவும் இருத்தல் வேண்டும். அரசாங்க சேவையில் உள்ளவ ருக்கு முன்னுரிமை வழங்கப்படும். சீதனமாக நகையும் ரொக்கமும் கொடுக்கப்படும். விளம்பரதாரர் இலக்கம்- ஜு-09-01 மே/பா சிந்தாமணி த பெ 1257 கொழும்பு-

களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த நல்ல குணமும், மார்க் கப்பற்றும் நிறைந்த- கௌரவ மான முஸ்லிம் குடும்பத்தைச் சேர்ந்த மணமகளுக்கு கௌரவ மான முஸ்லிம் குடும்பத்தைச் சேர்ந்த மார்க்கப் பற்றுள்ள மண மகனைப் பெற்றோர் தேடுகிறார் கள். மணமகனுக்கு வயது 25—30 வரை இருக்க வேண்டும். சீத னம் நகை கொடுக்கப்படும் வீடு

### மணமகள் தேவை

மேல் மாகாணத்தைச் சேர்ந்த சோனகப் பெற்றோர் கொழும்பில் தொழில் செய்யும் 32 வயது மகனுக்கு தகுந்த துணைவியைத் தேடுகின்றனர். விபரங்களை முதல் கடிதத்தில். ரகசியங்கள் பாது காக்கப்படும். விளம்பரதாரர் இலக்கம்- ஜு-09-04 மே/பா சிந்தாமணி த பெ 1257 கொழும்பு.

### ஊழியர் தேவை

கரும்புத் தோட்டம் ஒன்றுக்கு ஊழியர் குடும்பம் தேவை. தங் கும் வசதி- கூடுதலான சம்ப ளம் கொடுக்கப்படும். விபரம் தபால் மூலம் அல்லது ஞாயிற்றுக் கிழமை நேரில் வரவும். சுபேதா புத்தகக் கடை, மொனராகலை.

வி இ 019824

### வேலை தேவை

நன்கு திறமையும் உற்சாக மும், ஜனஸா குர்பான் ஆகிய கட மைகளில் நன்கு அனுபவம் உள்ள முஅத்தினுக்கு வேலை தேவை. தொடர்பு கொள்ளவும்- கலீல மான், 149/10, மீரானியா வீதி கொழும்பு-12.

வி இ 019784

### கமரா உபகரணம். தேவை

### வீடு விற்பனைக்கு உண்டு

மொஹிதின் மஸ்ஜித் வீதியில் சகல வசதிகளுடன் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்க.
M. Thomas 121, 1st Division Maradana Col. 10.

வி இ 019534

### விளக்குத் திரி விற்பனை

தாமரை விளக்குத் திரி தட்டுப் பாடின்றி விநியோகம் நடைபெறு கிறது. வியாபாரத் தேவைக்கு பி கே சாமி, த பெ இல- 33, நுவ ரெலியா. தொலைபேசி- 052-2508.

வி இ 0207

### ஒலிபெருக்கி

டொ ஆ ஷோ அம்பிளிபயர் கள், ஹோன். யுனிட் மைக் ஸ்ராண்ட் விற்பனைக்கு உண்டு. விலை ரூ. 900/- க்கு மேல். Colombo Gift House. 42, Keyzer St. Pettah.

வி இ 019070

### இஸ்லாமிய மாந்திரீகம்

இன்ஷா அல்லாஹ் - கணவ னுக்கும் மனைவிக்கும் ஒற்றுமை ஏற்படவும், காதலில் வெற்றி பெறவும், இஸ்ம் அஸ்மா வேலை களைச் செய்வதற்கும் சனி- ஞாயிறு போயா தினங்களில் வருக. மாந்

## வீரியம் குறைந்த சிகரெட் புகைத்தாலும் ஆபத்து வரும்

பில்டர் சிகரெட்டுகளாக இருந்தாலும் சரி, குறைந்த அளவு நிக்கடின் கொண்ட சிகரெட்டு களாக இருந்தாலும் சரி, சிகரெட் பிடித்தால் இருதய நோய் நிச்ச யம்,

எவ்வகையான சிகரெட்டுகளை நீங்கள் புகைக்கிறீர்கள் என்ப தல்ல பிரச்சினை, சிகரெட் பிடிக் கிறீர்களா, எத்தனை சிகரெட்டு களைப் பிடிக்கிறீர்கள் என்பது தான் பிரச்சினை,

இப்படி சிகரெட் ஆபத்து பற்றி ஆராய்ந்த பொஸ்டன் பல் கலைக்கழக வைத்திய நிபுணர்கள் முடிவாகத் தெரிவித்துள்ளனர்,

பில்டர் கட்டிய அல்லது வீரி யம் குறைந்த சிகரெட்டுகளைப் பிடித்தால் உடல்நலம் பாதிக்கப் படாது என்று நம்மில் பலர் கருதி வருகிறார்கள், இந்த நம் பிக்கை புதிய ஆய்வு மூலம் தகர்க்கப்பட்டுள்ளது,

புகைப்பழக்கத்துக்கு ஆளான ஒருவர் வீரியம் குறைந்த சிகரெட் டுகளைப் புகைக்கும் போது தனக்கு தேவையான புகையின்பத்தைப் பெறும் பொருட்டு சரமாரியாக புகையை உள்ளே இழுக்க வேண் டியுள்ளது,

நுரையீரலில் புகையை அடைத் துக் கொள்ள வேண்டியிருக்கிறது அடிக்கடி புகைக்க வேண்டியிருக் கும், இவ்வாறு காரமான சிக ரெட் ஒன்று தரும் புகையின்பத் தைப் பெற அந்நபர் முயற்சிப்ப தால் காரம் குறைந்த சிகரெட் பிடிப்பவருக்கும் காரம் கூடிய சிகரெட் பிடிப்பவருக்கும் இடையே எந்தவித வித்தி யாசமும் இருப்பதில்லை என்று தெரி டிப்பாகிறதாம்,

தினமொன்றுக்கு 45 சிகரெட் டுகளைப் புகைக்கும் பெண்மணி கள் இருதய நோய்களுக்கு ஆளா கும் ஆபத்து 22 தடவைகளால் அதிகரிக்கிறதாம்,

இது பெண்களிடையே நடத் தப்பட்ட ஆய்வு தானே என்று ஆண்கள் அலட்சியமாக இருந்து விடுவதற்கில்லை,

ஏனெனில் சில ஆண்டுகளுக்கு முன்னர் ஆண்களிடையே நடத் தப்பட்ட ஆய்வும் இதே உண் மைகளைத்தான் தெரிவித்திருந் தன,

(த-032)

## உக்குவளையில் இராணுவம் தீவிர பாதுகாப்பு

தெல்தெனிய, ஜூலை 8

மாத்தளைப் பொலீஸ் பிரிவைச் சேர்ந்த உக்குவலை யில் இராணுவத்தினர் தீவிர பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்,

உக்குவளை நகரின் எல்கடு வைச் சந்தி, பொதுச் சந்தைக்கு முன்பாகச் செல்லும் பிரதான பாதை, மற்றும் ஒழுங்கைகள் ஆகியவற்றிலும் இராணுவத்தினர் காவல் புரிந்து வருகின்றனர், அத்துடன் சந்தேகத்துக்கிடமான வாகனங்களும் பலத்த சோத னைக்கு உட்படுத்தப்படுகின்றன,

(ல-289)

## நிலத்தடி நீர்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

* மழை நீர் ஓடைகள், ஆறு கள் இவைகளின் பக்கத்தில் உள்ள நிலங்கள்.

* நன்கு வளர்ந்து கோடையி லும் பசுமையாக இருக்கும் மரங் கள் உள்ள இடங்கள்.

* மேடு பள்ளமான பூமியில் பள்ளக்கால் பகுதிகள்.

* குளம் குட்டைகளின் பாச னப் பகுதிகள் மற்றும் நீர் தேங் கும் பகுதிகள்.

* ஏற்கெனவே வெட்டப்பட் டுத் தண்ணீர் நிறைய ஊறும் கிணறுகள் உள்ள பகுதி.

இந்த அனுபவ முறை தவிர, பலவிதமான நம்பிக்கைகள் மக் கள் மனதில் வேருன்றி இருக்கின் றன. அவற்றில் சில வருமாறு:—

* பசு மாட்டுக் கன்றை ஒரு நிலத்தில் ஓட விட்டு அது எங்கா வது நின்று மூத்திரம் பெய்தால் அந்த இடத்தில் கிணறு வெட்ட லாம்.

* ஆட்டுக் கிடாவை அந்த நிலத்தில் ஓட விட்டால் அது ஏதாவது ஒரு இடத்தில் நின்று தலையைக் குலுக்கினால் (ஆட்டி னால்) அந்த இடத்தில் நீர் இருக் கும்.

* சிலருக்கு உடம்பில் ஒரு வித மான காந்த சக்தி இருக்கிறது. அவர்கள் ஒரு மரத்தில் சிறிய கிளையையோ அல்லது செம்பு வளையத்தையோ கையில் எடுத்துக் கொண்டு ஒரு நிலத்தில் நடந் தால் நீர் இருக்கும் இடத்தின் மேல் அவர்கள் வரும் போது அந்தக் குச்சி அல்லது வளையம் சுற்றும். அந்த இடத்தில் கிணறு வெட்டலாம்.

* நிலத்தின் வரை படத்தை யும் நிலச் சொந்தக்காரரின் ஜாத கத்தையும் பார்த்து, எந்த இடத் தில் கிணறு வெட்டலாம் என்று ஜோசியர் மூலம் அறிதல்.

* ஒரு சிறிய கண்ணாடி போத்த லில் நீர் நிறைத்து, அதை நூலி னால் கட்டி, நூலின் நுனியைப் பிடித்துக் கொண்டு போனால், நீர் நிலை உள்ள இடத்தில் இந்த

## யானைகள்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களம் பின்னவல யானை கள் சரணாலயத்தில் யானைக் குட் டிகளை விருத்தி செய்யும் திட் டத்தை ஆரம்பிக்கும்-

தனிப்பட்ட முறையில் யானைகளை வளர்க்கும் சொந்தக் காரர்களுக்கு இத் திட்டத்தின் கீழ் நன்மை கிடைக்கும் (த-007)

## வேலை இன்மை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சற்று குறைந்துள்ளது.

மே மாதத்தில் 7.6 சத வீதமாக இருந்த அளவு ஜூனில் 7.4ஆகக் குறைந்து காணப்பட்டது.

கடந்த ஆண்டு ஜூனில் வேலை வாய்ப்பற்றோர் 8.4 சத வீதமாக இருந்தனர்.

## பிறந்த நாள்

கள் மணமகனுக்கு வயது 25—30 வரை இருக்க வேண்டும். சீதனம் நகை கொடுக்கப்படும். வீடு பேசித் தீர்க்கலாம். விளம்பரதாரர் இலக்கம்— ஜு—19-33 மே/பா சிந்தாமணி த பெ 1257 கொழும்பு.

## உயர் கல்வி போதனை

சட்ட கல்லூரி பிரவேசப் பரீட்சை வகுப்புகள் மட்டுப்படுத்தப்பட்ட எஸ் எல் ஏ எஸ் போட்டிப் பரீட்சை தீவிர பயிற்சிகள் தமிழ். ஆங்கிலம் மூலம் மேலும் இலங்கை— லண்டன் ஏ எல் ஓ எல் வகுப்புகள். ஆங்கிலம்— பௌதீகம்— கணிதம்— வெளிநாடுகள் செல்ல ரீ ஓ ஈ எப் எல்— எஸ் ஏ ரி ஆங்கிலப் பேச்சு 45, அல்பேட் பிளேஸ்— தெஹிவளை.

வி இ 019717

## கருவிகள் பழுது பார்த்தல்

டீ வி, வீடியோ— ரேடியோ— கல்குலேட்டர்கள் துரிதமாகவும்— உத்திரவாதத்துடனும் திருத்திக் கொள்ள, எண்டனா— பூஸ்டர்— உதிரிப்பாகங்கள் வாங்கிக் கொள்ள—

Telecave 105—1/5, Olcott Mawatha (Opposite Fort Station). Rupavahini Buildings, 1st Floor Tele Phone 545377.

வி இ 019533

## ஆங்கில தட்டச்சு

ஆங்கில டைப்ரைட்டர்கள் விற்பனைக்குண்டு. விலை ரூ. 2750/-க்கு மேல்.

Colombo Gift House. 42, Keyzer St. Pettah.

வி இ 019070

## கமரா திருத்தல்

கமரா சேவிஸிங், லென்ஸ் கிளீனிங், பிளஷ் கண் பழுது பார்த்தல் செய்யப்படும். கொழும்பு கிப்ட் ஹவுஸ். 42, கெய்சர் வீதி, (பொலீஸ் நிலையம் எதிரில்) புறக்கோட்டை.

Colombo Gift House.

வி இ 019070

## கல்வி

ஆங்கிலம் பேசுவதற்கு பயிற்சி வழங்கப்படும். வகுப்புகள் ஆரம்பமாகின்றன. [illegible]திமா இங்லிஷ் இன்ஸ்டிடியூட்— 143— 2/1, முதலாம் டிவிசன் மருதானை சென்ட்ரல் தியேட்டருகே.

வி இ 019849

## கமரா உபகரணம்.. தேவை

புதிய அல்லது சிறிது பாவித்துள்ள கமராக்களுக்கும் உபகரணங்களுக்கும் நியாயமான விலை கொடுக்கப்படும். "கொழும்பு கிப்ட் ஹவுஸ்" 42— கெய்சர் வீதி. (பொலீஸ் நிலையம் எதிரில்) புறக்கோட்டை.

Colombo Gift House.

வி இ 019070

## விரிவுரையாளர் தேவை

க பொ த (உயர்) முதற் கலைமாணி பட்டத் தேர்வு வகுப்புக்களுக்கு பொருளியல் கற்பிக்கும் திறமை வாய்ந்த பொருளியல் சிறப்புப் பட்டதாரி ஒருவர் தேவை. விண்ணப்பிக்கவும்— ஜாமிஆ நளீமிய்யா, த பெ இல— 01—பேருவளை.

வி இ 018544

## ஆங்கில வகுப்பு

ஆங்கிலம் பேச— எழுத— இலக்கணத்துடன் போதிக்கப்படும். மாணவர்களுக்கும் தொழில் செய்வோருக்கும் ஆரம்பதர. உயர்தர வகுப்புகள் நாலை— மாலை— வார இறுதி நாட்களில் வகுப்புகள் நடைபெறும்.

Mrs. Jameela Farook. 35 Sri Gunananda Mawatha. Kotahena Colomo—13.

வி இ 019185

## தொழில்நுட்ப வகுப்பு

ரேடியோ— டி வி பயிற்சி வகுப்புகள் நவீன முறையில் நடைபெறுகிறது. தற்போது டி வி பயிற்சி வகுப்பு நடைபெறுகின்றது. விசேட காலை— மாலை ஆங்கில பயிற்சி வகுப்பும் உண்டு.

Gainsbrough Institute 121 1st Division Maradana Colombo—10.

வி இ 019535

## புகைப்படப்பிடிப்பு

போட்டோகிறபி, பாஸ்போட் விசா மற்றும் ஏனைய கறுப்பு/ வெள்ளை படங்கள் ஒரு மணித்தியாலத்திற்குள் தரப்படும். பழைய படங்கள் ரீ—டச் செய்து கொப்பி பண்ணப்படும். கமராக்களும், [illegible]ரா உபகரணங்கள் நியாயமான விலைக்கு கொடுக்கப்படும். கொழும்பு கிப்ட் ஹவுஸ். 42, கெய்சர் வீதி (புறக்கோட்டை பொலீஸ் நிலையம் எதிரே) புறக்கோட்டை.

Colombo Gift House.

வி இ 019070

களைச் செய்வதற்கும் சனி— ஞாயிறு போயா தினங்களில் வருக. மாந்திரீக எண்ணெய்யும் உள்ளது.

Sulfika Buhary, Shams Al—Manzil, 17, Eluwila, Panadura.

வி இ 018948

## மலையாள மாந்திரிகம்

ஆண் — பெண் இருபாலாருக்குமுள்ள இரகசிய நோய்களுக்கு வைத்திய சிந்தாமணி "ய ப" அம்மையார்களை சந்திக்கலாம். ஸ்கலிதம்— படர்தாமரை— ஆஸ்மா— நீரழிவு— சித்தப் பிரமை— தீராத ஊரல் நோய்— முகத்தில் கறுப்பு தழும்பு விழுதல்— இளமையில் தலை முடி நரைத்தல்— தீராத தலை வலி முதலான நோய்களுக்கு மூன்றே நாட்களில் குணம் காணலாம். தபால் மூலம் ஒவ்வொரு விடயத்துக்கும் ரூ 250/— நேரில் ரூ. 200/— வெளிநாட்டு ஆடர்களுக்கு கட்டணம் இரட்டிப்பு. தலைமை நிர்வாகி— பி கே சாமி— 31— 32— 33 தினச்சந்தை கட்டிடம் நுவரெலியா. தொலைபேசி— 052—2508.

வி இ 0207

3 நாளைக்குள் விரும்பியவர்களை வசியம் செய்து கொடுக்க மாந்திரம் எமது கட்டணம் ரூ 350/— அனுப்பி செய்து கொள்ளலாம். பி கே சாமி இல— 33, தினச்சந்தை, நுவரெலியா.

வி இ 0207

சர்வ மாந்திரிக வைத்திய ஜோதிட விடயங்களுக்கு என்னைச் சந்தியுங்கள். மாந்திரிக ஜோதிட தத்துவஞானி, பி கே சாமி 33 தினச்சந்தை நுவரெலியா தொலைபேசி— 052—2508

வி இ 0207

துர்க்கா தேவியின் துணை கொண்டு. நோயா? பேயா? குடும்பத் தகராறு? கணவன்— மனைவி பிணக்கா? வசியங்களின் நிந்திப்பா? வசியம் பெறவா? தொழில் நிந்திப்பா? கூடலை முனி மகிமையின் மா மாந்திரீகர் கூடலை நாதரை சந்தியுங்கள். தேவைக்கு தலைமை நிர்வாகி பி கே சாமி— மலையாள மாந்திரீகர் இல— 31, 32, 33 தினச்சந்தை கட்டிடம்— நுவரெலியா. தொலைபேசி— 052—2508.

வி இ 0207

திருமணமாகாத கன்னியர்களுக்கும், காளையர்களுக்கும் மலையாளத்தில் முக்கனிகளில் உயர்ந்த [illegible]ளில் ஒன்றில் பலன்தர கட்டணம் ரூபா 181/— காணிக்கை மாத்திரமே: இதன் சக்தியால் [illegible]த்தி பெற்றோர் எண்ணற்றவர் திருமணம் தடை உள்ளவர்கள் இத்துறையை கடைப்பிடிக்க வேண்டிய முகவரி— பி கே சாமி, இல— 33 தினச்சந்தை நுவரெலியா தொலைபேசி— 052—2508.

வி இ 0207

சிகரெட் பிடிப்பவருக்கும் இடையே எந்தவிதமான வித்தியாசமும் இல்லை.

ஒரேவிதமான பாதிப்புக்குத்தான் இருவருமே ஆளானுர்கள் என்று இம்மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஆகவே, சிகரெட் புகையின் பாதிப்பில் இருந்து தப்பிக்க வேண்டுமானல் அதற்கான ஒரே வழி புகைக்காமல் இருப்பதுதான் என்கிறார்கள் இவர்கள், திர்க்கமாக.

அறுபத்தைந்து வயதுக்குக் கீழ்ப்பட்ட புகைபிடிக்கும் புகை பிடிக்காத மூவாயிரம் பெண்களிடம் மூன்று ஆண்டுகளாக நடத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையிலேயே இந்த உண்மைகளை நிபுணர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

ஒரு நாளைக்கு ஒன்று முதல் நான்கு சிகரெட்டுகள் வரை பிடிக்கும் பெண்களுக்கு இருதய நோய் ஏற்படும் வாய்ப்பு இரட்

## ஜாப், வெள்ள நிவாரண உதவி

கொழும்பு, ஜூலை 8

உபயோகிக்கப்பட்ட ஆடைகள், நீர் இறைக்கும் இயந்திரங்கள் மற்றும் மோட்டார்ப் படகு இயந்திரங்கள் ஆகியவற்றை வெள்ள நிவாரண உதவியாக இலங்கைக்கு வழங்க ஜப்பான் முன்வந்துள்ளது.

யமஹா நிறுவனம் ஐந்து மோட்டார்ப் படகு இயந்திரங்களையும், நான்கு நீர் இறைக்கும் இயந்திரங்களையும் அன்பளிப்பாக வழங்க முன்வந்துள்ளது.

திரு. ஷிஷிகுரா 3170 கிலோ எடை கொண்ட உபயோகிக்கப்பட்ட ஆடைகளை அன்பளிப்பாக வழங்க முன்வந்துள்ளார்.

இத்தகவலை டோக்கியோவில் உள்ள ஜப்பான் — இலங்கை பௌத்த நிலையத்தைச் சேர்ந்த வண. பனகல உபதிஸ்ஸ தேரர் இலங்கை அதிகாரிகளுக்கு அறிவித்தார். (ண—032)

## தேவை

"பாணந்துறை ஹேனமுல்லை காலி வீதியில் அமைந்துள்ள ஜிஸ்திய்யா பள்ளிவாசலுக்கு தகுதிவாய்ந்த பேஷ் இமாம் உடனடியாக தேவை. ஹாபிஸ்களுக்கும் உலமாக்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும். சாப்பாடு— தங்குமிட வசதியுடன் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்பிக்கவும்

டிரஸ்டி
114, காலி வீதி
ஹேனமுல்லை,
பாணந்துறை.

## மகா கும்பாபிஷேகம்

கொழும்பு ஜூலை 8

கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் மகா கும்பாபிஷேக விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 11—45 மணிக்கு நடைபெறும்—

(த-ய)

## 31ம் நாள்
## (12—07—89)
## நினைவஞ்சலி



மறைவு 12—06—1989
திருமதி
சொர்ணம் அமிர்தலிங்கம்

அன்புள்ள அன்னையாய்
ஆண்டவனிலும் மேலாய்
பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் [illegible]
பிரகாசித்து விட்டு
பிரிந்ததென்ன எம்மைவிட்டு
அல்லலுறும் வேளையில்
ஆறுதல் வழங்கி
அக மகிழ வைத்த தெய்வமே — உன
அழகிய உருவை அனலுக்கு
இரையாக்கி
ஆருத் துயரில் அழுகின்றோம்
ஆரோ ஆறுதல் சொல்வர்

உங்கள் பிரிவால் வாடும்,
கணவன்— மகன்மார்கள்—
மகள்மார்கள்— மருமகன்
மார்கள்— மருமகன்மார்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஏ செல்வராஜ்—
15 1/22 ஐம்புட்டா வீதி—
கொழும்பு—13.

ஏ பத்மநாதன்,
87, கெனல் வீதி,
வட்டக்களி
சிலாபம்.

வி இ 019955

நிலை உள்ள இடத்தில் இந்த போக்தல் அதிகமாக ஆடும்.

இவை யாவும் மனித மனத்தின் நம்பிக்கையைப் பொறுத்துப் பலன் அளிக்கும். விஞ்ஞான ரீதியாக இவற்றிற்கு எந்த விதமான காரண காரிய விளக்கங்கள் கொடுப்பதற்கில்லை.

பல்லாண்டுக் காலமாக இவ்வித நம்பிக்கைகள் நம் நாட்டில் மட்டுமல்லாது. மேலை நாடுகளிலும் இருந்து வருகின்றன.

வைத்தியரை முழு மனதோடு, நம்பினல் தான் அவர் கொடுக்கும் மருந்து நோயைக் கட்டுப்படுத்தும். நம்பிக்கையில்லாமல் போனல் எப்படிப்பட்ட உயர்தர மருந்தும் பலனளிக்காது.

நம்பிக்கைகள் ஆருடம், சகுனம், ஜோசியம் இவை ஒவ்வொருவருடைய தனிப்பட்ட மன இயல்பு, இவை ஏன் நடைமுறை வாழ்க்கையில் ஒன்றிப் போய் விட்டன என்று காரணம் காட்டி விளக்குவது கடினம்.

ஆனல் குறிப்பாக, சில இடங்களில் கிணறுகள் வெட்டக் கூடாது என்று எல்லோராலும் நம்பப்படுகிறது. அவையாவன.

* பாறைகள் வெளியே தெரியும் நிலப் பகுதி.
* மேட்டுப் பாங்கான பூமி.
* மண் கண்டம் மிகவும் குறைவான பகுதி.
* சிதைந்த பாறைகள் அதாவது கிணற்று மண் என்று சொல்லப்படும் "நொரம்பு" குறைவாக உள்ள பகுதிகள்.

இப்பகுதிகளில் கிணறுகள் வெட்டுவது கூடாது.

விஞ்ஞான முறையில் நிலத்தடி நீர் நிலைகளைக் கண்டுபிடிக்கப் பல உத்திகள், கருவிகள் வந்துள்ளன.

(ம-சி)

## முதலாவது...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
இப்பணியில் உதவுவர்.

வடக்கு — கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சரும் மாகாண சபையின் அமைச்சர்களும் இந்த நடமாடும் அமைச்சுச் சேவையில் பங்குபற்றுவரென எதிர்பார்க்கப்படுகிறது.

திகாமடுல்ல மாவட்ட எம். பிமார்களும் இப்பணிகளில் உதவுவர். (ண—007)

## எகிப்தில் புதிய சட்டம்

போதை வஸ்துக்காரர்களுக்கு மரண தண்டனை விதிக்கும் புதிய சட்டமொன்று எகிப்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

புதிய சட்டத்தின் கீழ் எகிப்தில் நிறைவேற்றப்பட்ட முதலாவது மரண தண்டனை இதுவாகும்.

## பிறந்த நாள் வாழ்த்துக்கள்



Mohmed Ajmal Ghouse

கொழும்பு—12, மீரானியா வீதி 161/16 ஐச் சேர்ந்த நிஷ எம் கவுஸ்—பாத்தும்மா தஹ்ரான் தம்பதிகளின் செல்வப் புதல்வன் முகம்மட் அஜ்மல் தனது முதலாவது பிறந்ததினத்தை (05—07—88) தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடினர்.

இவரை அன்பு உம்மம்மா— அய்னுல் பெரியம்மா— ஜவாஹிர் மாமா— ஹுபாபா மாமி— நசார் நானா— அர்சட் நானா— அப்சல் நானா மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் கிருபையால் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துக் கூறியுள்ளார்கள்.

வி இ 019952

## பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பாதிமா ரிஸ்னு

கெலிஓயாவைச் சேர்ந்த ஹாரிஸ்—சபூரா பீபீ தம்பதிகளின் செல்வப் புதல்வி பாதிமா ரிஸ்னு தனது இரண்டாவது பிறந்த தினத்தை 21—06—89 இல் விமரிசையாகக் கொண்டாடினர்.

இவரை உம்மா— வாப்பா— வாப்பும்மா— சாச்சாமார்களான நிதம்— கலீல் சஹுதி— நவாஸ் கனடா— நஸார் ஹாபிழ்— சத்தார்— ராபி— ஜெலால்தீன் ஜப்பான்— மாமிமார்களான சாஹிரா, பௌசியா— ஹகீமா— ரா[illegible] மாமா— கலகெதர மடிகேயைச் சேர்ந்த உம்மம்மா— அப்பா— பெரியப்பாமார்— பெரியம்மா மார்— மாமாமார்களான ஹம்சா மாஸ்டர்— மின்ஹார் சஹுதி— மாமிமார்— தாத்தாமார்— மச்சான்மார்— நானமார் மற்றும் நண்பர்களான சமீரா— ரிஸ்னு— நபாஹிஸ்— ஹகம்— உற்றார் உறவினர் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தியுள்ளார்கள்.

வீ இ 019665

# ஜப்பானியப் பிரதமர் தப்பிப்பிழைப்பாரா?

## அவரை ஆட்டிப்படைக்கும் சின்ன வீட்டுப் பிரச்சினை

சில மாதங்களுக்கு முன்னர் இங்கிலாந்து அரசாங்கத்தையே வீழ்த்தப் போவதாக இந்திய மேனகை பமெலா போர்டஸ் தெரிவித்து உலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார் அல்லவா? அதே போன்ற ஒரு பரபரப்பை இப்போது ஜப்பானில் ஒரு கெய்ஷா அழகி கிளப்பியிருக்கிறார்.

ஆமாம்! ஜப்பானிய பிரதமர் சொசுக்கே யூனோ தன்னை "சின்ன வீடாக" வைத்திருந்தார் என்றும் இதற்காக ஐயாயிரம் பவுண்களை பரிசாக அளித்தார் என்றும் நாற்பது வயதான மிட்சுகோ நாகாநிஷி என்ற கெய்ஷா பெண் பகிரங்கமாக தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் தெரிவித்துள்ளாள்!

இதனால் ஜப்பானிய அரசியலில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இப் பிரச்சினையை எப்படி பிரதமர் யூனோ சமாளிக்கப் போகிறாரோ தெரியவில்லை. ஏனெனில் இதுவரை நாகாநிஷியின் கூற்றுக்கு யூனோ மறுப்புத் தெரிவிக்கவில்லை மௌனமாகவே இருந்து வருகிறார்.


மன்னர் மற்றும் பிரபுக்களின் முன்பாக ஆடுவதும் அவர்களுக்கு காம சுகம் அளிப்பதும் கணிகையரின் தொழில்.

ஜப்பானில் கெய்ஷா பெண்கள் இப்படியான விவகாரங்களுக்கு இப்போதும் உபயோகிக்கப்பட்டு வருகிறார்கள்.

ஜப்பானிய வழக்கப்படி கிமோனோ உடையில் காணப்படும் இவர்கள் மிக பக்குவமாகத் தமது வாடிக்கையாளர்களைக் கவனித்துக் கொள்வார்களாம்.

இவ்வாறான ஒரு கெய்ஷா பெண்ணிடம்தான் ஜப்பானிய பிரதமர் யூனோ மனதைப் பறி கொடுத்திருக்கிறார். இவரைத் தனது சின்ன வீடாக நான்கு வருடங்களுக்கு முன்புவரை வைத்திருந்தார்! ஜப்பானிய பிரதமர் யூனோவுக்கு இப்போது 66 வயதாகிறது. இவரது மனைவிக்கு 64 வயது. அறுபதிலும் யூனோவுக்கு ஆசை வந்திருக்கிறது!

கடந்த ஜூன் மாதம் 25 ஆம் திகதி நாகாநிஷி முதல் தடவையாக தொலைக்காட்சியில் பேட்டி அளித்தாள். இப்போது அலுவலகம் ஒன்றில் பணியாற்றி வரும் இவள் பௌத்த மடாலயம் ஒன்றிலிருந்து பேட்டியளித்தாள்.


பிரதமரின் ஆசை நாயகி நாகா நிஷி

யூனோவுக்கும் தனக்கும் இடையே நிலவி வந்த காதல் உறவை விரிவாகச் சொன்னாள்.

1985 ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த யூனோ தனக்குப் பணம் வழங்கிய காகித உறையைச் சாட்சியாகக் காட்டினாள். இந்த உறையில் நாடாளுமன்ற உறுப்பினர் யூனோ

"என்னுடன் மரியாதையாக அவர் நடந்து கொள்ளவில்லை. ஒரு கிழட்டுப் பெண்ணைத் தந்திருக்கிறீர்களே என்று என்னை முதன் முதலாக சந்தித்த போது விடுதியின் முகாமையாளரை யூனோ கடிந்து கொண்டார்" என்று கூறுகிறாள் நாகாநிஷி.

"யூனோ நற்பண்புகள் கொண்ட ஒரு மனிதரல்லர். காசு கொடுத்தால் பெண்கள் கிடைக்க மாட்டார்கள் என்று ஜப்பானிய பெண்களைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்தவர். முதல் நாள் சந்திப்பின் போது மாதம் ஆயிரத்து 350 டாலர் தருவதாக என்னிடம் சொன்னார்."

இப்படியெல்லாம் பிரதமர் யூனோ பற்றி கெய்ஷா பெண் நாகாநிஷி தகவல்களைத் தெரிவித்திருக்கிறாள்.

"யூனோ ஒரு தனிப்பட்ட மனிதரல்லர். அவர் பொதுச் சேவையில் ஈடுபட்டுள்ளவர். ஆகவே அவரைப் பற்றி மக்கள் தெரிந்து கொள்ள உரிமை கொண்டுள்ளார்கள்" என்று வாதிடுகிறாள் நாகாநிஷி.

ஒரு கெய்ஷா பெண் வாய் திறந்து ஆதாரங்களுடன் விஷயங்களை புட்டுப்புட்டு வைத்திருப்பதால் இவ் விவகாரம் ஆளும் லிபரல் டெமோகிரடிக் கட்சியைப் பெரிதும் பாதிக்கப் போவது என்னவோ உண்மை.


ஜப்பானிய பிரதமர் யூனோ

மேலும் யூனோவை பெரிதும் இவ்விஷயம் பாதிக்கப் போகிறது. தன்னை நோக்கி வீசப்பட்டுள்ள கூர்மை மிக்க கேள்விகளில் இருந்து யூனோ பிழைப்பாரா? அல்லது உண்மையை ஒப்புக் கொண்டு ஒதுங்கி விடுவாரா?

காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

ஜப்பானியப் பிரதமர்களுக்கு இது கஷ்ட காலம். லாக்ஹீட் விவகாரத்தினால் ஒருவர் பதவியிறங்கினார். முன்னாள் பிரதமர் பங்கு விவகாரத்தினால் வெளியேறினார். இந்த வரிசையில் இப்போது யூனோ!

(ம—032)

# அன்னை தெரேசா ஆற்றிய பணிகள்

## ரஷ்யர்களைக் கவர்ந்தன

கல்கத்தா ஜூலை 8

நோபல் பரிசு பெற்ற அன்னை தெரேசாவின் புகழ் சோவியத் யூனியனில் வெகு வேகமாகப் பரவி வருகிறது.

ஆர்மேனியாவில் பூமியதிர்ச்சி ஏற்பட்ட பின்னர் மூன்றாவது தடவையாக அன்னை தெரேசா அங்கு சென்றிருந்தார்.

சோவியத் ஜனாதிபதி மிகையில் கொர்பச்சேவின் பாரியார் திருமதி ரயீஸா கொர்பச்சேவ் அன்னை தெரேசாவிற்கு அனுப்பிய தந்தியொன்றில் "மாஸ்கோவில் அன்னை தெரேசா இருப்பது மனிதாபிமானக் கோட்பாடுகளுக்குத் துணை புரியும்" என்று கூறியிருப்பதோடு, அவருக்கு நல்லாசியும் கூறியிருக்கிறார்.

மாஸ்கோவில் அன்னை தெரேசாவின் கன்னியாஸ்திரிகள் புரிந்துவரும் மருத்துவமனையில், அவர்கள் பிரார்த்தனை செய்வதற்காக ஓர் விசேட ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. ஆர்மேனியாவில் அன்னை தெரேசாவின் ஆசிர்வாதத்தைப் பெறுவதற்காக இரவும் பகலும் மக்கள் வந்தவண்ணம் இருந்தனர்.

மாஸ்கோ மருத்துவமனையில் அன்னை தெரேசாவும் ஒரு டாக்டரும் ஒரு அகதியின் உயிரைக் காக்க முயன்றனர். இதுபற்றி டாக்டர் குறிப்பிடுகையில் "நான் அகதியின் உடலைக் காக்க முனைந்தேன். அன்னை தெரேசா அவரின் ஆன்மாவைக் காக்க முயன்றார்" என்றார்.

மாஸ்கோவில் மூவாயிரம் சதுர மீட்டரில் அமைக்கப்பட்ட


அன்னை தெரேசா

வெள்ளை விடுதி இல்லத்துக்கு அன்னை தெரேசாவின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

அன்னை தெரேசா ரஷ்யாவில் தங்கியிருந்தபோது ரோர்தியக் கத்தோலிக்க திருச்சபையின் தலைவரையும், ஆர்மேனியத் திருச்சபையின் தலைவரையும், இரு குடியரசுகளின் அரசாங்கத் தலைவர்களையும் சந்தித்தார். ஆர்மேனியத் திருச்சபையின் ஆயர், திருச் சபை விருதையும் அன்னைக்கு வழங்கினார்.

அன்னை தெரேசாவின் மூன்றாவது கருணை இல்லம் சோவியத் யூனியனில் அமைக்கப்படவிருக்கிறது. இது ஜோர்ஜியத் தலைநகரான திபிலிசியில் இருக்கும்.

அன்னை தெரேசாவின் கருணை இல்லத்தைச் சேர்ந்த 13 சகோதரிகள் இப்போது சோவியத் யூனியனில் இருக்கிறார்கள்.

(மூ—கி)

# மூன்றும் உலக நாடுகளில் ஆட்சி நிர்வாகக் கெடுபிடி!

## புனித ஹஜ்

பெருநாள் வாழ்த்துக்கள்!

எமது அன்பர்கள்— ஆதரவாளர்கள்—
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது இதயம் கனிந்த
ஹஜ் பெருநாள் வாழ்த்துக்கள்!

## செலக்ஷன் ஜுவலர்ஸ்

மாவனல்லையில்.....

மங்கையர் மனதைக் கொள்ளை கொள்ளும் மாற்றுக் குன்றாத தங்க நகைகளுக்கும்— காலத்தால் அழியாத கண் கவர் டிசைன்களுக்கும்— அசல் 22 கரட் தங்க நகைகள் செய்து கொள்ள ஓரே தலை சிறந்த இடம்—

**செலக்ஷன் ஜுவலர்ஸ்**
(எம். எஸ். ஏ. மரிக்கார்)
19 ஏ— சென்றல் மார்கட்—
மாவனல்லை.


நாடாளுமன்ற உறுப்பினர் யூனோ என்று பொறிக்கப்பட்டிருந்தது.

யூனோ — நாகாநிஷி விவகாரத்தை முதன் முதலாக "மய்னிச்சி" என்ற சஞ்சிகையே புட்டுப் புட்டு வைத்தது. இவ்விவகாரம் வெளியானதும் டோக்கியோவில் பிரதமர் யூனோவின் செல்வாக்கு 30 சதவீதமாகக் குறைந்தது.

நாகாநிஷி தொலைக்காட்சியில் தோன்றி விஷயங்களை சொந்தமாகவே எடுத்துச் சொன்னதும் ஜப்பானியர்களுக்கு வெறுத்துப் போய் விட்டது. ஆமாம், டோக்கியோவில் இவரது செல்வாக்கு இப்போது பதினைந்து சதவீதம் தான்!

"எனக்கும் பிரதமருக்கும் இடையே நிலவிய காதல் உறவை எடுத்துரைத்ததால் அவரும் அவரது மனைவியும் கலங்கிப் போயிருப்பார்கள் என்பதையும் அவரது ஆதரவாளர்கள் வேதனையடைந்திருப்பார்கள் என்பதையும் நான் அறிவேன். ஆனால் நாட்டின் நலனும் பெண்களின் நலனும் யூனோவின் நலன்களை விடப் பெரிது எனக் கருதியதாலேயே இவ் விடயங்களை வெளியிட நேர்ந்தது" என்று தனது செய்கைக்கு காரணம் காட்டியிருக்கிறாள் நாகாநிஷி.

"யூனோ போதியளவு பணம் தராததினால்தான் கோபத்தில் இவற்றையெல்லாம் சொல்கிறேன் என்று நினைத்து விட வேண்டாம். பலமற்றவர்களிடம் அனுதாபமின்றி நடந்து கொள்ளும் ஒருவர் அரசியலில் இருப்பதால் பலன் இல்லை என்று எண்ணியதால் தான் இவற்றைச் சொல்கிறேன்" என்கிறாள் நாகாநிஷி.

ஆட்சி அதிகாரம் பற்றி பகுத்தாராயும் போது பெரும்பாலான நாடுகளில் அது வரையறுத்துக் கூற முடியாத சமூக கட்டமைப்பின் கீழ் நிறுவப்பட்டிருப்பதைக் காணலாம்.

இது எதேச்சாதிகார ஆட்சி முறையை ஊக்குவிக்கிறது. இராணுவத்தின் கரத்தைப் பலப்படுத்துகிறது.

முதலாளித்துவ, சோஷலிஸ சமுதாயங்களின் அபிவிருத்தி தொடர்பான நியதிகள் மூன்றாம் உலக நாடுகளான வளர்முக நாடுகளுக்கு உடன்பாடு உடையதாக இல்லை. இதற்குக் காரணம் என்ன?

அவற்றின் சமூக, பொருளாதார அபிவிருத்தி கீழ் மட்டத்தில் இருப்பது பற்றிக் கூறப்படுகிறது. ஆகவே அந்த சமுதாயங்களை எடை போடும் போது வளர்ச்சியுற்ற நாடுகளை அளவுகோலாக வைத்துக் கணிக்க முடியாது.

இந்த நாடுகள் பின்தங்கியுள்ளன. அத்துடன் அவற்றில் வாழும் தேசிய இனங்கள், மதப் பிரிவுகள், கோத்திரங்கள் முதலியவற்றுக்கு இடையில் நிலவும் முரண்பாடுகள் காரணமாக அரசியல் அரங்கிற்கு இராணுவத்தின் பிரவேசிக்க வழி திறந்துவிடப்படுகிறது.

இந்நாடுகளில் இறுக்கமாக செயற்படக் கூடிய ஒரே ஸ்தாபனம் இராணுவ அமைப்பு என்பது தெட்டத் தெளிவு.

கிழக்கு நாடுகளில் நாடாளு

இயங்க முடியாமல் இருப்பதையும் காண்கிறோம். ஆகவே இந்த ஆட்சி முறை வங்குரோத்து அடையும் போது வெகுஜனங்களின் எதிர்ப்பு கிளம்புகிறது.

ஒரு புறத்தில் ஆளும் கோஷ்டி அபகீர்த்திக்கு ஆளாகிறது. மறு புறத்தில் "சிவிலியன் சக்திகள் தேவையான சீர்திருத்தங்களைக் கொண்டுவர முடியாமல் இருக்கின்றன. அபகீர்த்தி அடைந்த ஆட்சி முறையை இராணுவத்தால் மாத்திரம்தான் தூக்கி எறிய முடியும். இந்த இராணுவம் வர்த்தக, தொழில் துறை பூர்ஷுவா வர்க்கத்துடன் கண்ணுக்குப் புலப்படாத அநேக தொடர்புகளை வைத்துள்ளது.

இராணுவ அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குக் காரணம், நாட்டுக்கு நாடு வித்தியாசமானதாக உள்ளது. துருக்கி, பராகுவே போன்ற நாடுகளை எடுத்துக் கொண்டால் அங்கே இராணுவம் ஒரே நோக்கத்திற்காக அதிகாரத்தைக் கைப்பற்றியதாகச் சரித்திரம் இல்லை.

ஆகவேதான் இராணுவம் அதிகாரத்தைக் கைப்பற்றும்

சாங்கங்களின் வேறுபாடுகளைக் காண்கிறோம். இவற்றில் சற்று முன்னேற்றம் அடைந்த நாடுகளில் இடதுசாரி சக்திகளின் அச்சுறுத்தல் வரும் போது இராணுவ ஆட்சி நிறுவப்படுகிறது.

முதலாளித்துவ அடிப்படையில் வளர்ச்சியைத் தொடர்ந்து ஏற்படுத்துவதை இவை நோக்கமாக வைத்துள்ளன.

மறு புறத்தில் சில மூன்றாம் உலக நாடுகளில் அவ்வாறான அச்சுறுத்தல்கள் இல்லாத போதிலும் இராணுவம் அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளது. இதற்குப் பின்னால் உள்ள நோக்கம் என்ன?

அரசாங்கத்தின் சிவில் நிர்வாகம் திறமையாகச் செயற்படாமல் இருக்கலாம் அல்லது பொது ஜன ஆதரவை அது பெறாதது காரணம் ஆக இருக்கலாம்.

பொதுவாக இராணுவச் சதி மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றும் போது நிறுவப்படும் அரசாங்கம் நிலபிரபுத்துவ எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வுகளைக் கொண்டு இருக்கலாம்.

எகிப்து (1952). சிரியா, எதி

இடப்போக்கை ... லாம்.

எங்கே இராணுவ ஆட்சி நீண்ட காலத்திற்குத் தொடர்கிறதோ, எங்கே அது ஆட்சி முறையில் இறங்குகிறதோ, அங்கே பொருளாதாரப் பிரச்சினைகள் தோன்றியுள்ளன.

பண வீக்கம் அதிகரிப்பதில் இருந்து இதனைக் காணலாம். இயற்கையாகவே இராணுவத்திற்கு பெரும் தொகை நிதி ஒதுக்கப்படுகிறது.

இராணுவம் எப்படி? எப்போது அதிகாரத்தைக் கைப்பற்றுகிறது? சில நாடுகளில் சொந்த விருப்பத்தின் பேரில் இராணுவ ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுகிறது.

ஆனால் அதிகாரத்தை ஒப்படைக்கும் போது அவற்றிற்கு நஷ்டம் ஏற்படாமல் ஒப்படைப்பதைக் காண்கிறோம். உதாரணம்: துருக்கி, பிரேஸில், தாய்லாந்து.

மறு புறத்தில் இராணுவ ஆட்சி தூக்கி எறியப்படுகிறது. இதனை ஆபிரிக்க நாடுகளில் காண்கிறோம்.

(மஹ)

# முஸ்லிம் காங்கிரஸ்

## விவாதம்: ஒரு திருத்தம்

சிந்தாமணி 18-6-1989 இதழில் "முஸாபிர் பார்வையில்" பகுதியில் "முஸ்லிம் காங்கிரஸ் மீது அதிருப்தி மேலும் படர்கிறதா?" என்னும் தலைப்பில் ஒரு அரசியல் விமர்சனம் வெளியாகி இருந்தது.

அதற்குப் பதில் தரும் விதத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜனாப் எம் ஜே ஏ ஸஹீத் ஒரு கட்டுரையை எமக்கு அனுப்பி வைத்தார்,

அவருடைய கட்டுரையை "முஸாபிர் பார்வையில் முஸ்லிம் காங்கிரஸ் — விமர்சனம் ஒரு தலைப்பட்சம்" என்னும் தலைப்பில் கடந்த வாரம் சிந்தாமணியில் அப்படியே பிரசுரித்திருந்தோம்.

ஆயினும் அச்சுப்பிழை காரணமாக அவருடைய கட்டுரையின் கடைசிப் பந்தியில் சில தவறுகள் நேர்ந்து விட்டன, ஒரு வரி முற்றாக விடப்பட்டு விட்டது, வேறு ஒரு வரி இரு தடவை இடம் பெற்று விட்டது, அதையிட்டு வருந்துகிறோம்,

ஜனாப் ஸஹீத் எழுதிய கட்டுரையின் கடைசிப் பந்தி இவ்வாறு அமைந்திருந்தது,

இறுதியாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவரிடம் இஸ்லாமிய நடைமுறைகள் இல்லை என்று முஸாபிர் குறிப்பிட்டதைப்பற்றி சொல்ல வேண்டும். முஸ்லிம் காங்கிரஸ் பற்றித் தவறான தகவல்களை வைத்துப் பாரபட்சமான முறையில் ஒருதலைப்பட்சமாக விமர்சனம் செய்துள்ள முஸாபிர், தலைவர் தொடர்பில் எந்த அணுகுமுறையைக் கையாண்டிருப்பார் என்பதை முஸ்லிம் காங்கிரஸ் அன்பர்கள், ஆதரவாளர்கள், அபிமானிகள், மற்றும் சிந்தாமணி வாசகர்களின் தீர்ப்புக்கு விடுகிறோம்,

— இவ்வாறு ஜனாப் எம் ஜே ஏ ஸஹீத் எழுதியிருந்தார், (ம)


## தமிழ் நூல்கள்

இலங்கையிலும் வெளிநாட்டிலும்
அச்சிடப்பட்ட தமிழ் நூல்கள்
தொடர்பான
உங்கள் தேவைகளுக்கு
விஜயம் செய்யுங்கள்



**எம். டி. குணசேன**
**அன்ட் கம். லிமிட்,**
217, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு — 11.
தொலைபேசி- 23981—84

## வரும் திருநாளில் நவ நாகரீக ஆடையில் அழகுடன் மிளிர்க!



ஹமீடியாஸ், பெருநாளுக்காகப
பெருமளவில் வழங்கும்
மகளிருக்கான விசேடதர
'சல்வார் கமீஸ்'. அத்துடன்.
சமீபத்திய 'ஸ்ரைல்' கொண்ட
ஆடவருக்கான "(B) பகி"
(T) றவுசர்களும் சேட்டுக்களும்
எனவே

ஒரு வரவுடன் பலன்பெற

நாடுங்கள்:

**ஹமீடியாஸ் ஸ்ரோர்ஸ்**
58 காலி வீதி. கொழும்பு 6
தொலைபேசி 585609

பலரசத் திரட்டு

## ஜனாதிபதி விஜயம் தந்த அதிர்ச்சி

அமெரிக்க இராணுவ வீரர் தினத்தில் கலந்து கொண்ட ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும் அவரது பாரியாரும் இது தொடர்பான வைபவம் நடைபெற்ற இராணுவ மயானத்தில் இருந்து ஒரு மைலுக்கு அப்பால் நங்கூரமிட்டிருந்த ஹெலிகொப்டர் தாங்கிக் கப்பலுக்கு விஜயம் செய்ய முடிவு செய்தனர்.

இவரது இத் திடீர் முடிவு மேற்படி வைபவத்தில் கலந்து கொண்ட அக் கப்பல் காப்டனுக்குக் கூட தெரியாது. ஜனாதிபதியையும், பாரியாரையும் சுமந்து சென்ற ஹெலிகொப்டர் கோடல் கெனல் என்ற மேற்படி ஹெலிகொப்டர் தாங்கிக் கப்பலில் இறங்கியது.

இருவரும் இறங்கி கப்பலினுள் நுழைந்தபோது ஒரு துவாலையை மட்டும் இடையில் அணிந்து கொண்டு சிவத்துப் போன கண்களுடன் கடற்படை வீரர் ஒருவர் இவர்கள் முன்னிலையில் முட்டி மோதிக் கொள்ளாத குறையாக எதிர்ப்பட்டார்.

யாரோ ஒரு பெண்ணுடன் உல்லாசமாக தன் கெபினில் இருந்திருப்பார் போலிருக்கிறது. ஜனாதிபதியையும் பாரியாரையும் எதிர்கொண்டதும் அவ் வீரருக்கு உடல் விதிர்த்துவிட்டது.

தமது ஜனாதிபதி கப்பலுக்கு திடீர் விஜயம் மேற்கொண்டுள்ள விஷயம் காட்டுத் தீ போல் பரவ வீரர்களும் அதிகாரிகளும் உஷாரடைந்தனர்.

இவ்வளவும் நடந்து முடிந்த பின்னர்தான் கப்பல் காப்டன் பதறியபடி கப்பலுக்கு வந்து சேர்ந்தார்.

(த-032)

## கஸ்தூரி மானுக்கு நறுமணமே காலன்

கஸ்தூரி மனதை அள்ளும் சுகந்தம் கொண்டது. கஸ்தூரி மான்களிடமே இந்த நறுமணம் கமழும் எண்ணெய் உண்டு.

ஒரு ஆண் கஸ்தூரி மானிடம் முப்பது கிராம் கஸ்தூரி காணப்படுகிறது. பெண் மானைக் கவர்ந்து காதல் புரிய அழைப்பு விடுக்கும் வகையிலேயே கஸ்தூரி சுகந்தத்தைக் காற்றில் பரப்புகிறது ஆண் கஸ்தூரி மான்.

மன்னர்களும் பிரபுகளும் கஸ்தூரி சுகந்தத்தை மிகவும் விரும்பி உபயோகித்து வந்துள்ளனர். ஜப்பானியர்களுக்கு கஸ்தூரி என்றால் கொள்ளை ஆசை.

இதனால் வருடாந்தம் நாலாயிரம் [illegible] இமாலயப் பிரதேசத்தில் வேட்டையாடப்பட்டு வருகின்றன ஆமாம் இந்திய நேபாள மலைப் பிரதேசங்களிலும் காஷ்மீர் வடக்கு பாகிஸ்தான் சிக்கிம் மற்றும் பூட்டான் ஆகிய பனிமலைப் பிரதேசங்களிலும்தான் கஸ்தூரி மான்கள் காணப்படுகின்றன இந்தக் கொஞ்சம் கஸ்தூரியைப் பெற மான்களையே கொன்று விடுகிறார்கள் வேட்டைக்காரர்கள். ஏனெனில் கஸ்தூரிக்கு பெரும் விலை கொடுக்க செல்வந்தர்கள் தயார் இதனால் இந்நிலை தொடர்ந்தால் கஸ்தூரி மான் காணக் கிடைக்காமல் அழிந்து போய்விடும் என்கிறார்கள் இயற்கை வள நிபுணர்கள். தங்க முட்டையிடும் வாத்தைக் கொலை செய்த கதைதான்.

(த-032)

### பசையால் வந்த வினை

மேற்கு ஜெர்மன் வீதியொன்றில் அதிவேகமாக வாகனங்கள் விரைந்து சென்று கொண்டிருந்த போது பசை டின்களை ஏற்றிச் சென்ற லொறி ஒன்றில் இருந்து பெரும் பசை டின் ஒன்று உருண்டு தெருவில் விழுந்த பசையை தெரு வெல்லாம் கவிழ்த்து விட்டது.

பசையில் சிக்கிய வாகனங்கள் நகர முடியாமல் அப்படியே நிற்க [illegible]

## ஒரு ஜனாதிபதியின் காதல் மாளிகை



பெண்களைச் சுவைத்த இன்பந் காரணமதில் தணியாத தாகம் கொண்டவரும், காமவெறி கொண்ட அடங்காப் பிடாரியான பெண்ணொருத்தியும் இப்போது ஆர்ஜன்டீனாவின் அரசு கட்டிலில் ஏறியிருக்கின்றனர். ஒரு ஜனாதிபதியின் காதல் மாளிகை அங்கு அனைவரையும் கவர்ந்து வருகிறது.

ஆர்ஜன்டீனாவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவாகியிருப்பவர் 58 வயதான கார்லோ மெனெம். இவர் பகிரங்கமாகவே தான் ஒரு பெண்ணிடம் திருப்தியடையாத ஸ்திரிலோலன் என்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார், இந்த ஒரு பழக்கத்தை விட மற்றப்படி நான் ஒரு சாதாரண மனிதன் தான் என்கிறார் இவர்.

இவர் மனைவி ஆர்ஜன்டீனாவின் செல்வந்த பண்ணைக் குடும்பம் ஒன்றைச் சேர்ந்தவர், 41 வயதான இவரது பெயர் சுலேமா, திமிர் பிடித்தவர், ஒய்யாரத் தோற்றம் கொண்ட இவர் ஆடம்பரமாக செலவிடுவதில் பெயர் பெற்றவர்.

தனது அங்க அமைப்புகள் ஓரளவு தளர்ச்சியடைந்து விட்டன என்பதை ஒருமுறை இவர் உணர்ந்து கொண்டதும் பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை செய்து கொண்டார்.

"டினஸ்டி" தொலைக் காட்சித் தொடரில் தோன்றும் லிண்டா ஈவான்சைப் போல தோற்றம் அளிக்க வேண்டும் என்பதுதான் டாக்டர்களிடம் இவர் விடுத்த வேண்டுகோள்.

டாக்டர்கள் சுலேமாவின் தளர்ந்த மார்பகங்களை நிமிர்த்தி குத்திடச் செய்தனர், சிகையும் முக அமைப்பும் மாற்றப்பட்டது. சிகிச்சையின் பின்னர் லிண்டாவைப் போலவே சுலேமாவும் கவர்ச்சிக் கன்னியானார்.

இவரை ஒதுக்கித் தள்ளிய கணவரும் இந்தக் கவர்ச்சியில் மயங்கி இவரை மீண்டும் தன்னிடம் சேர்த்துக் கொண்டார்.

பெண்களிடம் தீராத மோகம் கொண்ட கார்லோசை தன் கட்டுப் பாட்டில் மீண்டும் வைத்துக் கொள்ள இவரால் முடிந்தது என்றால், சுலேமாவின் சாகஸங்களை என்னவென்று தான் வர்ணிப்பது!

ஏனெனில் தனது மலர் விட்டு மலர் தாவும் குணத்தை சுலேமா குறை கூறி நச்சரித்து வந்ததால் எக்கச்சக்கமாக எரிச்சலடைந்த கார்லோ ஒரு தடவை சுலேமாவை மனோவியாதி கொண்டவர்களுக்கான நிலையத்தில் அடைத்து வைத்திருந்தார்.

சுலேமா சுதாரித்துக் கொண்டதால், ஆர்ஜன்டீனாவில் தமது தேனிக்கை வாழ்க்கையைக் கொஞ்சமும் குறைக்காமல் கோலோச்சி வருகிறார்கள்.

சுலேமா ஏழைகளிடம் பணத்தை சமயத்தில் வாரியிறைக்கவும் செய்வார், அதே சமயம் ஆடம்பர செலவுகளைக் குறைத்துக் கொள்வதுமில்லை.

ஆர்ஜன்டீனாவின் தலைநகரான புவனஸ் அயர்சில் உள்ள ஆடம்பர விற்பனை நிலையமான "ஹரோட்ஸ்"சில் வாரத்தில் இரண்டு தடவை இவர் ஷாப்பிங் செய்கிறார்.

இந்த இரண்டு தினங்களும் ஹரோட்ஸ் விற்பனை நிலையம் பொது மக்களுக்காக மூடப்பட்டிருக்கும்!


கணவர் கார்லோசின் வெற்றிக் கெல்லாம் இவர்தான் சூத்திரதாரி என்கிறார்கள் மக்கள். ஏறக்குறைய இவர் ஆர்ஜன்டீனாவின் முன்னாள் சர்வாதிகாரி ஜுவானின் மனைவி எவா பெரோனின் மனைவியைப் போலவே திரை மறைவில் நாட்டை ஆட்டிப் படைக்கப் போகிறார் என்கிறார்கள் அரசியல் அவதானிகள்.

ஆர்ஜன்டீனியர்களுக்கு நான் ஒரு முன் மாதிரி, அவர்கள் என் வழியில் முன்னேற்றம் காண்பார்கள் என்கிறார் சுலேமா, எந்த வழியிலோ?

ஆர்ஜன்டீனாவின் ஜனாதிபதி ஒரு கார் மோகம் கொண்டவர், படுக்கையில் வெறும் பிஜாமாவுடன் படுத்திருந்தபடியே முக்கிய முடிவுகளை எடுக்கிறார், கழுத்து வரை நீண்ட தலை முடியையும் கன்னங்களில் வழியும் சைட் பேர்ன்ஸ்களையும் கொண்ட இந்த வித்தியாசமான ஜனாதிபதி.

இவ்வாறு வேறு நாடுகளில் வாழ்க்கை நடத்தினால் அவர்கள் நாட்டின் தலைவர்களாக வருவதைக் கனவு கூட காண முடியாது. ஆர்ஜன்டீனியர்கள் இதைப் பற்றியெல்லாம் கவலைப் படாமல் தலைமைப் பதவியை கார்லோஸ் – சுலேமா ஜோடியிடம் தூக்கிக் கொடுத்து விட்டார்கள்.

(ம-032)



### தரம் குறைந்த கருத்தடை சாதனங்கள்

தாய்லாந்தில் விற்பனைக்கு விடப்படும் உள்நாட்டு மற்றும் [illegible] படுத்தப்பட்ட போது சுமார் ஐம்பது சதவீதமான மேலுறை [illegible]

## உல்லாசப் பயணிகளின் சொர்க்கபுரி அசுத்தமாகிறது

தாய்லாந்தின் உலகப் புகழ் பெற்ற கடற்கரை நகரமே பட்டாயா. இந் நாட்டின் தலைநகரான பாங்கொக்கில் இருந்து இரண்டு மணித்தியாலங்கள் பயணம் செய்தால் பட்டாயா நகரை அடையலாம்.

இங்கு இன்பம் கொள்ளையோ [illegible]

அலைகளைப் போல உடையணிந்த 94 ஆயிரமாக இருந்த பயணிகள் யாக விளங்கிய பட்டாயா கடற் [illegible]

நில் வேகமாக வாகனங்கள் விரைந்து சென்று கொண்டிருந்த போது பசை டின்களை ஏற்றிச் சென்ற லொறி ஒன்றில் இருந்து பெரும் பசை டின் ஒன்று உருண்டு தெருவில் விழுந்து பசையை தெருவெல்லாம் கவிழ்த்து விட்டது.

பசையில் சிக்கிய வாகனங்கள் நகர முடியாமல் அப்படியே நிற்க போக்குவரத்து ஸ்தம்பித்தே விட்டது. பின்னர் தீயணைப்பு படையினர் வரவழைக்கப்பட்டனர்.

ஆனாலும் பசை அசைந்து கொடுக்கவில்லை. பின்னர் பல மணித்தியாலங்களாக வெந்நீரால் தெருவைக் குளிப்பாட்டிய பின்னரே பசை அகன்று போக்குவரத்தும் ஆரம்பமானது!

(த-032)

## தரம் குறைந்த கருத்தடை சாதனங்கள்

தாய்லாந்தில் விற்பனைக்கு விடப்படும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆண் மேலுறைகள் அந்நாட்டின் தராதரத்துக்கு ஏற்றவையாக இல்லையாம்.

தாய்லாந்து கேளிக்கைகளுக்குப் பேர்போன நாடானதால் ஆண் மேலுறைகள் கட்டாயம் உபயோகிக்கப்பட வேண்டும் என்று அந்நாட்டு சுகாதார அமைச்சு வலியுறுத்தி வருகிறது.

ஆனால், இங்கு விற்பனைக்கு விடப்படும் ஆண் மேலுறைகள் சமீபத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது சுமார் ஐம்பது சதவீதமான மேலுறைகள் சரியான தராதரம் கொண்டவை அல்ல என்ற உண்மை தெரிய வந்தது.

இவை உஷ்ணத்துக்கு இளகி விடுவதாகவும், பழசானதும் பழுதடையக் கூடியவையாகவும் பூச்சிகளால் அரிக்கப்பட்டவையாகவும் பாவனைக்கு லாயக்கற்றவையாகவும் இருப்பதை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

(த-032)

## உல்லாசப் பயணிகளின் சொர்க்கபுரி அசுத்தமாகிறது

தாய்லாந்தின் உலகப் புகழ் பெற்ற கடற்கரை நகரமே பட்டாயா. இந் நாட்டின் தலைநகரமான பாங்கொக்கில் இருந்து இரண்டு மணித்தியாலங்கள் பயணம் செய்தால் பட்டாயா நகரை அடையலாம்.

இங்கு இன்பம் கொள்ளையோ கொள்ளை! ஆகவே வந்துசேரும் உல்லாசப் பயணிகளுக்கு எல்லையே இல்லை!

பட்டாயாவில் இரவு வாழ்க்கை வெகு ஜோர். மூலைக்கு மூலை மதுவும் மங்கையும் கொண்ட மதுபான சாலைகள். துகிலுரி நடனத்தை விதவிதமான வகைகளில் அறிமுகப்படுத்தும் இரவு விடுதிகள்.

அம்மண நடனங்கள். மஸாஜ் நிலையங்கள், விபசார விடுதிகள், ஆண்களைப் போல உடையணிந்து ஆடும் பெண்கள் அல்லது பெண்களைப் போலவே உடையணிந்து நடனமாடி மகிழ்விக்கும் ஆண்களைக் கொண்ட கேளிக்கை விடுதிகள்.

தவிர என்னென்ன இன்பங்களை விலை [illegible] முடியுமோ அத்தனையும் இங்கு கிடைக்கிறது. இனி பயணிகளுக்குக் கேட்கவா வேண்டும்.

1983 ஆம் ஆண்டு 5 லட்சத்து 94 ஆயிரமாக இருந்த பயணிகள் வருகை கடந்த வருடத்தில் 27 லட்சத்து 70 ஆயிரமாக அதிகரிக்காமலா இருக்கும்!

தாய்லாந்திலேயே பாங்கொக்குக்கு அடுத்ததாக பயணிகளை கவர்ந்திழுக்கும் இரண்டாவது பெரிய நகரமாக வளர்ந்து விட்டது இந்த பட்டாயா நகரம்.

மூலைக்கு மூலை ஹோட்டல்களும், விடுதிகளும், பார்களுமாக இருப்பதால் அழகான கடற்கரையாக விளங்கிய பட்டாயா கடற்கரை இன்று மிக அசுத்தம் அடைந்து விட்டது.

மலசல கழிவுகளும் நகரின் ஏனைய கழிவுகளும் கடலில் தொடர்ந்து கொட்டப்பட்டு வருவதால் இக் கடற்கரை மிகவும் அசுத்தம் அடைந்து மக்களின் குளியலுக்கு லாயக்கற்றதாகி வருகிறது.

இதனால் பலர் ஹோட்டல் நீச்சல்குளத்தில் மட்டும் குளித்து விட்டு சும்மா இருந்து விடுகிறார்கள்.

பட்டாயா நகரம் ஒரு காலத்தில் வெறும் மீன்பிடிக் கிராமமாக இருந்து வந்தது. 1960 ஆம் ஆண்டுகளின் போது, வியட்நாம் சண்டையில் அமெரிக்கா தீவிரமாக இறங்கியிருந்த காலத்தில், விடுமுறையைக் கழிக்க பாங்கொக் வரும் அமெரிக்க வீரர்கள் அமைதியான கடற்கரை பிரதேசமான பட்டாயாவில் நேரத்தைச் செலவிட்டு வந்தனர்.

பட்டாயா அவர்களுக்கு மிகப் பிடித்துப் போய்விட்டது. அமெரிக்கர்கள் அதுவும் வியட்நாம் காடுகளில் போரிடும் அமெரிக்க வீரர்கள் ஓரிடம் சென்றால் அங்கு கேளிக்கை இல்லாமல் இருக்குமா?

இப்படித்தான் பட்டாயா உல்லாசப் பிரயாணிகளின் சொர்க்கமாக மாறத் தொடங்கியது. இவ்வருடம் பட்டாயாவுக்கு 30 லட்சம் பயணிகள் வருவார்கள் என எதிர்பார்க்கிறார்கள்.

(த-032)

## கொரில்லா இனத்தை அழியாது காக்க முயற்சி




கொரில்லா இனக் குரங்குகள் பயங்கரமான மிருகங்கள் என்றுதான் யாருமே நினைக்கிறார்கள். உண்மையில் இவை சாதுவான மிருகங்களே என்ற உண்மையை யாருமே நம்புவதில்லை. ஏனெனில் அவற்றின் தோற்றமும் உடல் பலமும் அப்படியானது. மேலும் கிங்கொங் போன்ற அசுர கொரில்லாக்கள் பற்றிய திரைப்படங்களும் கட்டுக்கதைகளும் இம் மிருகத்தைப் பற்றிய பல தப்பெண்ணங்களை ஏற்படுத்தியுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

எல்லா மிருகங்களைப் போல கொரில்லாக்களும் சீண்டினால் கோபம் கொள்ளும் தன்மை கொண்டவையே. மற்றப்படி இவை சாதுவானவை. வம்புக்குப் போகாதவை. மனிதர்களைக் கண்டால் விலகி அப்பால் சென்று விடவே இவை விரும்புகின்றன. இவை தனிமையாக வாழ்வதில்லை. கூட்டம் கூட்டமாகவே மலைப் பிரதேசங்களில் வாழ்கின்றன. கொரில்லாக்கள் அசுர பலம் கொண்டவை என்றாலும் மாமிச பட்சிணிகள் அல்ல. தாவரங்களை – கிழங்கு – வேர் – இலை தழை – மூங்கில்கள் ஆகியவற்றை விரும்பி உண்கின்றன. இயற்கையான சூழலில் அமைதியாக வாழ்வதை இவை மிகவும் விரும்புகின்றன.

கொரில்லாக்கள் அழிந்து வரும் மிருக இனம் என்று கணிக்கப்பட்டுள்ளது. இதனால் இவை வாழ்ந்து வரும் மலைப் பகுதிகளை பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களாக பல நாடுகள் பிரகடனம் செய்துள்ளன. இங்கிலாந்தில் கொரில்லாக்களை இயற்கை சூழ்நிலையில் வளர்த்து இனப்பெருக்கம் செய்ய உதவும் வகையில் ஒரு தனிப் பகுதியையே கொரில்லா காலனியாக ஆரம்பித்திருக்கிறார்கள்.

இங்கிலாந்தின் தெற்கே அமைந்துள்ள இக் காலனிதான் உலகிலேயே பெரிய கொரில்லா காலனியாகும். இங்கு 32 கொரில்லா குட்டிகள் பிறந்திருக்கின்றன. பெரும்பாலான குட்டிகளை தாய் கொரில்லாக்களே வளர்த்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

ஏனெனில் இயற்கைச் சூழ்நிலைக்குப் புறம்பான இடங்களில் கூடுவதையும் குட்டிகளை வளர்ப்பதையும் கொரில்லாக்கள் பெரும்பாலும் விரும்புவதில்லை.



கொரில்லாக்கள் விளையாடி மகிழ்வதற்காக அங்கு இரும்புக்கம்பிகளை வளைத்து அவற்றுக்கு ஏற்ற வகையில் அமைத்திருக்கிறார்கள். வித்தியாசமான சூழ்நிலையில் தாம் வைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை மறக்கடிக்கச் செய்யும் வகையில் பல இயற்கை வளம் சார்ந்த சங்கதிகளை அதிகாரிகள் இக்காலனியில் உற்பத்தி செய்யப் போகிறார்கள்.

(ம—032)

## ரஷ்யா-பிரிட்டன் விண்வெளி கூட்டு ஆராய்ச்சி

ரஷ்ய விண்வெளி வீரர்களுடன் கூட்டாக ஆராய்ச்சி வேலைகளில் பிரித்தானிய வீரர்களும் ஈடுபடவுள்ளனர்.

இங்கிலாந்தின் முதல் விண்வெளி வீரர் 1991 ஆம் ஆண்டின் மத்தியில் அண்ட வெளிக்கு முதன் முதலாக ரஷ்ய வீரர்களுடன் செல்வார் என்று விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவர்கள் "மிர்" விண்வெளி ஆராய்ச்சி கூடத்தில் ஆராய்ச்சிகளை நடத்துவர். இதற்கான ஒப்பந்தங்கள் ஜூன் மாதம் 29 ஆம் திகதி மாஸ்கோவில் கைச்சாத்தாகின—


(த)

# ராஜராஜ சோழன் காலத்து கல்வெட்டு தஞ்சாவூரில் மீட்பு

தஞ்சைப் பெருங் கோயிலைக் கட்டிய மாமன்னன் ராஜ ராஜ சோழன் காலத்து அபூர்வக் கல்வெட்டொன்று அண்மையில் தஞ்சை சீனிவாசபுரம் அருகே கண்டெடுக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு தொல்பொருளாய்வுத் துறையின் தொல் பொருள் அலுவலர் திரு சொ சாந்தலிங்கம் இத் தகவலைத் தெரிவித்தார்.

சீனிவாசபுரத்தில் தனியார் ஒருவர் வீடு கட்டுவதற்காகக் கடைக்கால் தோண்டும்போது கல் வெட்டுக்களோடு கூடிய



அழகிய தூண் ஒன்று கிடைத்தது. இதன் வரலாற்று முக்கியத்துவத்தை அறியாத அ[illegible] அந்தத் தூணைத் துண்டு [illegible]ண்டாக உடைத்தார். அதனைப் பார்த்த வரலாற்று உணர்வு கொண்ட ஒரு பத்திரிகை நிருபர் உடனே தஞ்சையிலுள்ள தொல் பொருள் ஆய்வுத் துறை அதிகாரி

தொல்பொருள் ஆய்வுத் துறை இயக்குநர் திரு நடன காசிநாதன் அக்கல்வெட்டுத் தூணை ராஜராஜன் அருங்காட்சியகத்திற்குக் கொண்டு சென்று காட்சியில் வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி கூறினார்.

இக் கல்வெட்டு தற்பொழுது ராஜராஜன் வரலாற்றுக் காட்சிக் கூடத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

இத்தூணில் மூன்று கல்வெட்டுக்கள் எழுதப்பட்டுள்ளன. மூன்று கல்வெட்டுக்களும் மாமன்னன் முதலாம் ராஜராஜனின் வெற்றிச் சிறப்பைப் புகழ்ந்துரைக்கின்றன.

பொதுவாக வடமொழி கல்வெட்டுகள் கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டிருக்கும்.

ஆனால் இத்தூணில் வடமொழியைத் தமிழ் எழுத்துக்களில் எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே, புதுமுறையில் உள்ள இக் கல்வெட்டு ராஜராஜனின் பெருமைக்கு மேலும் புகழைச் சேர்ப்பதாக அமைகிறது.

(ம—சி)



20 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச பாலே நடனக் கலைஞர்களின் ஆறுவது போட்டி பித்ஹோவின் மண்டபத்தில் நடைபெற்றது. 26 நாடுகளைச் சேர்ந்த 704 கலைஞர்கள் கலந்துகொண்டனர். கிரீஸ், ஜப்பான், செக்கொஸ்லோவாக்கியா, சீனா, மேற்கு ஜெர்மனி இத்தாலி, அமெரிக்காவைச் சேர்ந்த கலைஞர்களும் கலந்து கொண்டனர். (ம—சி)

## இளவரசருக்கு ஏற்பட்ட கவலை

மேற்கு ஜெர்மனிய இளவரசர் ஏர்னஸ்ட் ஆகஸ்ட் தனக்கு சொந்தமான பழம் பொருட்களை வெளிநாட்டில் விற்பனை செய்து பெரும் பணம் திரட்ட நினைத்திருந்தார்

இந்த ஆசையில் மண் அள்ளிப் போட்டுவிட்டது ஜெர்மனிய நீதிமன்றம் இப் பொருட்கள் நாட்டின் தேசிய சொத்து- இவை விற்பனை செய்யப்படுவதை அனுமதிக்க முடியாது என்று நீதிமன்றம் கண்டிப்பாக சொல்லிவிட்டது சொல்லிவிட்டது (த—032)

# நீதிமன்ற தீர்ப்பால் திரைக்கு வரும் திரைப்படம்

இயேசு கிறிஸ்துவை யூதர்கள் மீண்டும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்- ஆமாம் தீர்க்கு தரிசிக்கு சொந்த நாட்டில் மதிப்பில்லை என்று சொன்ன இயேசு கிறிஸ்துவுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் த லாஸ்ட் டெம்டேஷன் ஒப் கிறைஸ்ட் என்ற அமெரிக்க திரைப்படத்தை இஸ்ரவேலில் திரையிட அந்நாட்டின் மேல் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இப்படத்தை இஸ்ரவேலின் தணிக்கைச் சபை தடை செய்திருந்தது. கிறிஸ்தவர்களின் மனம் புண்படும் என்பதினாலேயே இப் படத்துக்கு தடை விதிக்கப்பட்டது.

ஆனால் இறக்குமதியாளர்கள் விடவில்லை நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்கள்.

வழக்கை விசாரித்த ஐந்து நீதியரசர்களைக் கொண்ட இஸ்ரவேலிய நீதிமன்றம் மக்களின் வெளிப்படுத்தும் அல்லது அறிந்து கொள்ளும் சுதந்திரத்தோடு ஒப்பிடும் போது கிறிஸ்தவர்களின் மனம் புண்படுவதை கணக்கில் எடுத்துக் கொள்ள முடியாது என்று தீர்ப்பு சொல்லி விட்டது.

(த—032)

# புத்தகங்களை பாதுகாக்க தொழிற்சாலை உருவாகிறது

உலகெங்கிலுமுள்ள நூல்நிலையங்கள் ஆண்டு தோறும் லட்சக்கணக்கான புத்தகங்களையும் பத்திரிகைகளையும் வாங்கிச் சேகரித்து வருகின்றன உலகின் கலாசாரப் பெருமை இந்த நூலகங்களிலுள்ள புத்தகங்களிலே புதைந்து கிடக்கின்றன என்று சொல்லலாம்.

ஆனால் பெரும்பாலான இந்தப் புத்தகங்கள் சரிவரப் பாதுகாக்கப்படாததால் அழிந்து வருவது மிகவும் வருத்தத்திற்குரிய விஷயமாகும்

பல்வேறு நூல்நிலையங்களில் லட்சக்கணக்கான புத்தகங்களும் அரிய ஆவணங்களும் ஏட்டுச் சுவடிகளும் காலப்போக்கிலே சிதைந்து உதிர்ந்து வருகின்றன. இதனால் அவற்றில் பொதிந்துள்ள செய்திகளும் நமக்குக் கிடைக்காமல் போகக் கூடும்.

காகிதத் தாள்களிலே எவ்வளவுக்கெவ்வளவு அமிலத்தன்மை அதிகமாக உள்ளதோ அவ்வளவு சீக்கிரத்தில் அத்தாள்கள் சிதைந்து பொடிப்பொடியாகி உதிர்ந்துவிடும்.

அமெரிக்கத் தலைநகரான வாஷிங்டனில் உள்ள "லைப்ரரி ஆஃப் காங்கிரஸ்" என்னும் அமெரிக்க நாடாளுமன்ற நூலகத்தில் உள்ள ஒரு கோடியே 40 லட்சம் புத்தகங்களில் தொட்டால் உதிர்ந்து விடக் கூடிய அளவுக்குப் பழமையாகிச் சிதையும் நிலையில் 30 லட்சம் புத்தகங்கள் உள்ளன.

இந்தப் புத்தகங்களைப் பாதுகாப்பதற்கு புதிய திட்டமொன்றை அந்த நூலகம் துவக்கியுள்ளது. புத்தகக் காகிதங்களில் உள்ள அமிலத் தன்மையை அகற்றும் ஆலை ஒன்றை அது நிறுவி வருகிறது. இந்த ஆலை 1991 ஆம் ஆண்டு இயங்கத் துவங்கும். இந்த ஆலை ஆண்டு தோறும் 10 லட்சம் புத்தகங்களின் அமிலத் தன்மையை நீக்கும் திறன் கொண்டதாகும். இதன் மூலம் புத்தகங்கள் சிதைந்து விடாமல் காக்க முடியும் (ம—சி)





அழகிய தூண் ஒன்று கிடைத்தது. இதன் வரலாற்று முக்கியத்துவத்தை அறியாத அவ அந்தத் தூணைத் துண்டு ...ண்டாக உடைத்தார். அதனைப் பார்த்த வரலாற்று உணர்வு கொண்ட ஒரு பத்திரிகை நிருபர் உடனே தஞ்சையிலுள்ள தொல்பொருள் ஆய்வுத் துறை அதிகாரிகளிடம் இத்தகவலைக் கூறினர்.

## யுத்த விமானம் தந்தவர் காலமானர்

இரண்டாம் உலகப் போரின் போது இங்கிலாந்து உபயோகித்த சிறிய ரக யுத்த விமானங்களை வடிவமைத்த ரொனல்ட் பிஷப் தனது 86 வயதில் காலமானர்.

இவர் வடிவமைத்த இவ் விமானம் இரண்டாம் உலகப் போரின் போது இங்கிலாந்துக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. மொஸ்கிடோ என அழைக்கப்பட்ட இவ் விமானங்கள் சண்டை விமானங்களாகவும், குண்டு வீச்சு விமானங்களாகவும், டோர்பிடோ விமானங்களாகவும் மட்டுமன்றி இரவு நேர யுத்த நடவடிக்கைகளுக்கும் வெள்ளைக்காரர்களால் பயன்படுத்தப்பட்டன.

ரொனல்டின் விமானம் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு மிகவும் பிடித்துப் போய்விடவே எட்டாயிரம் விமானங்களை உருவாக்கி தனது விமானப் படையில் சேர்த்துக் கொண்டது இங்கிலாந்து.

(த-032)

## இளவரசரின் ஆசையில் மண்

மேற்கு ஜெர்மனிய இளவரசர் ஏர்னஸ்ட் ஆகஸ்ட் தனக்கு சொந்தமான பழம் பொருட்களை வெளிநாட்டில் விற்பனை செய்து பெரும் பணம் திரட்ட நினைத்திருந்தார்.

இந்த ஆசையில் மண் அள்ளிப் போட்டுவிட்டது ஜெர்மனிய நீதிமன்றம். இப் பொருட்கள் நாட்டின் தேசிய சொத்து. இவை விற்பனை செய்யப்படுவதை அனுமதிக்க முடியாது என்று நீதிமன்றம் கண்டிப்பாக சொல்லிவிட்டதில் இளவரசருக்கு பெரும் வருத்தம்.

பல நூற்றுண்டு பழமையான இப் பொருட்களை பல கோடிகளுக்கு இவரால் விற்றிருக்க முடியும்.


(த-032)





புதிய

# ரெக்ஸோனு




விலை 4/60

இளமலர்கள் குளிர்த்தென்றல் பட்டு வளைந்தாடும் வேளை, அத்தென்றலினூடே தவழ்ந்திடும் இயற்கை சுகந்தம் பெற்ற ஒயில் ஒப் கேட் செறிந்த புதிய ரெக்ஸோனு இதோ வந்து விட்டது. மென்மையான புதிய ரெக்ஸோனுவின் செழுமையான நுரை மங்கையரின் அழகிய இளமைச் சருமத்தைப்பாது காத்து மேலும் அழகூட்டுகிறது.

## இளமைத் தோற்றம் கொண்ட சருமத்தின் இரகசியம்

ஒரு தரமுயர்ந்த லீவர் உற்பத்தி

TAL

# பாப்பரசர் மரணம் பற்றி புதிய தகவல்

## "இரவில் வந்த திருடன்" நூலில்

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பருக்கு முன் பாப்பரசராக விளங்கியவர் முதலாவது அருளப்பர் சின்னப்பர்.

இவர் பாப்பரசராக 1978ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டார். ஆனால் 33 நாட்களே பாப்பரசராக இவர் வீற்றிருந்தார்— திடீரென இறந்து விட்டார்.

இவரது மறைவின் பின்னர் மீண்டும் கூடிய கர்தினால் மார்கள் போலந்து கர்தினாலான கரோல் வொஜ்ட்யாலாவை புதிய பாப்பரசராகத் தேர்ந்தெடுத்தனர். இவரே இன்றைய பாப்பரசர்.

முதலாவது அருளப்பர் சின்னப்பர் எவ்வாறு இறந்தார்? என்பதில் சந்தேகங்கள் உண்டு.

மிகக் குறைந்த காலத்தில் இவர் இறந்ததும், வத்திக்கான் வட்டாரங்களில் இவரது மரணம் பற்றி பல வதந்திகள் கிசுகிசுக்கப்பட்டன. மக்களும் பல சந்தேகங்களைத் தெரிவிக்கத் தொடங்கினர்.

இவ்வதந்திகளில் ஒன்றுதான் பாப்பரசர், தனது கர்தினால்களில் ஒருவரால் விஷம் கொடுக்கப்பட்டு கொல்லப்பட்டிருக்க வேண்டும் என்பது.

ஒரு பாப்பரசர் கத்தோலிக்க மறையின் பிரகாரம் அதி உன்னத ஸ்தானத்தை வகிப்பவர். கோடிக்கணக்கான கத்தோலிக்கரின் ஆன்மீகத் தலைவர். இயேசு கிறிஸ்துவின் சீடர் புனித பீட்டரின் ஸ்தானத்தை வகிப்பவர் என்றும், பூவுலகில் இயேசு கிறிஸ்துவின் பிரதிநிதி என்றும் கத்தோலிக்கரால் கருதப்படுகிறவரே பாப்பரசர்.

இவ்வாறான ஒரு ஆன்மீகத் தலைவர் கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றும், கர்தினால்களில் ஒருவரே அவரைக் கொலை செய்திருக்கலாம் என்றும் வத்திக்கானிலும் வெளியிலும் கிசுகிசுக்கப்படுவது இழுக்கான விஷயம் அல்லவா?

இவ்விடயம் இன்றைய பாப்பரசரின் காதுகளை எட்டியபோது இவ்விடயம் பற்றி விசாரணை நடத்த வேண்டும் என அவர் நினைத்தார்.

ஆனால் மதத் தலைவர் ஒருவரின் மரணம் பற்றி விசாரணை செய்ய ஒரு விசாரணைக் குழுவை நியமிக்க முடியாது. அது வெட்கக்கேடான விஷயமாக மத நம்பிக்கைக்கு விரோதமான காரியமாக அமைந்து விடும். ஆகவே வேறு ஒரு வழியில் இவ்விடயம் பற்றி விசாரணை நடத்த முடிவு செய்யப்பட்டது.

ஒரு நூலாசிரியரை அழைத்து, வத்திக்கான் அதிகாரிகளை அவர் [illegible]



காலஞ்சென்ற பாப்பரசர்.

தற்கொலையாகத்தான் இருக்க வேண்டும் என்கிறார் நூலாசிரியர் கோர்ன்வெல்.

தான் பாப்பரசராகத் தெரிவு செய்யப்பட்டதை முதலாவது அருளப்பர் சின்னப்பரே விரும்பவில்லையாம். நோயாளியான அவருக்கு பாப்பரசர் என்ற புதிய

வலிப்பதாக பல [illegible] தமது உதவியாளர்களிடம் கூறி இருக்கிறார். ஆனால் இவரது உடல் நிலை குறித்து வத்திக்கான் அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுத்தார்களா என்பது பற்றி நூலாசிரியர் திருப்தி தெரிவிக்கவில்லை.

அதிகாரிகள் அசிரத்தையாக இருந்து விட்டார்களாம்! ஏனெனில் இவர் பாப்பரசராகத் தெரிவு செய்யப்பட்டதில் பலருக்குத் திருப்தியில்லை. பீட்டர் செல்லர்ஸின் (அமெரிக்க நகைச்சுவை நடிகர்) பாப்பரசர் என ஒரு மேற்றிராணியார் இவரைப் பற்றி ஒரு தடவை கேலியாகக் குறிப்பிட்டாராம்!

சம்பவம் நடைபெற்ற தினம், தனது அறையின் தரையில் விழுந்து அவர் மரணமடைந்திருந்தார். மூளைக்கான இரத்த நாளத்தில் அடைப்பு ஏற்பட்டதால் மரணம் சம்பவித்தது. பாப்பரசர் இறந்து போன விஷயம் அதிகாரிகளுக்கு தெரிய வந்ததும் அவர்கள் அதிர்ந்து போனார்கள்.

ஒரு பாப்பரசர் கோடிக்கணக்கான கத்தோலிக்கர்களின் மதத் தலைவர்.

புனிதம் நிறைந்தவர். இவ்வாறானவர் தரையில் வீழ்ந்து கிடந்தார் என்று சொல்ல முடியுமா?

களுக்கும் கை கால் மூக்கு வைக்கப்பட்டு உலாவ விடப்பட்டு விடும் என அஞ்சியதால் கதையே மாற்றப்பட்டது.

பாப்பரசர் படுக்கையிலேயே உயிரிழந்திருந்ததை முதன் முதலாகக் கண்டு அதை அறிவித்தவர் மக்கீ என்ற மேற்றிராணியார் என அறிவிக்கப்பட்டது.

இவ்வாறு பல ஆச்சரியம் மிக்க தகவல்களை நூலாசிரியர் தெரிவித்திருக்கிறார்.

ஆனால், பாப்பரசர்களில் மிகக் குறைந்த காலம் அப் பதவியை வகித்தவர் முதலாவது அருளப்பர் சின்னப்பர் அல்லர். 752 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் திகதி பாப்பரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டாம் ஸ்டீவன் இரண்டு நாட்களில் காலமானார். ஆகக் குறைந்த காலம் பாப்பரசராக இருந்தவர் அவர் தான்.

இதுவரை 264 பாப்பரசர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களில் அதிக காலம் பாப்பரசராக வீற்றிருந்தவர் ஒன்பதாவது பயஸ். 1846 ஆம் ஆண்டு பாப்பரசராக தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் 31 வருடங்கள் 236 நாட்கள் பாப்பரசராக வீற்றிருந்து 85 ஆவது வயதில் காலமானார்.



பாப்பரசர் மரணத்தில் சம்பந்தப்பட்ட பேராயர் மார்சின்கஸ் — கன்னியாஸ்திரி வின்ஸா — கர்த்தினால் [illegible] லொட் மற்றும் இன்றைய பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர்! (மு-கி)

பதவி பெரும் சுமையாகவே இருந்தது.

புதிய பொறுப்பைத் தன்னால் தாங்க முடியாது என்பதை அவர் நன்கு அறிந்திருந்தாராம், ஆனால் தனக்குக் கிட்டிய பதவியை வெளிப்படையாக உதறிவிட முடியாத நிலை.

ஆகவே, தினமும், தனக்கு சாவு வர வேண்டும் என பிரார்த்தனை செய்து வந்தாராம், அவர். இவ்வாறு, தனது மரணத்துக்கு தன்னை தயார்படுத்தி வந்த அதே சமயம், தனது நோய்க்கான மருந்துகளை உட்கொள்வதையும் அவர் நிறுத்தியிருக்க வேண்டுமென்கிறார் நூலாசிரியர் கோர்ன்வெல்.

தனக்கு மருத்துவம் பார்த்து வந்த டாக்டர்களையும் வேண்டுமென்றே தவிர்த்து வந்தாராம் [illegible]

இவ்வாறு கவலைப்பட்ட அதிகாரிகள் கீழே விழுந்த நிலையில் இறந்துவிட்ட பாப்பரசரைத் தூக்கி கட்டிலில் வளர்த்தியிருக்கிறார்கள். உறங்கிய நிலையிலேயே உயிர் பிரிந்தது என்பதை நிலைநாட்டவே இந்த முயற்சி.

பாப்பரசர் மரணமடைந்த செய்தி விடிந்த பின்னரே வெளியில் தெரிய வேண்டும் என்பது ஏற்பாடு. ஆனால். விஷயம் எதிர் பார்க்கப்பட்ட நேரத்துக்கு முன்னரே வெளியே வந்துவிட்டது. அதுவும் கூட புதிய பிரச்சினையைத் தோற்றுவித்துவிட்டது.


விடியற்காலை 5-30 மணிக்கு பாப்பரசருக்கு கோப்பி எடுத்துச் சென்ற கன்னியாஸ்திரி வின்ஸென்சா தான் பாப்பரசர் மரணமடைந்திருந்ததை முதன் முதலாகக் கண்டார். இவர் உடனடியாக அதிகாரிகளுக்கு விடயத்தை அறிவித் [illegible]

னார்.

மிக வயதான பாப்பரசராகக் கருதப்படுபவர், 0678 — 81 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பாப்பரசராக இருந்த புனித அகதோ. தனது 103 ஆம் வயதில் பாப்பரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் 106 ஆம் வயதில் காலமானார். ஆனால் ஆராய்ச்சியாளர்கள் இத் தகவலில் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

பதின்மூன்றாம் லியோ 1878 ஆம் ஆண்டில் இருந்து 1903 ஆம் ஆண்டு வரை பாப்பரசராக விளங்கி, தனது 93 ஆம் ஆண்டில் காலமானார்.

முதல் 37 பாப்பரசர்களுக்கும் பிரம்மச்சாரிகளாக இருக்க வேண்டிய கட்டாயம் அப்போது இருக்கவில்லை. 0514—23 ஆம் ஆண்டுகளின் போது பாப்பரச [illegible]



நிருபரின் பற்களை

புதிய பல் [illegible]ட்ட உதவும் [illegible] ப்யூட்டர்



# நிருபரின் பற்களை நொருக்கிய குண்டு

தியனமன் சதுக்கத்தில் ஜன நாயக உரிமைகளுக்காக சீன மாணவர்கள் ஆயிரக்கணக்கில் கூடி நின்று ஆர்ப்பாட்டம் நடத்தி வந்த போது சீன நிர்வாகம் இந்த ஆர்ப்பாட்டத்தை இரும்புகரம் கொண்டு நசுக்கியதல்லவா?

சீன இராணுவ பிரிவுகள் கொடூரமும் ஈவு இரக்கமின்றி மாணவர்களை மட்டுமின்றி போவோர் வருவோரையும் கொன்று குவித்தன.

இக் கோடூர சம்பவங்கள் நடைபெற்ற நேரத்தில் 31 வயதான தாய்வான் பத்திரிகை நிருபரும் அங்கு செய்தி சேகரிக்கச் சென்றிருந்தார். மாணவர்களுக்கும் இராணுவத்திற்கும் இடையே யுத்தம் மூண்டபோது இந்த பத்திரிகை நிருபர் பிரான்சிஸ் கோவையும் ஒரு குண்டு பதம் பார்த்தது.

பின் கழுத்து வழியாக உட்புகுந்த இக் குண்டு வாய் வழியாக பற்களை நொருக்கிக் கொண்டு வெளியேறியது. ஆனால் இவருக்கு மரணம் சம்பவிக்கவில்லை.

காரணம் தப்பினால் மரணம் என்ற நிலையில் இவர் தப்பிவிட்டார். ஆமாம், இக் குண்டு மட்டும் முள்ளந்தண்டில் பட்டிருக்குமானால் இவர் மரணமடைந்திருப்பார்.

வேகமாக குணமாகி வரும்

## புதிய பல் கட்ட உதவும் கம்ப்யூட்டர்

மேற்கு ஜெர்மனியில் மியுனிச் நகரில் உள்ள ஒரு நிறுவனம் சூரிச் பல்கலைக்கழக பேராசிரியர் மோர்புன் - பேராசிரியர் பிரண்டஸ்டினியின் ஒத்துழைப்புடன் பல் கட்டும் இயந்திரம் ஒன்றை அமைத்துள்ளார்.

கம்ப்யூட்டர் மூலம் இயங்கும் இந்த இயந்திரத்தின் மூலம் கட்ட வேண்டிய பல்லையும் புகைப்படம் எடுக்க முடிகிறது.

குறுகிய நேரத்தில் பல்லைக் கட்டி முடித்த விடவும் இதனால் வழியேற்படுகிறது.

இவர் புது பல் செட் ஒன்றை வேண்டுமானால் பொருத்திக் கொள்ள வேண்டிவரும். அநூவது தூலக்கு வந்தது பல் செட்டோடு போயிற்று!

(த-032)

ரின் மரணம் பற்றி விசாரணை செய்ய ஒரு விசாரணைக் குழுவை நியமிக்க முடியாது. அது வெட்கக்கேடான விஷயமாக மத நம்பிக்கைக்கு விரோதமான காரியமாக அமைந்து விடும். ஆகவே வேறு ஒரு வழியில் இவ்விடயம் பற்றி விசாரணை நடத்த முடிவு செய்யப்பட்டது.

ஒரு நூலாசிரியரை அழைத்து, வத்திக்கான் அதிகாரிகளை அவர் சந்திக்கச் செய்து உண்மைகளை வெளிக்கொணரச் செய்வது என்று முடிவு செய்யப்பட்டது.

இம்முடிவின் கீழ், பிரிட்டிஷ் நூலாசிரியரான ஜோன் கோர்ன்வெல் வத்திக்கானுக்கு அழைக்கப்பட்டார். வத்திக்கான் அதிகாரிகளை அவர் சந்தித்தார். பேட்டி கண்டார்.

பாப்பரசரின் மரணம் தொடர்பான பல பின்னணி உண்மைகளைத் தெரிந்து கொண்டார். அதன் பின் அவர் உருவாக்கிய புத்தகத்தின் பெயர் "ஏ திவ்ப் இன் த நைட்" (இரவில் வந்த திருடன்) என்பதாகும்.

இப்புத்தகத்தில் கோர்ன்வெல் பல உண்மைகளை வெளியிட்டுள்ளார். ஆனால் பாப்பரசர் கொலை செய்யப்பட்டார் என்ற சந்தேகம் ஆதாரமற்றது என்று இப் புத்தகம் தெரிவிக்கிறது. பாப்பரசரின் மரணம் ஒரு வகையான தற்கொலை செய்து வந்தாராம், அவர். இவ்வாறு, தனது மரணத்துக்கு தன்னை தயார்படுத்தி வந்த அதே சமயம், தனது நோய்க்கான மருந்துகளை உட்கொள்வதையும் அவர் நிறுத்தியிருக்க வேண்டுமென்கிறார் நூலாசிரியர் கோர்ன்வெல்.

தனக்கு மருத்துவம் பார்த்த வந்த டாக்டர்களையும் வேண்டுமென்றே தவிர்த்து வந்தாராம் இவர். ஆகவே, பல்வேறு வகைகளில் முயன்று மரணத்தை வரவழைத்துக் கொண்டதால் அவரது மரணத்தை தற்கொலை என்று குறிப்பிடலாம். அதில் தவறு இல்லை என்பது கோர்ன்வெல்லின் வாதம்.

மரணமடைந்த தினத்தன்று, மரணத்தை ஆவலுடன் தான் எதிர்பார்த்திருப்பதாக அவர் தெரிவித்திருக்கிறார். மேலும் தான் பாப்பரசராக வெகுகாலம் இருக்கப் போவதில்லை என்றும், சாவு தன்னை அரவணைத்ததும் இத்தாலி நாட்டுக்காரர் அல்லாத வெளிநாட்டவரே பாப்பரசராகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்றும் இவர் கூறி வந்திருக்கிறார்.

பாப்பரசர் என்ற புதிய பொறுப்பு தந்த சுமையைத் தாங்கிக் கொள்ள முடியாத அவர் சுகவீனமுற்றார். நெஞ்சு ஏற்பட்டு, ஆனால். வெளிப்படையாக பார்க்கப்பட்ட நேரத்துக்கு முன்னரே வெளியே வந்துவிட்டது. அதுவும் கூட புதிய பிரச்சினையைத் தோற்றுவித்துவிட்டது.

விடியற்காலை 5-30 மணிக்கு பாப்பரசருக்கு கோப்பி எடுத்துச் சென்ற கன்னியாஸ்திரி வின்சென்சாதான் பாப்பரசர் மரணமடைந்திருந்ததை முதன் முதலாகக்கண்டவர். இவர் உடனடியாக அதிகாரிகளுக்கு விடயத்தை அறிவித்தார். சென் பீட்டர்ஸ் தேவாலய மணி ஒலிக்கப்பட்டது. பாப்பரசரின் மரணம் மெல்ல வெளி உலகுக்குத் தெரிய வந்தது.

ஆனால், அதிகாரிகள் சங்கடத்தில் நெளியலாயினர். ஒரு கன்னியாஸ்திரிதான் விடியற்காலையில் பாப்பரசரின் படுக்கையறையில் நுழைந்த அவரது மரணத்தை ஏனையோருக்கு தெரிவித்தார் என்று எப்படி சொல்வது? சொன்னால் பிரச்சினைகள் முளைக்காதா? என்று யோசிக்க ஆரம்பித்தனர்.

ஏனெனில் முன்னர் ஒரு தடவை பன்னிரண்டாவது பயஸ் என்ற பாப்பரசரையும் பாஸ்குலினு என்ற கன்னியாஸ்திரியையும் இணைத்து பல வதந்திகள் கிளம்பியிருந்ததை அதிகாரிகள் அறிவர்.

உண்மையை உள்ளபடி ஒப்புக் கொண்டால், வேறு பல வதந்தி

பதின்மூன்றாம் லியோ 1878 ஆம் ஆண்டில் இருந்து 1903 ஆம் ஆண்டு வரை பாப்பரசராக விளங்கி, தனது 93 ஆம் ஆண்டில் காலமானார்.

முதல் 37 பாப்பரசர்களுக்கும், பிரம்மசாரிகளாக இருக்க வேண்டிய கட்டாயம் அப்போது இருக்கவில்லை. 0514-23 ஆம் ஆண்டுகளின் போது பாப்பரசராக விளங்கிய ஹொர்மிஸ்டாசின் மகன் பின்னர் 0536-7 ஆண்டுகளில் பாப்பரசராக இருந்திருக்கிறார். அவர் பெயர் சில்வரியஸ்.

1431-1502 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பாப்பரசராக விளங்கிய ஆரும் அலெக்ஸாண்டருக்கு ஆறு குழந்தைகள் இருந்தனர்.

இரண்டாம் எட்ரியன் என்ற பாப்பரசர் தான் திருமணம் செய்து கொண்ட கடைசிப் பாப்பரசர் (867-72). அதன் பின்னர் பாப்பரசர்கள் பிரம்மச்சாரிகளாக இருக்க வேண்டும் என்ற விதி ஏற்படுத்தப்பட்டது.

0304-8 ஆம் ஆண்டுகளுக்கிடைப்பட்ட மூன்று வருடங்கள் 214 நாட்களுக்கு ஒரு பாப்பரசரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

(ம-032)

# ஈரானிய ஆட்சியைப் பிடிக்க மன்னர் ஷாவின் மகன் முயற்சி

ஈரானின் தனிப்பெரும் தலைவராக விளங்கிய ஆயதுல்லா கொமெனியின் மறைவின் பின்னர் இவ்வளவு காலம் பலமிழந்து ஒதுங்கிப் போயிருந்த எதிர்க் கட்சிகளும் கொமெனியின் எதிரிகளும் இப்போது ஓரளவு தலை யெடுத்துள்ளார்கள்.

கொமெனியின் இஸ்லாமிய அரசாங்கத்தை அசைத்து வீழ்த்த முடியுமா என்று ஆராய முற்பட்டுள்ளார்கள். ஈரானிய அரசாங்கத்தின் எதிரிகளில் முக்கியமானவர் ரீஸா பஹல்லவி.

இவர் ஈரானின் கடைசி மன்னர் ஷா மொஹமட் ரீஸா பஹல்லவியின் மகன். அதாவது முடிக்குரிய மன்னர்.

ஷா மன்னருக்கு எதிராக புரட்சி செய்த ஆயதுல்லா கொமெனியின் தீவிரத்துக்கு முகம் கொடுக்க முடியாமல் 1979 ஆம் ஆண்டு மன்னர் நாட்டை விட்டு வெளியேறியதோடு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஈரானை ஆட்சி செய்து வந்த மன்னராட்சி முறைக்கு முடிவு கட்டப்பட்டது.

இதன் பின்னர்தான், மேற்கத்திய ரீதியான ஆட்சிமுறை ஒழிந்த தீவிர இஸ்லாமிய ஆட்சி முறை ஈரானில் அமுலுக்கு வந்தது.

ஷா மன்னரின் குடும்பம் இப்போது அமெரிக்காவில் பாதுகாப்புடன் வாழ்ந்து வருகிறது. ஷா மன்னர் இறந்ததும் அவருடைய வாரிசாக மகன் ரீஸா பஹல்லவி ஈரானிய மன்னராக அமெரிக்காவில் முடிசூட்டிக் கொண்டார்.

முடிசூட்டிக் கொண்டால் மட்டும் போதுமா? ஈரானிற்குத் திரும்பி வந்து இரத்தினக் கற்களால் அலங்கரிக்கப்பட்டுள்ள விலை மதிப்பற்ற மயிலாசனத்தில் அமர்ந்து ஆட்சி செய்ய வேண்டாமா?



இளவரசர் ரீஸா

ஈரானில் மன்னராட்சி மலர்வதற்கான காலம் சமீபித்து வருகிறது என்று கொமெனியின் மரணத்தின் பின்னர் பேட்டியளித்த மன்னர் பஹல்லவி ஆருடம் கூறியிருக்கிறார்.

ஈரானின் துன்பம் நிறைந்த நாட்கள் முடிவுற்று விட்டன. அதன் இறப்பான காலம் உதயமாகி விட்டது என்று கொமேனியின் மரணம் குறித்து இவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் இந்த சரியான காலத்தை நாம் பயன்படுத்திக் கொண்டு எமது படையை நடத்திச் செல்ல வேண்டும். ஈரானை விடுவித்து சுதந்திரம் பெறச் செய்ய வேண்டும் என்று இவர் போர்முரசு கொட்டியிருக்கிறார்.

முன்னர் ஒரு தடவையும் ஷா மன்னர் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டார். ஆனால் அமெரிக்க சி ஐ ஏ.யின் துணையுடன் நாட்டின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு மன்னர் வெற்றியுடன் மீண்டும் நாடு திரும்ப வழி சமைக்கப்பட்டது.

இப்படியான ஒரு எண்ணத்துடன்தான் ஷா மன்னரும் ஓய்வெடுக்கச் செல்கிறேன் என்ற போர்வையில் 1979 ஆம் ஆண்டு நாட்டை விட்டு வெளியேறினார்.

ஆனால், கொமெனியின் மிகக் தீவிர மேற்குலக எதிர்ப்பு, குறிப்பாக அமெரிக்க எதிர்ப்பு மனப்பான்மை காரணமாகவும், மக்களிடையே சமய உணர்வைத் தூண்டி விட்டதன் மூலமும், அமெரிக்க ஏஜண்டுகளின் அல்லது ஷாவின் சூழ்ச்சித் திட்டங்களுக்கு அவர் சிறிதும் இடமளிக்கவில்லை.

இப்போது அவரது மரணத்தின் பின்னர் உள்நாட்டில் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் பலவீனங்களுக்கு மத்தியில் நாட்டில் மீண்டும் ஷாவின் ஆட்சியை அரங்கேற்றிவிட முடியும் என்று புதிய மன்னர் பஹல்லவி எண்ணியுள்ளார்.

இவர் மாத்திரமல்ல, கொமெனியின் அரசாங்கத்துக்கு எதிராக உள்நாட்டில் தீவிரமாக இயங்கி வந்த முஜாஹிதீன் கெரில்லாக்களும் இப்போது சுறுசுறுப்படைந்திருக்கிறார்கள். தெஹ்ரானில் முன்னர் பாரிய குண்டு வெடிப்புகளை நடத்தி கொமெனியின் தீவிர பழிவாங்கல்களுக்கு ஆளாகி பின்னர் பலமிழந்து போனவர்கள் இவர்கள்.

ஆயத்துல்லா கொமெனிவெற்றி வாகையுடன் தெஹ்ரான் வந்திறங்கிய பின்னர் நாட்டின் முதலாவது ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டவர் அபுல் ஹசன் பானி சதார் புரட்சிக் காவலர்களின் சந்தேகம் இவர் மீது படரவே தப்பித்தேன் பிழைத்தேன் என்று நாட்டை விட்டு வெளியேறி பிரான்சில் தஞ்சம் புகுந்தார் இவர்.

கொமெனி அரசாங்கத்தின் தீவிரஎதிர்ப்பாளர்களில் இவரும் ஒருவர் கொமேனியின் மறைவின் பின்னர் நாடு பல பிரிவுகளாக பிரிந்து லெபனானைப்போல ஓயாத உள்நாட்டுப் போரில் ஈடுபட்டுவிடும் என்பது இவரது கணிப்பு.

முஜாஹிதீன் தலைமை; பானி சதார் குழுவினர் தவிர மேலும் சில கொமெனி எதிர்ப்பு உதிரிக் குழுக்கள் ஈரான் அரசாங்கத்தைக் கவிழ்க்க சமயம் பார்த்து வருகின்றன.

இக் குழுக்கள் அனைத்துக்குமே தலைமையகம் பாரிஸ் நகரம்தான் என் ஆயத்துல்லா கொமெனி கூட பாரிஸ் நகரிலேயே தன் தலைமையகத்தை ஏற்படுத்தி இஸ்லாமிய புரட்சியை முன்னர் வழிநடத்தி வந்தவர்.

ஆனால், கொமெனி உருவாக்கிச் சென்றுள்ள இஸ்லாமிய புரட்சியும் அவரது அரசாங்கமும் சுலபமாக அசைக்கப்படக் கூடியது அல்ல. கடந்த பத்து ஆண்டுகளாக அங்கு இஸ்லாமிய பாணியிலான அரசாங்கம் ஆழமாக வேரூன்றிவிட்டது என்பது மறக்க முடியாத ஒரு உண்மை.


ஆயத்துல்லா கொமெனியின் மறைவின் பின்னர் ஈரானிய அரசாங்கத்தின் கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்படக் கூடும். அதன் தீவிரப் போக்கில் மாற்றம் தென்படலாம் வெளிநாட்டு அணுகுமுறை மற்றும் பொருளாதார கொள்கை ஆகியவற்றில் மாறுதல்கள் தென்படலாம்.

ஆனால், அடிப்படை மாற்றங்கள் ஏற்படாது. ஏற்பட வழி இல்லை என்கிறார்கள் வெளிநாட்டு ராஜதந்திரிகள். இது ஒரு புறம் இருக்க, பானி சதாம் குழு. முஜாஹிதீன் குழு ரீஸா பஹல்லவி குழு மேலும் உதிரிக் குழுக்கள் என்று ஈரான் எதிர்ப்பு சக்திகள் பிளவுண்டு காணப்படுகின்றன.


இவை ஒன்றுபடாத வரை ஈரானிய அரசாங்கத்தை அசைத்துவிட முடியாது. ஏனெனில் பலவீனமான நிலையில் இருந்த ஈரானை தாக்கிய ஈராக்குடன் ஒன்பது ஆண்டுகளாகப் போரிட்டு பெரும் அனுபவம் பெற்ற நாடு ஈரான். ஆகவே ஆயுத பலத்தால் ஷா குடும்ப ஆயுத பலத்தால் குடும்பமோ ஏனைய குழுவினரோ ஈரானிய அரசாங்கத்தை ஏதும் செய்துவிட முடியும் எனக் கருதுவதற்கில்லை.

மேலும் ஒரு விஷயம். ஆயதுல்லா கொமெய்னியின் இறுதி ஊர்வலத்தின் போது ஒரு கோடி மக்கள் கலந்து கொண்டார்கள். அவர் பலருக்கு சிம்ம சொப்பனமாக விளங்கினாலும் கூட, பாமர ஈரானிய மக்களோடு மக்களாக எளிமை வாழ்க்கை வாழ்ந்து வந்ததால் ஈரானில் இப்போதும் கொமேனி அலை பரவலாக வீசி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

(ம-032)



# ஒலி-ஒளி உருவம்



# 'சிப்பிக்குள் முத்து'

# சிந்தியது கருத்து!

காலஞ்சென்ற கவிஞர் கண்ணதாசனின் பிறந்த நினைவு தினத்தை முன்னிட்டுக் கடந்த 24—6—89 சனிக்கிழமை மாலை "சிப்பிக்குள் முத்து" எனும் தலைப்பில் அருமையானதொரு நிகழ்ச்சி வானொலியில் ஒலிபரப்பாகியது!

கவிஞர் கண்ணதாசன் இயற்றிய திரைப்படப்பாடல் வரிகளின் கருத்துக்களைக் கொண்டே வெகு பொருத்தமாகத் தொகுக்கப்பட்டிருந்த இந்த நிகழ்ச்சி சிந்தைக்கினிய சிந்துக்களாகி ஒலித்தன!

இலக்கியத் தரத்திலிருந்த இதயம் கவர்ந்த இந் நிகழ்ச்சியைத் தயாரித்தளித்த மயில்வாகனம் சர்வானந்தாவை எவ்வளவு பாராட்டினாலும் தகும்! இதோ அத் தொகுப்பு – இங்கே தருகிறது தனிச் சிறப்பு—

புரியாத தமிழ் இலக்கியங்களைப் புரியும் தமிழாக இலகுவாக்கினார் கவிஞர்! இன்றைய மாணவர்கள் திறந்து வாசிக்கவே விரும்பாத அன்றைய இலக்கியங்களை அவர்களுக்கு ஏற்ற வகையில் தன் பாணியில் எழுதினார் கவிஞர்!

சிறு வயதில் முத்து என்ற செல்லப் பெயரால் அழைக்கப்பட்ட முத்தையாச் செட்டியார் கவியரசனாகியதும் அனைவரதும் பாராட்டையும் பெற்று ஒப்பற்று விளங்கினார்!

"முத்து" என்ற அந்தச் செல்லப் பெயரை வைத்தே இந் நிகழ்ச்சிக்கு "சிப்பிக்குள் முத்து" எனத் அமைதி என்றுமில்லை!"

1961 இலிருந்து 1972 வரை நிம்மதி இல்லாத பாடல்களை எழுதியதாகக் கவிஞர் குறிப்பிடுவார்! அவ்வாறு நிம்மதியில்லாது எழுதிய பாடல்களை நாம் நிம்மதியாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்—

"எங்கே நிம்மதி எங்கே நிம்மதி அங்கே எனக்கோர் இடம் வேண்டும்!"

எல்லோருக்கும் நான் உதவி செய்கிறேன்! எனக்கு ஒருவரும் உதவி செய்கிறார்கள் இல்லையே என்று எண்ணத் தோன்றிய காலம் ஒன்று அவருக்கு வந்தது! அப்போது எழுதிய பாடல் இப்படி அமைந்தது—

"எல்லோரும் நலம் வாழ நான் பாடுவேன் – நான் வாழ யார் பாடுவார் – என் பாடல்



கண்ணதாசன்

"நாயகியே எனது காவிய எல்லை – நரை விழுந்தாலும் நெஞ்சில் திரை விழவில்லை!"

காதலைப் பற்றியும் பெண்களைப் பற்றியும் பாடல்கள் எழுதுவதில் அவருக்கு இணை கூற முடியாது!

"காலங்களில் அவள் வசந்தம் – கலைகளிலே அவள் ஓவியம்" என எழுதி – அவள் கவிஞனாக்கினாள் என்னை எனத் தன் காதலிக்காக எழுதிய பாடல்தான் இது —

"மாதங்களில் அவள் மார்கழி – மலர்களிலே அவள் மல்லிகை – பறவைகளில் அவள் மணிப்புறா – பாடல்களில் அவள் தாலாட்டு – கனிகளிலே அவள் மாங்கனி – காற்றினிலே அவள் தென்றல்!"

காதல் தோல்வியான போது சோக கீதமிசைத்தார்—

"நினைக்கத் தெரிந்த மனமே உனக்கு மறக்கத் தெரியாதா? – பழகத் தெரிந்த உயிரே உனக்கு விலகத் தெரியாதா?"

மனம் சோர்ந்தபோது மதுவை நாடினார்! துயரங்களையும் சந்தோஷங்களையும் வெளிப்படுத்த அவருக்கிருந்த ஒரே கருவி கவிதைதான்—

"இரவினில் ஆட்டம் பகலினில் தூக்கம் இதுதான் எங்கள் உலகம்!

"பிறப்புக்கு முன்னால் இருந்தது என்ன உனக்கும் தெரியாது – இறந்த பின்னாலே நடப்பது என்ன எனக்கும் புரியாது!

"இருப்பது சில நாள் அனுபவிப்

ஞர் – தான் இயற்றிய பாடல் ஒன்றின் மூலமாக!

கவிஞர் கண்ணதாசன் இவ்வுலகில் இன்று இல்லாவிட்டாலும் காலத்தை வென்ற அவரது கவிதைக் கருத்துக்கள் மூலமாக என்றென்றும் அவர் எம்மிடையே வாழ்ந்து கொண்டுதானிருக்கிறார்!

# தொண்டாவின் தொண்டால்

# தொடர்கிறது மீண்டும்!

"தொலைக்காட்சியில் இன விகிதாசார அடிப்படையில் நிகழ்ச்சிகள் இடம்பெறும்! ஏற்கனவே இடம்பெற்று வரும் நிகழ்ச்சிகளில் எதுவும் தடை செய்யப்பட மாட்டாது!"

புடைவை கிராமக் கைத் தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு எஸ், தொண்டமானிடம் தகவல்துறை ராஜாங்க அமைச்சர் ஏ ஜே ரணசிங்க இந்த உறுதிமொழியை அளித்தார்!

ரூபவாஹினியிலும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலும் தமிழ் நிகழ்ச்சிகள் புறக்கணிக்கப்படுவது தொடர்பாக திரு ரணசிங்காவை திரு. தொண்டமான் தமது அமைச்சுக்கு அழைத்து அண்மையில் பேச்சு வார்த்தை நடத்தினார்,

கடந்த ஜூன் 21 ஆம் திகதி ஜனாதிபதி ஆர், பிரேமதாசவுக்கு அமைச்சர் திரு. தொண்டமான் எழுதிய கடிதத்தின் நகல் திரு, ரணசிங்கவிடம் கையளிக்கப்பட்டது!



தொண்டமான்

ரூபவாஹினியில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் தமிழ் நிகழ்ச்சிகள் மற்றும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தமிழ் நிகழ்ச்சிகள் புறக்கணிப்பு ஆகியவை பற்றி விரிவான அறிக்கை ஒன்றும் திரு. ரணசிங்கவிடம் கொடுக்கப்பட்டது!

ரூபவாஹினியில் கடந்த மாதம் 18 ஆம் திகதி ஒளிபரப்பப்படவிருந்த "பாசமலர்" படம் நிறுத்தப்பட்டதற்கு அமைச்சர் திரு. தொண்டமான் ஆட்சேபனை தெரிவித்தார்!

"சிங்கள – ஆங்கிலப் படங்களை ஒளிபரப்ப முடியுமானால் தமிழ்ப் படம் மாத்திரம் ஏன் ஒளிபரப்ப முடியாது?.

"தமிழ்ப் படங்களை ஒளிபரப்புவதற்கு உபயகாரர்கள் தேவையென்றால் ஏனைய படங்களுக்கு உபயகாரர்கள் தேவைப்படுவது இல்லையா?" என்றும் அமைச்சர் தொண்டமான் திரு. ரணசிங்கவிடம் கேட்டார்!

"உபயகாரர் தேவை என்றால் அதனைப் பகிரங்கப்படுத்த வேண்டும்! உபயகாரர்கள் நிச்சயமாக வருவார்கள்!" என அமைச்சர் திரு தொண்டமான் சொன்னார்—

"உபயகாரர் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மாதம் ஒரு முறை தமிழ்ப் படம் ஒளிபரப்புவதற்கு உறுதி அளிக்கிறேன்" என திரு ரணசிங்க கூறினார்—

ரூபவாஹினியில் தமிழ் நிகழ்ச்

ஒதுக்குவது பற்றி ஆலோசிக்கப்படும் என்றும் அவர் கூறினார்—

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் காலையில் ஆரம்பமாகும் தேசிய கீதமும் பக்திப் பாடலும் இனிமேல் தமிழிலும் இடம்பெறும்—

நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வர்த்தக சேவை ஒலிபரப்புக்கான காரணம் அறிந்து அந்த ஒலிபரப்பை மீண்டும் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்—

கண்டி "மலையக சேவை"க்கு கொழும்பில் இருந்து மேலதிக ஊழியர்கள் அனுப்பப்பட்டு தமிழ்ச் சேவை விரிவாக்கப்படும்—

தமிழ் ஒலிபரப்புக்களை நாடு முழுவதிலும் உள்ள மக்கள் நன்றாகக் கேட்கக் கூடியதாக விரைவில் ஒலிபரப்பு ஏற்பாடுகள் சீரமைக்கப்படும்—

இதற்கென ஜப்பான் உதவித் திட்டத்தின் கீழ் சக்தி வாய்ந்த ஒலிபரப்பு உபகரணங்கள் பொருத்தப்படும்!

கடந்த வாரம் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் இதற்கான ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளது என்றும் திரு ரணசிங்க இப் பேச்சுவார்த்தையின் போது தெரிவித்தார்!

# தயாரிப்பு: சஞ்ஜயன்

## விஸ்வநாதனின் முயற்சி விவசாயிகளுக்கு மகிழ்ச்சி

கடந்த செவ்வாய்க்கிழமை (11—7—89) வாஹினியில் எவருமே எதிர்பாராத வகையில் "கிராமிய இசை" நிகழ்ச்சி ஒன்று இடம்பெற்று இதயம் மகிழ்வித்தது!

"ஒரு நாட்டின் இதயமே அந் நாட்டின் கிராமங்கள்தான்" என்றார் மகாத்மா காந்தி!

அப்படிப்பட்ட கிராமங்களின் இதய "ஒலி"யை "ஒளி" வடிவிலும் தந்த தயாரிப்பாளர் திரு எஸ் விஸ்வநாதனை நாம் பாராட்டுகிறோம்—

பாட்டும் பரதமும் நாதஸ்வரமும் என்று பார்த்துப் பார்த்து அலுத்துப் போன "கலையரங்கம்" ரசிகர்களுக்கு இந்நிகழ்ச்சி சற்று மாறுதலாகியது!

யரங்கத்தைக் கலகலப்பாக்கியது!

பாடல்களின் இடையே காட்டப்பட்ட கிராமியச் சூழலும் இயற்கைக் காட்சிகளும் கண்களுக்குக் குளிர்ச்சியாகின!

வீ திவ்வியராஜா – எஸ் ஜெயக்குமார் – என் எம் பாலச்சந்திரன் ஆகியோர் பாடிய ஐந்து பாடல்களும் கண்ணனின் இசையமைப்பில் இனிமை சேர்த்தன! இந்நிகழ்ச்சிக்கு இசை வழங்கினார் எம் எஸ் செல்வராஜா!

பாடிய மூவரும் பாராட்டும் படியாகவே பாடி நிகழ்ச்சியை

## 'ஒளி ஆர'மும் ஒளிந்ததேனோ?

கடந்த சில வாரங்களாக வாஹினியில் தமிழ் நிகழ்ச்சிகள் புறக்கணிக்கப்படுவது குறித்து பரவலாக பேசப்படுவதை யாவரும் அறிவர்—

திட்டமிட்டபடி பாசமலர் – பொன்மாலைப் பொழுது போன்ற முக்கிய பல நிகழ்ச்சிகளும் இடை நிறுத்தப்பட்டமை தெரிந்ததே—

இந்த வரிசையில் கடந்த 6—7—89 அன்று "ஒளி ஆரம்" என்ற மற்றுமொரு சஞ்சிகை நிகழ்ச்சியும் ஒளிபரப்பாகவில்லை!

வாஹினியில் செய்தி நடப்பு விவகாரப் பிரிவினரால் ஒளிபரப்பாகும் ஒரேயொரு தமிழ் நிகழ்ச்சி இதுவாகும்!

ஆகவே இந்த நிகழ்ச்சியும் தடையின்றி ஒளிபரப்பாக வேண்டும் என்று சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக் கொள்கிறோம்!

“சிப்பிக்குள் முத்து” எனத் தலைப்புக் கொடுத்தோம்!]

தனது பன்னிரெண்டாவது வயதிலேயே எழுதுகின்ற ஆற்றல் தன்னுள் நிறைந்திருப்பதை உணர்ந்தார்!]

“கண்டது கற்றுப் பண்டிதனாவான்” என்றபடி எதுவெல்லாம் கிடைத்ததோ அவற்றை எல்லாம் கற்றார் கவிஞர்!

பெண்பால் கலந்த பாடல்களில் சற்று ஆர்வம் கொண்டவர் கவிஞர்! இடையிலே விரைவில் அனுபவிக்க வேண்டும் என்ற உத்வேகம் இருந்தது! அது நிறைவேறு முன் பாடலால் எழுதி மனதைச் சாந்தப்படுத்திக் கொள்வார்—

“ஆண்டொன்று போனால் வயதொன்று போகும் – அதற்கு முன்னாலே வா... வா... வாவா!”

அவரது அவசரத்தை மற்றும் ஒரு பாடலிலே இப்படிக் கேட்டோம்—

“ஆண்டவன் படைச்சான் எங்கிட்டக் கொடுத்தான் – அனுபவி ராஜான்னு அனுப்பி வச்சான்!”

ஆசைகள் துன்பத்தைப் பெருக்குகின்றன என்று தெரிந்ததும் எழுதினார் இப்படி—

“உலகம் பிறந்தது எனக்காக – ஓடும் நதிகளும் எனக்காக – மலர்கள் மலர்வது எனக்காக – அன்னை மடியை விரித்தாள் எனக்காக!”

கற்பனைக் குதிரை மீதேறித் தன் ஆசைகளை அச்சாரமாகக் காட்டினார் கவிஞர்! அவரது ஆசைகள் அதிகம் நிறைவேறின– நிறைவேறாதவற்றை நினைக்கும் போது...

“நினைப்பதெல்லாம் நடந்து விட்டால் தெய்வம் ஏதுமில்லை – நடந்ததையே நினைத்திருந்தால்

நான் பாட மலர் ஆடுவார் – இனி என்னோடு யார் ஆடுவார்!”

துன்பம் அதிகரித்த போது தன்னை வைத்துப் பல்லவிகளை எழுதினார்!

“கலைமகள் கைப்பொருளே! உன்னைக் கவனிக்க ஆள் இல்லையோ? – நிலையில்லா மாளிகையில் உன்னை மீட்டவும் விரலில்லையோ?

“நான் யார் உன்னை மீட்ட? வரும் நன்மைக்கும் தீமைக்கும் வழிகாட்ட!

“ஏதோ துடிக்கின்றேன் – அதன் இனந்தெரியாமல் தவிக்கின்றேன்!”

திரைக்கதை வசனம் எழுதுவதிலும் சிறந்து விளங்கினார்! திரைப் படங்களிலும் நடித்தார்! குடும்பத்தில் சச்சரவுகள் ஏற்பட்ட போதெல்லாம் “நான்கு சுவர்களுக்குள் எது நடந்தாலும் அது நமக்குள் இருக்கட்டும் நல்லம்மா” என எழுதினார்!

இனபந்துக்களால் துன்பப்பட நேர்ந்த போது கண்ணனை நினைத்து வரிகள் விரிந்தன —

“ஆலம் விழுதுகள் போல் உறவு ஆயிரம் வந்துமென்ன? – வேரென நீ இருந்தாய் – அதில் நான் வீழ்ந்து விடாதிருந்தேன்!

“உன் கண்ணில் நீர் வழிந்தால் என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி!”

வடநாட்டுப் பேரழகி ஒருத்தியை டெல்ஹி விமான நிலையத்தில் கண்டார் கவிஞர்! கண்டதும் அவரது கற்பனை இப்படிப் பறந்தது—

“கம்பனைக் கூப்பிடுங்கள் – சீதையைக் காண்பான்!]

கவி காளிதாசன் – அவள் சகுந்தலை என்பான்!

எனக்கும் புரியாது!

“இருப்பது சில நாள் அனுபவிப் போமே – எதுதான் குறைந்து விடும்!”

இவர் மதுக்கோப்பையில் மயங்கிய காலம் அதிகம் என்றே கூற வேண்டும் —

“ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு – ஒரு கோலமயில் என் துணையிருப்பு – இசைப் பாடலிலே என் உயிர்த்துடிப்பு – நான் பார்ப்பதெல்லாம் அழகின் சிரிப்பு!”

“என்னதான் பெண்ணிடத்தில் இத்தனை இன்பம் – இங்குதான் தோன்றியது முத்தமிழ்ச் சங்கம்” என்ற அடிகளுக்கு அர்த்தம் புரியாதிருந்த நண்பர் ஒருவருக்கு கவிஞர் கொடுத்த விளக்கம் வியப்புற வைத்தது —

“நீலக் கண்கள் தாமரை போல் சிவப்பதெப்போது? – நினைவில்லாமல் மார்பிலே மயங்கும் போது!

“வார்த்தை ஜாலம் பேச்சிலே வருவதெப்போது? – மங்கையின் மடியிலே புரளும் போது!

“ஆயிரம் பொய் சொன்னால் காரியமாகும் – அந்த நாளில் அது தானே காவியமாகும்!

“என்னதான் பெண்ணிடத்தில் இத்தனை இன்பம் – இன்றுதான் தோன்றியது முத்தமிழ்ச் சங்கம்!

“பொன்னிலே தோய்த்தெடுத்த பூவையர் அங்கம் – போதையில் ஆட வைக்கும் ஆடலரங்கம்!

“தேனிலவு காண்பதற்குத் தேடுது நெஞ்சம் – வானிலவின் கீழிருந்து வாடுது மஞ்சம்!”

தமிழ்ச்சங்கம் பிறந்த இடம் மதுரை! மதுரைக்குக் கூடல் என்றோர் பெயருமுண்டு! “ஆண் பெண் உற”வையும் கூடல் என்று கூறுவார்கள்!

கூடலில் பிறப்பது இன்பம்! சங்கம் பிறந்தது கூடலில்! இன்பம் பிறந்ததும் கூடலில் என்கிறார் கவிஞர்!

கவிஞரை நாம் மறக்க முடியாது! ஒவ்வொரு நாளும் அவரது பாடல்களைக் கேட்டும் அவரது கற்பனையை நினைத்தும் வியக்கிறோம்!

“நான் நிரந்தரமானவன் அழிவதில்லை – எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை!” என்கி

ரசிகர்களுக்கு இந்நிகழ்ச்சி சற்று மாறுதலாகியது!

இடையிடையே இப்படியான மாற்றங்களும் அடிக்கடி தேவை என்பதை அறிந்து சேவையாற்றிய திரு விஸ்வநாதனின் முயற்சி தமிழ் ரசிகர்களை – குறிப்பாக விவசாயப் பெருமக்களை நிச்சயம் மகிழ்ச்சியிலாழ்த்தியிருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை!

ஏற்கனவே வானொலியில் கிராமியப் பாடல்களை வெவ்வேறு நிகழ்ச்சிகள் மூலம் நாம் கேட்டும் பார்த்துமிருந்த போதிலும் தனியொரு நிகழ்ச்சியாகிய இக் “கிராமிய இசை” அன்றைய கலை



கவிஞர் நீலாவணன் தம்பதியின் புதல்வரும் இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனத் தமிழ் நிகழ்ச்சித் தயாரிப்பாளரும் சிறந்த நடிகரும் விளையாட்டரங்கு – சிறுவர் மலர் – முகத்தார் வீடு – பகுதி நேர அறிவிப்பு நேர்முக வர்ணனைகள் மூலம் வானொலி நேயர்களுக்கு நன்கு அறிமுகமானவருமான திரு எஸ் எழில்வேந்தன் பொதுநல நாடு உறவுகள் நிதியத்தின் புலமைப்பரிசில் பெற்று ஒலிபரப்புத்துறையில் விசேஷ பயிற்சி பெற சில மாதங்களுக்கு முன் இங்கிலாந்து சென்றார்– அவர் பயிற்சி முடிந்து விரைவில் நாடு திரும்பவுள்ளதாக ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தயாரிப்பாளரான திரு வி என் மதியழகன் தெரிவிக்கின்றார்–

படியாகவே பாடி நிகழ்ச்சியை நிறைவு செய்தார்கள்!

ரூபவாஹினியில் தமிழ் நிகழ்ச் சிக்கென ஓர் அலைவரிசையை

டும் என்று சம்பந்தப்பட்டவர் களைக் கேட்டுக் கொள்கிறோம்!]

# வாசகர் எதிரொலி எதிரொலி

கடந்த 24—6—89 சனிக் கிழமை கவிஞர் கண்ணதாசன் பிறந்த தினத்தன்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தின் வர்த்தக சேவையில் மாலை 4–30 முதல் 5–00 மணிவரை ஒலி பரப்பான “சிப்பிக்குள் முத்து” பாடல் தொகுப்பு சிறப்பு நிகழ்ச்சி பிரமாதம்! — செல்வன் ரா சுரேஷ் – கலஹா–

★

பட்டுக்கோட்டையாரின் பாடல் வரிகளைப் பட்டும் படா

மலும் தந்த அசத்தி விட்டீரே! “உண்மைகள் வெளியாகும் உள்ளங்கள் தெளிவாகும்” என்பது போல் சில வாரங்களுக்கு முன் சில உண்மைகளைப் பட்டுக்கோட்டையின் பாணியில் பட்டுத் தெறிக்க வைத்து எம் உள்ளங்களைத் தெளிவாக்கி விட்டீர்! இன்று வரும் இரு அர்த்தங்கள் கொண்ட மோசமான பாடல்களை பற்றிக் குறிப்பிட்டிருந்தீர்! சில வாரங்களாக (கடந்த வாரம் மட்டும் விதிவிலக்கு) நீரும் அதே போன்ற பாடல்களைத்தானே “கலைக் கண்ணோட்டம்” என்ற பார்வையில் எழுதுகிறீர்! அது சரி சார்! – யார் அந்த வாசகி? ஏன் வாசகன் கேட்டால் பாடல் எழுத மாட்டீரோ? தாய்க்குலத்திற்குத் தான் முதல் மரியாதையோ? நான் செல்லுறத சொல்லிபுட்டேன் செய்யிறத செஞ்சிடுங்க – நல்லதின்னு போட்டுடுங்க குத்துதென்டா விட்டுடுங்க!” — வி ரி ராஜா – திஸ்ஸமஹாராம–

# இவ்வார நிகழ்ச்சிகளில் ‘பாசமல’ரும் உண்டு!

ரூபவாஹினியில் ஒளிபரப்பாகவிருக்கும் இவ்வாரத் தமிழ் நிகழ்ச்சிகள் வருமாறு—

இன்று ஞாயிற்றுக்கிழமை 6–55க்கு “பொன் மாலைப் பொழுது”

நாளை திங்கட்கிழமை 5–05க்கு “வண்ணச்சோலை” சிறுவர் நிகழ்ச்சி!

செவ்வாய்க்கிழமை 6–55க்கு “கலையரங்கம்”!

வியாழக்கிழமை 6–55க்கு “இளையர் அரங்கம்” – இரவு 10–00 மணிக்கு ஹஜ்ஜுப் பெருநாள் விசேஷ நிகழ்ச்சி!,

வெள்ளிக்கிழமை 6–55க்கு “உதயகீதம்” – இரவு 10–00 மணிக்கு சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி நடித்த “பாசமலர்” திரைப் படம்!

சனிக்கிழமை 5–30க்கு “சங்கமம்”

## ஈரான் திரைப்பட விவகாரம்–

# மயக்க நிலை ஒழிய மார்க்கத் தீர்ப்பு வருகிறது

கடந்த மே 7 ஆம் திகதி ரூபவாஹினியில் முஸ்லிம்களின் நோன்புப் பெருநாளை முன்னிட்டு “ஸ்கெயாகுரோ” (Scarecrow) என்னும் ஈரானிய திரைப்படம் ஒளிபரப்பப்பட்டது வாசகர் அறிந்ததே.

இத் திரைப்படம் தொடர்பாக மே 14 ஆம் திகதி “சிந்தாமணி”யில் மார்க்கஸ்தன் என்பவர் ஒரு சர்ச்சையைக் கிளப்பியிருந்தார். மார்க்கஸ்தன் எழுப்பிய சர்ச்சையில் கீழ்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

“இஸ்லாமிய வழிமுறைகளைத் தீவிரமாகப் பின்பற்றும் ஈரான் போன்ற ஒரு இஸ்லாமிய நாட்டில் திரைப்படம் எடுக்கலாமா? முஸ்லிம் பெண்கள் “கமெரா” முன் தோன்றி நடிக்கலாமா? இதுகுறித்து நம நாட்டு உலமாக்கள் தரும் விளக்கமென்ன?”.

இக் குறிப்பை அடிப்பொட்டி “சிந்தாமணி”ப் பண்ணை எழுத்தாளரான ஜனாப் எஸ் ஐ நாகூர் கனி மே 28 “சிந்தாமணி”யில் “ஒரு மயக்கநிலை தெளிய வேண்டும்” எனும் தலைப்பில் சில சிந்தனைகளை முன் வைத்திருந்தார்.

“...நம் நாட்டு முஸ்லிம்கள் புகைப்படம் பிடிப்பதையும், சினிமா – டிவி பார்ப்பதையும் “ஹறாம்” (தடுக்கப்பட்டவை) என்று நம் நாட்டு மௌலவிமார்களும் உலமாக்களும் கூறி வருகின்றனர்.

“...அவ்வாறு கூறும் மௌலவிமார்களிடமும் உலமாக்களிடமும் அடையாளக் கார்ட் இருக்கிறது. கடவுச்சீட்டுக்காக புகைப் படமும் பிடிக்கின்றனர். “இது சரியா?” எனக் கேட்டால் “நல்ல விஷயத்துக்காகத்தான் புகைப்படம் பிடிப்பது ஆகுமான காரியம்” என கின்றனர்...” இது சரியா?”

“...புகைப்படம் – சினிமா – டிவி இம்மூன்றும் இவ்விஞ்ஞான உலகில் மனித சமுதாயத்தால் ஒதுக்க முடியாத பொதுசனத் தொடர்பு சாதனங்கள். இவற்றின் பங்களிப்பினை மறுக்க முடியாது...”

“...இஸ்லாம் எல்லாக் காலங்களுக்கும் ஏற்ற ஒரு வாழ்க்கைத் திட்டம். அப்படியானால் 20 ஆம் நூற்றாண்டின் இந்தப் பொது சனத் தொடர்பு சாதனங்களின் பங்களிப்பு தொடர்பாக இஸ்லாத்தின் நிலைப்பாடு என்ன?

“இந்த மயக்க நிலை பன்னெடுங் காலமாக நம் நாட்டு முஸ்லிம்களிடையே நிலவி வருகின்றது. இந்த மயக்க நிலையைத் தெளிவடையச் செய்ய வேண்டும்...”

இவ்வாறு சிந்தனைகளை தம் கட்டுரையில் ஜனாப் எஸ் ஐ நாகூர்கனி எழுதியிருந்தார்.

இதனைப் படித்த “சிந்தாமணி” வாசகர்கள் பலர் “சிந்தாமணி” பணிமனைக்கு கடிதங்கள் எழுதலாயினர். “பிரஸ்தாப மயக்க நிலையை மார்க்கப் பிரச்சினைகளுக்கு “பத்வா” வழங்கத் தகுதி படைத்த அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமா சபை மூலம் தெளிவுபடுத்துங்கள்” என்பதே “சிந்தாமணி”க்கு வந்த வாசகர் கடிதங்களின் சாரமாக அமைந்தது.

வாசகர்களின் இந்த அன்பான வேண்டுகோளை நிறைவு செய்யும் நோக்கில் “சிந்தாமணி” கடந்த 14–6–89 இல் ஒரு கடிதத்தை உலமா சபைக்கு அனுப்பி வைத்தது. அதில் வாசகர்களின் விருப்பத்தை தொட்டுக்காட்டி ஈரான் திரைப்பட விவகாரம் தொடர்பான மயக்கநிலை குறித்து மார்க்கத் தீர்ப்பை (பத்வாவை) வழங்குமாறு கோரப்பட்டிருந்தது.

அதற்கு உலமா சபை பொதுச் செயலாளர் மௌலவி எம் ஜே எம் றியால் 26–6–89 திகதியிட்ட பதிலை “சிந்தாமணி”க்கு அனுப்பி வைத்துள்ளார்.

அதில் கீழ்வருமாறு கூறுகின்றார்–

“திரைப்படத்துடன் தொடர்புள்ள பல விடயங்கள் மார்க்க அறிஞர்களான ஆலிம்களிடையே பெரும் சர்ச்சைக்குரியவையாக இருந்து வருகின்றன. கூடியவரை ஆலிம்களிடையே கருத்தொற்றுமையை வளர்க்க வேண்டுமென்பது அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் இலட்சியங்களுள் ஒன்றாக இருப்பதால் 25—6—89 இல் நடைபெறவிருந்த எமது பத்வாக் குழுக் கூட்டத்தில் உங்கள் கடிதத்தைச் சமர்ப்பித்து ஒரு முடிவு எடுப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தோம்...

எனினும் தவிர்க்க முடியாத காரணங்களால் அக் கூட்டம் ஒத்திவைக்கப்பட நேர்ந்தது. எனவே அடுத்த பத்வாக் குழுக் கூட்டத்தில் தங்கள் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைப் பரிசீலனை செய்து எடுக்கப்படும் முடிவை கூடிய விரைவில் தங்களுக்கு அனுப்பி வைக்கிறோம்...”

இவ்வாறு “சிந்தாமணி” ஆசிரியருக்கு உறுதியளித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நெருக்கடியான கட்டத்தில் பத்வாக் குழுக் கூட்டத்தை கூட்ட முடியாதிருக்கும் நியாயத்தை “சிந்தாமணி”யும் உணர்கிறது.

கூடிய விரைவில் இப்பிரச்சினை தொடர்பான மார்க்கத் தீர்ப்பை (பத்வாவை) “சிந்தாமணி” மூலம் வழங்கி பொது மக்களிடையே நிலவும் மயக்க நிலையைப் போக்கும்படி மீண்டும் “சிந்தாமணி” வலியுறுத்த விரும்புகிறது.

இது சமுதாயத்திற்கு செய்யும்

# இந்திய உறவின் அடிப்படை நோக்கம்

நல்ல குடிப்பெருமையை நன்மக்களால் அறியலாம்– நன்புனைத உள்ளத்தை கெட்ட போது அறியலாம்– இந்த பாடத்தை திபெத் இந்தியாவிடமிருந்தும் – நேபாளம் சீனாவிடம் இருந்தும் அறிந்திருக்க வேண்டும் என்று அரசியல் அவதானிகள் கூறுகிறார்கள்–

சுதந்திர தாகங் கொண்ட திபெத்திய மக்களை அண்டி அரவணைத்து புகலிடமும் ஒத்தாசையும் வழங்கி வந்த இந்தியா இப்போது அதன் போக்கை மாற்றி வருகின்றது–

சீனத் தொடர்பினால் இந்தியாவின் மனக் கசப்பையும் நெருக்கடித் திணிப்பையும் சம்பாதித்துக் கொண்ட நேபாளம் இப்போது இரண்டும் கெட்டான் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது–

இந்தியாவுடன் இணங்கிப் போய் வர்த்தக பிரச்சினையையும் இந்தியா ஊடாக சரக்குகளை கொண்டு செல்லும் ஊடு கடப்பு பாதைக்கான பிரச்சினையையும் கலந்து பேசித் தீர்த்துக் கொள் என்று சீன கையை விரித்து விட்டது– இதனால் அரசன் நம்பி புருஷனைக் கைவிட்ட நிலையில் நேபாளம் அவதிப்படுகின்றது–

பீகிங் தியன் அன் மென் சதுக்கத்தில் சீன மாணவர்கள் அமைதி வழி ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்கள்– அடிப்படை மனித உரிமைகளான பேச்சு சுதந்திரம் – கூட்டம் கூடும் சுதந்திரம் – பத்திரிகைச் சுதந்திரம் கோரிய அவர்கள் மீது சீன ஆட்சியாளர்கள் இராணுவத்தைக் கட்டவிழ்த்து விட்டார்கள்– ஆயிரக்கணக்கில் மாணவர்களைக் கொன்று குவித்தார்கள்–

## உலக நாடுகள்

## அதிர்ச்சி

சீனாவின் போக்கு குறித்த உலக நாடுகளே அதிர்ச்சியுற்றன– அருவருப்புக் கொண்டன– அநாகரிக செயல்கண்டு உறைந்தன–

தென் ஆபிரிக்கா போன்ற

ஆசியப் பிராந்திய ஸ்திரத் தன்மைக்கு இரண்டு நாடுகளுமே பொறுப்பாகும்.

சீனப் பிரதமர் லீ பெங்கின் இந்தக் கூற்று ஆசிய ஜோதி ஜவஹர்லால் நேரு கண்ட கனவை மனக்கண்முன் நிழலாட வைக்கிறது என்கிறார்கள் அரசியல் ஆய்வாளர்கள்.

## நேருவின் கனவு

ஜவஹர்லால் கண்ட கனவு என்ன? 13-11-1988 பூலோக



ராஜீவ் காந்தி

சஞ்சாரத்தைச் சற்று புரட்டுவோம்.

அமைதியை நிலைநாட்டவும் பஞ்சசீலக் கொள்கையை மேம்படுத்தவும் அனைத்து ஆசிய அரசியல் கூட்டமைப்பு ஒன்றை அமைக்க வேண்டும். இதில் இந்தியாவுடன் சீனா இணைய வேண்டும். சீனாவை இதற்கு சம்மதிக்க வைக்கலாம். இந்த "நப்பாசையில்" ஆசிய ஜோதி ஜவஹர்லால் நேரு விடாப்பிடியாக இருந்து வந்தார்– இது வெறும் கனவாகவே போய் விட்டது.

அண்டை நாடுகள் எல்லாம் ஏதோ ஒரு விதத்தில் எப்போதோ ஒரு காலத்தில் இந்தியாவின் ஒரு பகுதியாகவே இருந்தன. அல்லது அவை இன்று இன கலாசார அடிப்படையில் இந்தியாவின் வளர்ச்சிப் பரிமாணத்தின் பகுதிகளே.

சின்னஞ் சிறிய நாடுகளினால்

சீனர்கள் திபெத்தை தம்வசப் படுத்த சுமார் 2 நூற்றாண்டு காலம் முயன்று வந்தார்கள்– இறுதியாக 1950 அக்டோபரில் மக்கள் விடுதலை சேனையை அனுப்பி திபெத்தியரின் எதிர்ப்புக்களை முறியடித்து அதனைக் கைப்பற்றினர்.

திபெத் மீதான சீன ஆதிக்கத்தை கட்டுப்படுத்தும் முகமாக 1913 இல் பிரிட்டன் முத்தரப்பு மாநாடு ஒன்றை சிம்லாவில் கூட்டியது.

அதில் இந்தியா சீனா திபெத் ஆகியன கலந்து கொண்டன. இந்தியாவுக்கும் திபெத்துக்கும் இடையிலான எல்லையாக ஹிமாலய மலைத் தொடர் அமைய வேண்டும் சீனாவை இதனை ஏற்க வைக்க வேண்டும் என்ற முயற்சியிலேயே பிரிட்டன் சிம்லா மாநாட்டைக் கூட்டியது.

அதிகாரபூர்வ பதிவுகள் கிறிஸ்துவுக்கு முன் 822 இல் சீனாவும் திபெத்தும் செய்து கொண்ட ஒப்பந்தம் பூகோள வரைபடம் ஆகியனவற்றை ஆதாரமாக வைத்த திபெத்திய எல்லை நிர்ணயிக்கப்பட்டது. மாக் மோகன் எல்லை குறிக்கப்பட்டது.

இந்த சாசனத்தில் சீனப் பிரதிநிதி இவான் சென் தனது முதல் எழுத்துக்களை பொறித்திருந்தார்.

## சாஸனம்

## குறைப்பிரசவம்

ஆயினும் இறுதியில் அந்த சாஸனத்தைஅங்கீகரிக்க சீனா மறுத்து விட்டது. புறப்பகுதி திபெத்தின் எல்லைப்புறத் தொடர்பாகவே இந்த சாஸனம் பூரணத்துவம் பெறவில்லை.

உலக அமைதி ஆசிரிக்க ஆசிய ஒருமைப்பாடு பற்றி பேசிவரும் இந்தியாவின் கண்மூடித்தனமான குழறுபடிகள் திபெத்துக்கு பாதகமாக அமைந்து விட்டன–

திபெத் மீது 1950 இல் சீனா படையெடுப்பு நடத்திய போது இந்தியா எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு பதில் கவலை தெரிவித்தது.

திபெத்தியர்களின் சுதந்திரத்திற்கான உரிமை சுயநிர்ணயத்திற்கான உரிமை ஆகியவற்றை தனது உலக அமைதி என்ற காரணத்திற்

கோடி டாலர் உபரி வர்த்தகமாகும்.

பாதகமான உபரி வர்த்தகத்தினால் அமெரிக்கா உஷார் அடைந்தது. இந்தியா, ஜப்பான், பிரேஸில் ஆகிய நாடுகள் நியாயத்துக்கு ஒவ்வாத வர்த்தக நடைமுறைகளைக் கடைப்பிடிக்கின்றன என்று அது குற்றம் காட்டியது.

அமெரிக்க வர்த்தகத் தடைகளை 18 மாதங்களுக்குள் நீக்காவிட்டால் இந்த நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொரு

பூலோக சஞ்சாரம்
எஸ்.எஸ்.எஸ்

ட்களுக்கு 100 சத வீத காப்புவரி (ஏற்றுமதி இறக்குமதி சுங்கவரி) அறவிடப்படும் என்று அது தெரிவித்தது.

## அமெ குற்றச்சாட்டு

## இந்தியா சீற்றம்

அமெரிக்காவின் குற்றச்சாட்டு இந்தியாவுக்கு சினத்தை ஊட்டியது. கடந்த மே மாதம் 26 ஆம் திகதி வாஷிங்டனில் வைத்து இந்திய வணிக அமைச்சர் தினேஷ் சிங் "அமெரிக்கா அதன் சந்தைக்கு தானாகவே தடைகளை உருவாக்கி வருகிறது" என்று கூறினார்.

இப்படிக் கூறியிருக்கும் இந்தியா நேபாள விவகாரத்தில் எப்படி நடந்து கொள்கிறது தெரியுமா?

இந்திய– நேபாள வர்த்தக ஒப்பந்தமும் சரக்குகளை இந்தியாவூடாக எடுத்து செல்வதற்கான ஊடுகடப்பு மார்க்க ஒப்பந்தமும் கடந்த மார்ச் 23 ஆம் திகதி காலாவதி ஆகிவிட்டன.

அவற்றைப் புதுப்பிக்க இந்தியா மறுத்து விட்டது. இரண்டு ஒப்பந்தங்களையும் ஒன்றாக இணைத்து புதிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ள வேண்டும் என்று நேபாளத்தை நிர்ப்பந்தித்தது. நேபாளத்துக்கு வழங்கி வந்த 15 ஊடுகடப்பு மார்க்கங்களில் பெரும்பாலானவற்றை மூடி விட்டது.

ஏனைய நாடுகளினால் சூழப்பட்டிருக்கும் நாடு ஒன்றுக்கு தரை மார்க்க பாதையை வழங்க வேண்டும் என்ற சர்வதேச சட்டத்திற்கு மதிப்பளிக்கத் தவறி விட்டது.

வர்த்தகம் – காப்புவரி (ஏற்றுமதி இறக்குமதி சுங்க வரி) மீதான பொது ஒப்பந்த அமைப்பில் நேபாளத்திற்கு அங்கத்துவம் கிடையாது– எனவே சட்ட ரீதியாகப் பார்க்கையில் ஊடு கடப்பு பாதைகளை வழங்க வேண்டிய கடப்பாடு இந்தியாவுக்கு கிடையாது என்று நியாயம் தெரிவித்தது–

## நிபந்தனைகள்

## திணிப்பு


பின்வரும் நிபந்தனைகளுக்கு நேபாளம் இணங்க வேண்டு



மன்னர் வீரேந்திரா

மென்று அது வற்புறுத்தி வருகிறது.

* இந்தியப் பொருட்கள்




மீதான மேலதிக சுங்கத் தீர்வைகளை நீக்க வேண்டும்.

இந்தச் சலுகையை எந்த ஒரு மூன்றாவது நாட்டுக்கும் வழங்கக் கூடாது.

நேபாளம் இந்தியாவுக்குச் சாதகமான உபரி வர்த்தகப் பிரச்சினையை சமாளிக்க முடியாது திணறுகிறது– அதன் மீது இப்படி ஒரு நெருக்கடி திணிப்பு!

நேபாளத்தின் இக்கட்டான நிலைமை மன்னர் வீரேந்திராவின் கடந்த ஏப்ரல் 13ஆம் திகதிய புதுவருடச் செய்தியில் நன்கு புலப்படுகிறது–

செய்தி வருமாறு—

நாடுகளின் தரைப் பிரதேசங்களினால் சூழப்பட்டு முடக்கப்பட்டிருக்கும் ஒரு நாடாக எம் மீது பூகற்பவியலால் திணிக்கப்பட்டிருக்கும் பிரச்சினைகளை சிநேக பூர்வ கலந்துரையாடல் சமரசப் பேச்சுகள் மூலம் தீர்த்து வைக்கத் தயாராக இருக்கிறோம்–

இப்படி அவர் தெரிவித்தார்–

இதேவேளை நேபாள வெளியுறவு அமைச்சர் "நியூயோர்க் டைம்ஸு"க்கு பின்வருமாறு பேட்டி அளித்திருக்கிறார்–

இந்தியாவுடன் விஷேசமான ஒரு உறவை வைத்துக் கொள்ள விரும்பவில்லை–

எந்த ஒரு நாட்டின் மீதும் அளவுக்கு அதிகமாக சார்ந்திருப்பது தீமையானது–

ஒன்றுக்கொன்று சார்புள்ள பரஸ்பரத் தன்மையையே நேபாளம் இப்போது விரும்புகிறது–

இது நேபாள வெளியுறவு அமைச்சரின் பேட்டி–

பூட்டானின் வெளியுறவு விவகாரங்களை நிர்வகித்துவரும் இந்தியாவுக்கு நேபாளத்தின் சுதந்திரப் போக்குப் பிடிக்குமா?

இந்தியாவின் அண்டைநாட்டு உறவின் உள்ளார்ந்த இரகசியம் "உழுதவன் காட்டைப்பார் – மேய்ச்சவன் மாட்டைப்பார்" என்று கூறத் தோன்றுகிறதல்லவா? (ண)

யுள்ள உறைந்தன.

தென் ஆபிரிக்கா போன்ற நாடுகளின் மனித உரிமைகளுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கும் இந்தியா சீன மாணவர்கள் சிந்திய இரத்தக் கறைகள் காய்வதற்கு முன்னரே சீனவுடன் கூடி குலாவியிருக்கிறது.

இந்திய பிரதி வெளியுறவு அமைச்சர் எஸ் கே சிங் பீகிங் சென்றார். கடந்த 4ஆம் திகதி அவருக்கு சீனவில் ஒரு வரவேற்பு வைபவம் நடைபெற்றது.

அதில் அவர் என்ன சொன்னார்? "இந்தியாவுக்கும் சீனவுக்கும் இடையில் சுமார் 30 வருட காலம் நீடித்து வந்த எல்லைத் தகராறு தொடர்பாகப் பேச்சு நடத்தினேம். முதலாவது சமரசப் பேச்சுவார்த்தையின் முடிவுகள் குறித்து இந்தியா சந்தோஷப்படுகின்றது" என்று அவர் சொன்னார்.

## உள்ளார்ந்த சரக்கு

சீன மாணவர்களின் படுகொலையின் சூத்திரதாரி என வர்ணிக்கப்படும் சீனப் பிரதமர் லீ பெங்கும் விட்டு வைக்கவில்லை. அவரது பேச்சில் "உள்ளார்ந்த சரக்கு" இருந்தது. அவர் பின்வருமாறு கூறினார்.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கடந்த டிசம்பர் 9 ஆம் திகதி சீன விஜயத்தை மேற்கொண்டார்.

அதன் பின்னர் சீன - இந்திய உறவுகள் இரண்டு நாடுகளுக்கும் பயன் அளிக்கும் வகையில் தொடர்ந்து முன்னேற்றம் கண்டு வருகின்றன.

—இப்படி சீனப் பிரதமர் கூறினர்.

சீன-இந்திய உறவுகள் சீராக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் சீனப் பிரதமர் லீ பெங் வைபவத்தில் கோடிட்டுக் காட்டினர். அவர் கூறிய காரணம் இது தான்.

ஆசியாவிலேயே சீனவும் இந்தியாவும் மிகப் பெரிய நாடுகள். இரு நாடுகளுக்குமே ஒரே விதமான பிரச்சினைகள் இருக்கின்றன.



லி பெங்

தனித்து நின்று தாக்குப்பிடிக்க முடியாது. கால ஓட்டத்தில் காலப் போக்கில் அவை இந்தியாவின் ஆதிக்கத்தின் கீழ் மீண்டும் வந்து விடலாம்.

13-4-1944 இல் ஆசிய ஜோதி நேரு தமது சிறை வாழ்க்கையில் கண்ட "இந்தியாவின் கண்டு பிடிப்பு" இப்போது மனத்திரையில் விழுகின்றதா?

எப்படி இருந்த போதிலும் சீன இந்திய உறவு தற்போது நல்ல முன்னேற்றம் கண்டு வருகின்றது.

## சீனப் பிரதமருக்கு மீண்டும் அழைப்பு

இந்திய விஜயம் ஒன்றை மேற்கொள்ளுமாறு சீனப் பிரதமர் லி பெ கிற்கு ராஜீவ காந்தி மீண்டும் ஒரு முறை அழைப்பு விடுத்திருக்கிறர்.

ஆட்டெரு அவனுக்கு மாட்டெரு மகனுக்கு என்ற விதத்தில் திபெத் நேபாள விவகாரங்களை சீனவும் இந்தியாவும் கையாண்டு விட்டனவோ என்பது ஒரு சாராரின் சந்தேகம்.

உலகின் முகடு என்று வர்ணிக்கப்படும் "திபெத்தை இந்தியா அதன் இயற்கையான பாதுகாப்புத் தடை அரணகவும் சுயாதீன நாடாகவும் கருதி வந்தது.

கான உரிமை ஆகியவற்றை தனது உலக அமைதி என்ற காரணத்திற்காக கைநழுவி விட்டு விட்டது என்ற அரசியல் வட்டாரங்கள் சில கருதுகின்றன.

திபெத்துடனன சீன உறவின் அந்தஸ்து பரிபாலன அதிகாரமாக இருக்க வேண்டும் என்பதை குறிப்பிட அது suzerainty என்ற வார்த்தையை பிரயோகித்தது.

இந்தியாவின் இந்த வார்த்தைப் பிரயோகம் சீனக் குறிப்பில் "இறைமை" அல்லது "ஆதிபத்திய உரிமை" என்று பொருள் படும் படியாக sovereignty ஆக இடம்பெற்று விட்டது.

இந்த சொற் சிலம்ப குழறுபடி திபெத் மீதான சீனவின் பிடி இறுகுவதற்கு வசதியாக அமைந்து விட்டது என்கிறர்கள் நிபுணர்கள்.

## ஒப்பந்தத்தில் குழறுபடி

அத்துடன் 1954 இல் சீனவுடன் இந்தியா செய்து கொண்ட வர்த்தக ஒப்பந்தம் ஒன்றில் மற்றொரு குழறுபடியும் நிகழ்ந்து விட்டது என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

இந்தியாவுக்கும் சீனவின் திபெத்திய பிராந்தியத்துக்கும் இடையிலான வர்த்தக பரஸ்பர தொடர்பு ஒப்பந்தமே திபெத்தின் நிலைமையை மோசமாக்கியது.

திபெத் சீனவின் ஒரு பகுதி தான் என்பதற்கு இந்தியாவின் பூர்வாங்க அங்கீகாரத்தைப் பெறுவதற்கு சீனர்கள் செய்த தந்திரம் இது என்று கூறப்படுகிறது.

தனக்கு தனக்கென்றல்தான் சுளகும் படக்கு படக்கென்று அடிக்கும். எனவேதான் இங்கு ஊரார் வீட்டு நெய்யே என் பெண்டாட்டி கையே என்ற விதத்தில் காரியம் நடைபெற்றிருக்கிறது என்கிறர்கள் அரசியலை அலசுபவர்கள்.

அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் 1980 இல் சுமார் 570 கோடி டாலர் இருதரப்பு வர்த்தகம் நடைபெற்றது. இதில் இந்தியாவுக்கு சாதகமாக சுமார் 67

# இறக்குமதிக்கு கட்டுப்பாடு

உலகிலேயே யானைத் தந்தங்களை பெருமளவில் இறக்குமதி செய்துவரும் ஜப்பான், யானைத் தந்த இறக்குமதிக்கு இப்போது கட்டுப்பாடு விதித்துள்ளது.

ஆபிரிக்க யானைகளை அழிவில் இருந்து காப்பாற்றும் நடவடிக்கையாகவே தந்த இறக்குமதி கட்டுப்படுத்தப் பட்டிருப்பதாக ஜப்பானிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆபிரிக்க நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்படும் தந்தங்களைத் தவிர ஏனைய தந்தங்களும் தந்தத்திலான பொருட்களும் தடை செய்யப்பட்டுள்ளன.

ஏற்கனவே, அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகள் இறக்குமதிக்கு தடை விதித்துள்ளன.

ஜப்பான் சிறிய நாடானலும் உலகின் மொத்த தந்த இறக்குமதியில் நாற்பது சதவீதத்தை அந்நாடு இறக்குமதி செய்து வருகிறது. யானைத் தந்தமென்றல் ஜப்பானியர்களுக்குக் கொள்ளை ஆசை!

(அ-032)



தலைநகரில் தரமான 22 கரட்
தங்க வைர நகைகளுக்கு
நம்பிக்கையான ஸ்தாபனம்
அம்பிகா
ஜுவல்லர்ஸ்
77 செட்டியார் தெரு கொழும்பு-11
தொலைபேசி: 22839-34238

சிந்தாமணி ஆரம்

இல 1022

CHINTAMANI MAGAZINE SECTION

9—7—1989

தலைநகரில் தரமான 22 கரட்
தங்க வைர நகைகளுக்கு
நம்பிக்கையான ஸ்தாபனம்
Ambiga
77 Jewellers (PTE) Limited
Sea Street, Colombo 11.
Tele: 22839-34238.

# தமிழ் மொழியின் சொற்சிறப்பு தனித்தன்மை வாய்ந்தது

உலகில் முதன் முதல் மக்கள் பிறந்த நாடு தமிழ்நாடு அவர்கள் முதன் முதலில் வாய் திறந்து பேசிய மொழி தமிழ் மொழி. அது நமது மொழி.

இவ்வுலகில் தோன்றி மறைந்த மொழிகள் பல. இன்றிருப்பன ஏறக்குறைய இரண்டாயிரமாகும். இவற்றுள் வேறு எந்த மொழிக்கும் இல்லாத சிறப்புகள் பலவற்றை தமிழ் மொழி மட்டுமே பெற்றிருக்கிறது.

அவை தொன்மைச் சிறப்பு, தனிமைச் சிறப்பு, இனிமைச் சிறப்பு, இளமைச் சிறப்பு, எளிமைச் சிறப்பு, ஒலிச் சிறப்பு, உருபுச் சிறப்பு, தொடர்புச் சிறப்பு, பண்புச் சிறப்பு, எழுத்துச் சிறப்பு, சொற் சிறப்பு, பொருட் சிறப்பு, கவிதைச் சிறப்பு, உவமைச் சிறப்பு, இலக்கியச் சிறப்பு, இலக்கணச் சிறப்பு என பதினாறு ஆகும்.

இவற்றுள் சொற் சிறப்பு என்பது தமிழில் ஒரு தனித் தன்மை வாய்ந்தது. இச் சிறப்பைப் பிற மொழிகளிற் காண இயலாது.

அம்மொழிகளின் சொற்கள் பல எழுத்துக்களைக் கொண்டு நீண்டு காணப்படும்.

தமிழில் உள்ள சொற்களில் 7 எழுத்துக்களைக் கொண்டவை சில. பல ஐந்து எழுத்துக்களையே கொண்டவை. 4, 3, 2 எழுத்துக்களைக் கொண்ட சொற்கள் மிகை.

ஒரு எழுத்துச் சொற்களும் இல்லாமலில்லை. இதனை ஓரெழுத்து ஒரு சொல் எனவும் கூறுவதுண்டு.

பின் வருவனவற்றைக் காண்க:

ஆ. பசு.
கோ. மன்னன்.
கா. கொடு.
தை. மாதம்.
பை. சாக்கு.
போ. போக்குதல்.
ஈ. ஒரு உயிர்.
கை. ஒரு உறுப்பு.
தீ. நெருப்பு.
நா. நாக்கு.
பூ. மலர்.
வா. வரவேற்றல்.
மை. கண்ணின் மை.

தாழ 86,000. இவை எழுத்தின் பெருக்கத்தையும், சொல்லின் பெருக்கத்தையும், தமிழின் வளத்தையும் ஒருங்கே காட்டுவன.

பிறமொழிச் சொற்கள் உருவத்தை மட்டுமே காட்டக் கூடியவை. தமிழ் மொழிச் சொற்கள் உருவத்தையும், பருவத்தையும் சேர்த்துக் காட்டக் கூடியவை.

"பெண்" என்பதற்கு ஆங்கிலேயர் "வுமன்" என்பர். வடமொழியினர் "ஸ்திரீ" என்பர். இவை இரண்டும் உருவத்தை மட்டுமே காட்டுகின்றன. பருவத்தைக் காட்டுவதாக இல்லை. காட்ட வேண்டுமானால் "யங்", "ஓல்டு" என்பதையும் "பால்ய" "வயோதிக" என்பதையும் சேர்த்துக் கூறியாக வேண்டும்.

இவை அம்மொழிகளிலுள்ள சொல் வளத்தைக் காட்டுவனவாயில்லை. தமிழில் உள்ள சொற்கள் உருவத்தையும் அதன் பருவத்தையும் காட்டுவதைக் கண்டு மகிழுங்கள்:

பேதை — 5 வயதுக்கும் கீழ்
பெதும்பை— 10 வயதுக்கும் கீழ்
மங்கை — 16 வயதுக்கும் கீழ்
மடந்தை — 25 வயதுக்கும் கீழ்
அரிவை — 30 வயதுக்கும் கீழ்
தெரிவை — 35 வயதுக்கும் கீழ்
பேரிளம்பெண் — 45 வயதுக்கும் கீழ்
மூதாட்டி — 60 வயதுக்கும் கீழ்

## ஒரு உருவத்தின் பருவத்தைக் கூட ஒரே வரியில் கூற வார்த்தை உண்டு

பையன் — பள்ளிப் பருவம்
காளை — காதற் பருவம்
தலைவன் — குடும்பப் பருவம்
முதியோன் — தளர்ச்சிப் பருவம்

கிழவன் — இறுதிப் பருவம்

இவை அனைத்திற்கும் "மேன்" எனும் ஆங்கிலச் சொல்லோ, "புருஷன்" எனும் வடமொழிச் சொல்லோ பொருந்துமா? என எண்ணிப் பாருங்கள். இவை அம்மொழிகளின் சொற் பஞ்சத்தையே காட்டுகின்றன.

ஆண், பெண் மட்டுமல்ல. "பூ" என்பதை எடுத்துக் கொள்ளுங்கள். "ப்ளவர்" என்பர் ஆங்கிலேயர். "புஷ்பம்" என்பர்



முத்தமிழ்க்காவலர்

— கி. ஆ. பெ. விசுவநாதம் —

வடமொழியினர். அவ்வளவுதான். உருவத்தையும், பருவத்தையும் காட்ட அவர்களிடம் சொற்களில்லை. தமிழிற் பாருங்கள்:

அரும்பு — அரும்பும் பருவம்

மொட்டு — மொக்குவிடும் பருவம்

முகை— முகிழ்க்கும் பருவம்

எடுங்கள் வடமொழியினர் இதை "பத்திரம்" என்பர். ஆங்கிலேயர் "லீவ்ஸ்" என்பர் அச்சொற்கள் "இலை" என்ற உருவத்தையே காட்டுகின்றன. அதன் பருவத்தைக் காட்டவில்லை.

தமிழ்ச் சொற்களோ உருவத்தையும் குறித்து, பருவத்தையும் காட்டி, இன்னும் ஒருபடி தாண்டி அதன் வர்ணத்தையும்

பழுப்பு — முதுமைப் பருவம், மஞ்சள் வர்ணம்.

சருகு — கிழட்டுப் பருவம், சிவப்பு வர்ணம்.

தமிழில் உள்ள இச்சொற்கள் உருவம், பருவம், வர்ணம், ஆகிய மூன்றையும் ஒருங்கே காட்டுவதைக் கண்டு களியுங்கள்:

Gem என்று எழுதி அதையே ஜெம் என்றும், கெம் என்று படிப்பர்.

Talk டோல்க் என்று எழுதி டோக் என்றும், Walk வோல்க் என்று எழுதி வோக் என்றும் படிப்பர்.

Station - ஸ்டேடியன் என்று எழுதி அதை ஸ்டேசன் எனச் சொல்லச் சொல்லுவர். San என்றும், Son என்றும், Sun என்றும் எழுதி அவை அனைத்தையுமே "சன்" எனப் படிக்கச் சொல்லுவர்.

இத்தகைய சொற் கொலைகள் தமிழில் இராது.

அரிசியைக் குறிக்கும் ஆங்கிலச் சொல் "ரைஸ்" (Rice) சோற்றைக் குறிக்கும் சொல்லும் ரைஸ்தான். இது ஆங்கில மொழியின் சொற் பஞ்சத்தைக் காட்டுகிறது.

இதனை அரிசி கேட்பவர்க

"ரைஸ்" என்கின்றனர். இதை யாரால் மறுக்க முடியும்? இத் துன்பங்கள் தமிழ்ச் சொற்களால் வருவதில்லை.

கணவனையும் பிற ஆண் பிள்ளைகளையும் வேறு பிரித்துக் கூற தமிழிற் சொற்கள் உள்ளன. வட மொழியில் அவ்வாறில்லை. இரண்டிற்கும் "புருஷன்" என்ற சொல்.

"என் கணவர் இன்னொரு ஆண்பிள்ளையுடன் வந்தார்" என ஒரு பெண் கூறலாம். "என் புருஷன் இன்னொரு புருஷனுடன் வந்தான்" என்று எப்படிக் கூற முடியும்? கூறினால் என்ன ஆகும்? தமிழ்ச் சொற்களால் இத்தகைய தொல்லைகள் ஏற்படுவதில்லை.

தமிழ் மொழியில் பல பொருள் குறிக்கும் ஒரு சொல் என்றும், ஒரு பொருள் குறிக்கும் பல சொல் என்றும் உண்டு.

"மா" என்பது ஒரு சொல். அது பல பொருள்களைக் குறிக்கும். அழைப்பு, அழகு, அளவு, அறிவு, ஆணி, இடித்த மா, இடை, கட்டு, கறுப்பு, ஒரு மரம், குதிரை, ஈசை, செல்வம், தாய், நஞ்சுக்கொடி, நிறம், பரி, பெருமை, மேன்மை, வண்டு, வயல், வலி, விலங்கு முதலியன.

வளத்தைக் காட்டுவனவாம்.

"ராம ஜெயம்" என்பது வடமொழியிலுள்ள இரு சொற்களைக் கொண்ட ஒரு சொற்றொடர். இதன் பொருள் என்ன? இது வேற்றுமை உருபு அற்றது ஆதலின் பொருளை விளக்காது நிற்கிறது.

தமிழில் வேற்றுமை உருபு கலப்பதால் அது பொருளை நன்கு விளக்கும் வலிமையைப் பெறுகிறது.

இராமனை வெற்றி
இராமனுக்கு வெற்றி
இராமனது வெற்றி
இராமனே வெற்றி
இராமனால் வெற்றி
இராமனின் வெற்றி
இராமனிடத்தில் வெற்றி
— என்று தமிழிற் கூறலாம்.

"ராம ஜெயம்" என்பது இதில் எதைக் குறிக்கிறது? தமிழில் உள்ள சொல் வளத்தையும், பிற மொழிகளிலுள்ள சொற் பஞ்சத்தையும் காட்ட இது ஒன்றே போதுமானது.

"தமிழ் வளம் பெற்ற ஒரு மொழி. அதன் சொற் சிறப்பு ஒரு தனிச் சிறப்பு. அது என் தாய் மொழி. அதற்காக நான் பெருமையடைகிறேன்" என்று கூற ஒவ்வொரு தமிழனுக்கும் உரிமையுண்டு.

அவ்வாறு நெஞ்சு நிமிர்ந்து நின்று கூறும் உரிமையுடையவன் தமிழன் ஒருவனே.

"எங்கள் தமிழ்
வானம் அளந்த தனைத்தும்
அளந்த தமிழ்,
எங்கள் தமிழ்,
வானம் அறிந்த தனைத்தும்
அறிந்த தமிழ்
எங்கள் தமிழ் மொழி,
எங்கள் தமிழ் மொழி
என்றென்றும்

ஆ. பசு.
கோ. மன்னன்.
தா. கொடு.
தை. மாதம்.
பை. சாக்கு.
போ. போக்குதல்.
ஈ. ஒரு உயிர்.
கை. ஒரு உறுப்பு.
தீ. நெருப்பு.
நா. நாக்கு.
பூ. மலர்.
வா. வரவேற்றல்.
மை. கண்ணின் மை.
வை. வைக்கச் செய்தல்.

— இவை ஓரெழுத்துச் சொல் எனப்படும்.

தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கை 247. தனித் தமிழ்ச் சொற்களின் எண்ணிக்கை ஏறத்

மங்கை — 16 வயதுக்கும் கீழ்

மடந்தை — 25 வயதுக்கும் கீழ்

அரிவை — 30 வயதுக்கும் கீழ்

தெரிவை — 35 வயதுக்கும் கீழ்

பேரிளம்பெண் — 45 வயதுக்கும் கீழ்

மூதாட்டி — 60 வயதுக்கும் கீழ்

கிழவி — அதற்கு மேல்

ஆண் இனத்தின் பருவத்தையும் பாருங்கள்.

பிள்ளை — குழந்தைப் பருவம்

சிறுவன் — விளையாட்டுப் பருவம்

வடமொழியினர். அவ்வளவு தான். உருவத்தையும், பருவத்தையும் காட்ட அவர்களிடம் சொற்களில்லை. தமிழிற் பாருங்கள்:

அரும்பு — அரும்பும் பருவம்

மொட்டு — மொக்குவிடும் பருவம்

முகை— முகிழ்க்கும் பருவம்
மலர்— மலரும் பருவம்
அலர்— மலர்ந்த பருவம்
வீ — முதுமைப் பருவம்
செம்மல் — இறுதிப் பருவம்

எப்படி தமிழில் உள்ள சொல் வளம்?

பூவை விட்டு இலையைத் தான் எடுங்கள் வடமொழியினர் இதை "பத்திரம்" என்பர். ஆங்கிலேயர் "லீவ்ஸ்" என்பர் அச் சொற்கள் "இலை" என்ற உருவத்தையே காட்டுகின்றன. அதன் பருவத்தைக் காட்டவில்லை.

தமிழ்ச் சொற்களோ உருவத்தையும் குறித்து, பருவத்தையும் காட்டி, இன்னும் ஒருபடி தாண்டி அதன் வர்ணத்தையும் கூட நினைவூட்டி மகிழ்விக்கின்றன.

கொழுந்து — குழந்தைப் பருவம், சாம்பல் வர்ணம்.

தளிர் — இளமைப் பருவம், புளியங்கொட்டை வர்ணம்.

இலை — நடுப் பருவம், பச்சை வர்ணம்.

இத்தகைய சொற் கொலைகள் தமிழில் இராது.

அரிசியைக் குறிக்கும் ஆங்கிலச் சொல் "ரைஸ்" (Rice) சோற்றைக் குறிக்கும் சொல்லும் ரைஸ்தான். இது ஆங்கில மொழியின் சொற் பஞ்சத்தைக் காட்டுகிறது.

இதனால் அரிசி கேட்பவர்களுக்குச் சோறும், சோறு கேட்பவர்களுக்கு அரிசியும் கிடைத்துவிடலாம்.

உணவு விடுதிகள் பலவற்றில் "சோறு" எனக் கூறி வேகாத அரிசியையே படைக்கின்றனர்.

வயிறெரிந்த மக்கள் இது என்ன? என்று கேட்டால்

அது பல பொருள்களைக் குறிக்கும். அவை, அழகு, அளவு, அறிவு, ஆணி, இடித்த மா, இடை, கட்டு, கறுப்பு, ஒரு மரம், குதிரை, ஈ, செல்வம், தாய், நஞ்சுக்கொடி, நிறம், பரி, பெருமை, மேன்மை, வண்டு, வயல், வனி, விலங்கு முதலியன.

அடுத்த ஒரு பொருள் குறிக்கும் பல சொல்லாவன: வேழம், களிறு கரி, கைமா, நடைமலை, கைமலை, கறையடி, ஒருத்தல், அறுகு, ஆம்பல், நந்தி, தும்பி, தூங்கல் என்ற இவை அனைத்தும் "யானை" என்ற ஒன்றையே குறிப்பன. இவை தமிழின் சொல்


வானம் அளந்த தனைத்தும்
அளந்த தமிழ்,
எங்கள் தமிழ்,
வானம் அறிந்த தனைத்தும்
அறிந்த தமிழ்
எங்கள் தமிழ் மொழி,
எங்கள் தமிழ் மொழி
என்றென்றும்
வாழியவே, அது
எங்கும் பரவிச் சுடரொளி
வதி
எழிலுடன் வாழியவே"

— என்று வாய் திறந்து கூறுங்கள். வாழட்டும் தமிழ் மொழி! வளரட்டும் தமிழ் சிறப்பு!

(மு

# தியாக உணர்வை முஸ்லிம்கள் வாழ்வில் வளர்க்க வேண்டும்

## ஹஜ்ஜுப்பெருநாள் உணர்த்தும் பாடம்



ஹஜ்ஜை நிறைவேற்ற மக்காவில் கூடிய ஹாஜிமார் புனித கஃபதுல்லாவை வலம் காட்சி.

ஈகையின் பெருமையை வலியுறுத்திய "ஈதுல் பித்ர்" பெருநாளைக் கொண்டாடிய நாம் தியாகத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பெருநாளாக ஹஜ்ஜுப் பெருநாளை நான்கு தினங்களுக்குள் கொண்டாடுகிறோம்.

அல்ஹம்துலில்லாஹ்!

ஹஜ் யாத்திரையோடு தொடர்புடையதாக வரும் இந்தத் தியாகப் பெருநாள் மகத்தான மாபெரும் வரலாற்று நிகழ்வு ஒன்றை எமக்கு நினைவூட்டிக் கொண்டு இருக்கிறது.

இன்று உலகெங்கும் தியாகம் பற்றி பேசப்படுகிறது.

ஆனால் ஹஜ்ஜுடன் தொடர்புபட்டதாகவரும் "ஈதுல் அல்ஹா" தியாகப் பெருநாள் புகட்டும் தியாகம் யாராலும் நினைத்துப் பார்க்கக் கூட முடியாத ஒன்று.

அல்லாஹ்வின் தோழர் (கலீல்லாஹ்) நபி இபுறுஹீம் (அலை) அவர்கள் புரிந்த தியாகச் சம்பவம் இஸ்லாமிய வரலாற்றில் மிக முக்கியத்துவம் பொதிந்ததாகும்.

கடும் தவமிருந்து கிடைக்கப் பெற்ற அருமைப் புத்திரர் நபி இஸ்மாயீல் (அலை) அவர்களைத் தனது சொந்தக் கரங்களாலேயே அறுத்துப் பலியிடுவது என்றால் எவ்வளவு பெரிய சோதனை?

சோதனையில் நபி இபுறுஹீம் (அலை) அவர்கள் தளரவில்லை. குழந்தை மீதான அன்பு மேலீட்டால் அல்லாஹ்வின் ஆக்ஞையை நிறைவேற்றாமல் இருக்கவும் இல்லை.

அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணிவோம். அவனுக்காக எதையும் அர்ப்பணிக்கத் தயங்க மாட்டோம்.

இந்த மேலான கோட்பாடு நபி இபுறுஹீம் (அலை) அவர்களிடமும் அன்னை ஹாஜரா (ரலி) அவர்களிடமும் மகனார் இஸ்மாயீல் (அலை) அவர்களிடமும் குடி கொண்டிருந்தது.

ஆகவேதான் இஸ்லாமிய வரலாற்றுப் பேரேட்டின் அத்தியாயங்கள் இந்த மூவரையும் மாபெரும் தியாக சீலர்களாகக் கருதுகின்றது.

எம்மையும் தியாக உணர்வுடன் வாழத் தூண்டுகிறது.

"இங்கேயே ஓர் இல்லத்தைக் கட்டுங்கள். இக்கல்லையும் மண்ணையும் கொண்டே கட்டுங்கள்.

ஆனால் இல்லம் உங்களுக்கானதல்ல. என் வணக்கத்துக்குத்தான்.

இந்த இல்லத்தை என் பெயரில் அர்ப்பணம் செய்யுங்கள். இந்த இல்லத்தை நோக்கி வருமாறு உலக மக்களுக்கு அறிவித்து விடுங்கள்."

அல்லாஹ்வின் இந்த ஆணையை தியாகத்தின் முன்னோடி வழிகாட்டி நபி இபுறுஹீம் (அலை) அவர்கள் சிரமேற்கொண்டார்கள்.

அல்குர்ஆன் இந்த வரலாற்று நிகழ்வை —

"இங்கு ஹஜ்ஜு செய்ய வருமாறு உலக மக்களுக்கு அறிவித்து விடுங்கள்" என்று கூறிக் கொண்டிருக்கிறது.

**எப்.எம். பைரூஸ்**

இறை ஆணையை ஏற்ற நபி இபுறுஹீம் (அலை) அவர்கள் உலக மக்களுக்கு அவ்வாறே அறிவித்தார்கள். வலியுறுத்தினார்கள். தமது பிரசாரத்தை உலகெங்கும் பேரொலியாகக் கிளப்பினார்கள்.

இந்தத் தியாகசீலர் நபி இபுறுஹீம் (அலை) அவர்கள் எழுப்பிய பேரொலி புனித கஃபாவில் சுவர்களிலே என்றென்றும் எதிரொலித்த வண்ணமாகவே இருக்கிறது—

"லப்பைக் அல்லாஹும்ம லப்பைக்! லாஷரீக்க லக்க லப்பைக்! அல்லாஹ்வே!, இதோ ஆஜராகி இருக்கிறோம்—

இணையற்ற அல்லாஹ்வே! (உன் பணியில்) இதோ ஆஜராகி இருக்கிறோம்.

இந்த "தல்பியா" முழக்கம் ஹாஜிமார்களின் உள்ளத்தில் இருந்து வெளிப்பட்டு வாயினால் உச்சரிக்கப்படுகின்றது—

இது கஃபாவிலும் எதிரொலிக்கிறது—

இந்தப் புனித கஃபாவிலே ஹாஜிமார் அணிதிரளும் அரிய காட்சி உலக ஒற்றுமைக்கும் சமாதானத்துக்கும் மகத்தான ஒரு எடுத்துக் காட்டாகும்—

சுருங்கச் சொல்வதானால் ஹஜ் ஓர் உலக சமாதான மாநாடாகும்— சர்வதேச ஒற்றுமை மாநாடாகும்—

உலகில் இன்று அமைதி இல்லை எங்கும் பிரச்சினைகள்.

இன மத குல நிற வேற்றுமைகளால் உலகம் பிளவுபட்டு உள்ளது—

உலகில் வாழும் பல்வேறு நாட்டு மக்களும் பிரிவினை கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்—

நாடுகளுக்கு மத்தியிலும் கூட கருத்து வேறுபாடுகள் சமாதானம் தோரும் ஒலிகள் எங்கும் ஒலிக்கின்றன—

உலக சமாதானத்துக்கு இன்று பல்வேறு கோணங்களில் இருந்தும் அச்சுறுத்தல்களும் சவால்களும் விடப்படுகின்றன—

இந்த நிலையில் இஸ்லாமிய சகோதரத்துவ ஒற்றுமை மாநாடான ஹஜ் சகல பிரிவினைகளையும் பிணக்குகளையும் கருத்து வேற்றுமைகளையும் மற்றுமுண்டான பலதரப்பட்ட வேற்றுமைகளையும் கடந்து சிறப்பான ஒரு உச்ச கட்டத்தில் அமைகிறது—

ஹஜ்ஜுப் பெருநாளிலே முக்கியத்துவம் பெறும் குர்பான் மற்றுமொரு சிறப்பம்சமாகும்—

அருமை மகனார் இஸ்மாயீல் (அலை) அவர்களை அல்லாஹ்வுக்காக அறுத்துப் பலியிடத் துணிந்த நபி இபுறுஹீம் (அலை) அவர்களில் செயலை ஏற்றுக் கொண்ட அல்லாஹ்விடமிருந்து இபுறுஹீமே கனவை நீங்கள் உண்மையாக்கி வைத்தீர் என்ற இறை வாக்கு அறிவிக்கப்பட்டது—

இதற்குப் பகரமாக பெரியதோர் ஆட்டை அறுத்துப் பலியிடவும் கட்டளையிடப்பட்டது.

இந்தச் சம்பவத்தின் நினைவாகவே இன்று மிருகங்களை அறுத்து முஸ்லிம்கள் குர்பான் கொடுக்கின்றனர்—

குர்பானிலே அறுக்கப்படும் மிருகத்தின் இரத்தமோ மாமிசமோ அல்லாஹ்வை சென்றடைவதில்லை—

ஆனால் அறுக்கப்படும் பிராணியை பலியிடும் போது உள்ளத்தில் உள்ள தக்வா என்ற பயபக்தியும் பரிசுத்த தன்மையுமே அல்லாஹ்வை அடைகின்றன—

இவ்வாறு அல்லாஹ் திருமறையில் குர்பானுக்கு அரிய விளக்கம் கொடுத்துள்ளான்.

நபி இபுறுஹீம் (அலை) அவர்களைப் போன்ற பெரும் தியாகம் செய்யும் அளவுக்கு எமக்கோ சக்தி இல்லை—

அத்தகையதொரு (உயிர்ப் பலி) தியாகத்தைப் புரிய துணிவும் தைரியமும் திராணியும் கூட எமக்கு இல்லை.

ஆகவே —

எம்மால் இயன்ற அளவு தியாகங்களை நாம் செய்ய உறுதிபூணுவோம்—

இயன்றவர்கள் — வசதிமிக்கவர்கள் தமது ஆற்றலுக்கு ஏற்ப சிறு சிறு தியாகங்களைப் புரியலாம்—

எல்லாச் செயல்களும் "நிய்யத்" என்ற சீரிய எண்ணத்தைப் பொறுத்ததே!

ஆகவே — தியாகம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தை நெஞ்சில் கொள்வோம்—

தியாகம் புரிவோம்—

ஈத் முபாரக்! (ர ..007)

# அவளுக்கு வந்த மொட்டைக் கடிதம்



பொ. பத்மநாதன்

— 37 —

ஒரு ஆற்றாமையான உத்வேகத்தோடு வெளியே கிடந்த உடைகளை அப்படி அப்படியே எடுத்த சூட்கேஸுக்குள் திணித்து பெட்சீற்றை எடுத்து உதறிப் பொதிந்து மற்றப் பொருட்களை அடுத்த சூட்கேஸினுள் போட்டு மளமள வென்று அறையைக் காலி செய்கிறாற் போல் வைத்தாள்.

பின் வெறும் மெத்தையில் வந்து உட்கார்ந்த போது ஊதிய பலூன் ஓசையோடு வெடிப்பது போல் அழுகை ஓவென்று வெளிவரப் பார்த்தது.

"கடைசியில்... கடைசியில் கிரி நீங்கள் கூட என்னைக் கேவலமாகு முடிவு கட்டித்தான் இவள் தானாகப் போய்விட வேண்டுமென்றுதானே கடிதத்தை நாசூக்காகத் தந்து விட்டுப் போனீர்கள்"

நெஞ்சு ஓங்கி ஓங்கி விம்மியது. அவர் போகும் போது கடைசியாகக் கூறிய வார்த்தைகள் அப்போது அவளுக்குத் தப்பாகவே புரிந்தன.

"நான் பிறகு வந்து உங்களோடு ஆறுதலாகப் பேச வேண்டும்"

கடிதம் தந்த நோக்கத்தைப் புரிந்து கொண்டு அங்கிருந்து கிளம்பாவிட்டால் அவராக நியாயங்களைச் சொல்லி அவளைப் போகச் சொல்லிக் கேட்கப் போகிறாரா?

அவளுக்கு அதற்கு மேலும் அந்த நிலையைத் தாங்க முடியவில்லை. அப்படியே அட்டையாகக் கட்டிலில் சுருண்டு படுத்துக் கொண்டு மளமளவென்று கண்ணீர் பெருக்கினாள்.

ஒரு நேரம் சாப்பிடப் போகச் சுணங்கிவிட்டால் ஒன்பது தடவைகள் ஓடியோடி வந்து கேட்கும் ரம்யா அவள் மயக்கம் தெளிந்த பின்பும் அந்த அறைப் பக்கமே வரவில்லை. என்ற வேறு அப்போது வெகுவாக அவளை உறுத்தியது.

பெரியம்மாதான் இரண்டு தடவைகள் வந்து பார்த்துவிட்டு ஹோர்லிக்ஸ் கரைத்துக் கொடுத்து விட்டுப் போயிருந்தாள்.

அழுத்தத்தோடு ரிஸீவரை வைக்கும் ஓசை கேட்டது.

இவர் இப்படி யோசித்தும் செய்திருக்க மாட்டாரென அவளது மனத்திலிருந்த அற்ப சொற்ப நம்பிக்கையும் மண்ணாக அவள் பிரமை பிடித்தவள் போல் நின்றாள்.

ரிஸீவரை திரும்பவும் அதே இடத்தில் வைத்துவிட்டு திரும்பும் போது அவளுக்கு எல்லாமே அஸ்

அங்கேயே உட்கார்ந்து கொண்டாள்.

இலேசாக ஒருக்களித்திருந்த அறைக் கதவைத் தள்ளித் திறந்து கொண்டு கிரிதரன் உள்ளே வந்த வேகத்தில் சுதர்ஸன திகைத்தாற் போல நிமிர்ந்து பார்த்து விட்டு மெல்லத் தலையைத் தாழ்த்திக் கொண்டாள்.

அவள் அப்போதும் கட்டிலில் தான் உட்கார்ந்திருந்தாள். தான்

வர கிரிதரனின் நெற்றிப் பக்கம் சுருங்கி ஒரு முள்ளாக இறுகியது.

அறியாமையினாலோ அவசரத்தினாலோ அவள் செய்கிற இந்த அவமானம் உள்ளூரக் குமைந்து கொதிக்கிற அளவுக்கு அவருக்கு ஒரு ஆத்திரத்தை உண்டாக்கினாலும் அவர் படபடக்காமல் அவளுக்கு மட்டும் கேட்கிறாற் போல் மெலிதாகவே கேட்டார்-


"போவதென்று முடிவே செய்து விட்டாற் போலிருக்கு"

அவள் தலையை நிமிர்ந்து பார்க்கவில்லை. ஒரு வார்த்தைதானும் பேசவுமில்லை. இரு துளி கண்ணீர் பொங்கி விழப் போவதாகப் பயமுறுத்தியது.

உங்களுக்கு ஒரு உண்மையை நான் சொல்ல வேண்டும் நீங்கள் இங்கே வந்த அன்றே உங்கள் வாழ்க்கையில் நடந்த சகல உண்மைகளையும் உங்கள் அப்பா என்னிடம் சொல்லுறரென்றால் உங்களால் நம்ப முடியுமா?"

அவள் தூக்கி வாரிப் போட்டவளாக அவரைப் பார்க்க அவர் நிதானம் குலையாமல் தொடர்ந்தார்.

"இத்தனை நாட்கள் இங்கே இருக்கிறீர்கள் என்னைப் பற்றி அறவே புரிந்து கொள்ளாமல் இருக்கிறீர்கள். எனக்கு வந்த மொட்டைக் கடிதத்தை நீங்கள் நினைத்த காரணத்துக்காக உங்க



தமனமாகத் தெரிந்தது. பிரேதம் போல் வெளுத்துவிட்ட அவள் முகத்தைப் பார்த்த நல்ல வேளையாக அந்த இடத்தில் ரம்யாவோ பெரியம்மாவோ இல்லை

அங்கிருந்து புறப்படப் போவது எந்த விதத்திலும் தன்னைப் பாதிக்க வில்லை என அவருக்குக் காட்ட வேண்டுமென்று அவள் பிடிவாதமா... நினைத்திருந்தும் அழுகை

...திரையை இழுத்து அவளின் அருகாமையில் போட்டுக் கொண்டு உட்கார்ந்தார்.

"மிஸ் சுதா!" என்றார் அதே அடக்கமான குரலில் "என்னைப்

ளிடம் தருவதாயிருந்தால் நேரடியாகவே தந்திருப்பேன்.

ஏன் சொல்ல வேண்டியதைச் சொல்லியுமிருப்பேன். இரண்டு கடிதங்களையும்...

தீர்மானமும் என்கிறதா? அல்லது வாழ்க்கையில் உங்களை ஒருவன் வஞ்சித்ததை எண்ணி எல்லா ஆண்களையும் அப்படி நினைக்கும்படி உங்களிடம் ஒரு துக்ககர உணர்ச்சியை உண்டாக்கி விட்டது என்கிறதா?...

அவர் ஒரு அழுத்தத்துடன் பேச்சை நிறுத்த அவள் மரண அடிபட்டவள் போல் தவித்துப் போனாள்.

"பிளீஸ் டாக்டர் என்னை மன்னித்து விடுங்கள்" என்று திக்கித் திணறி ஆரம்பித்தவள் அதற்கு மேலும் அடக்கமாட்டாதவளாக விசிம்பியபடி அப்படியே சரிந்து அவரின் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

கொடுமையான ஒரு புயலில் அகப்பட்ட ஒரு துரும்பாக அவளின் முதுகுப் புறம் பதறியது "டாக்டர் நான் ரொம்பவும் தப்பாக நினைத்து விட்டேன் மன்னித்துக் கொள்ளுங்கள்—

சிறு குழந்தை போல் அவள் தேம்பியது அவரை நெகிழ வைத்தது சொல்ல வேண்டியதை இன்னும் நாசூக்காக இவளிடம் சொல்லியிருக்கலாமே என்று உள்ளூரத் துவித்தபடி அழாதேயம்மா...... அழாதேயம்மா... என்று அவளின் முதுகைத் தடவிக் கொண்டிருந்தார்...

ருரென்று அவளுக்கு உறுதியாகி விட்டது.

அப்படியொரு வெட்கங்கெட்ட சுதா அக்கா அப்பாவுக்கு முன்னால் எப்படிக் கூசிக் குறுகி நிற்கிறாவென்று பார்க்க வேண்டுமென்று அவளுக்கு ஒரு விசித்திரமான ஆவல் ஏற்பட்டது.

ஓசைப்படாமல் எழுந்து முன்புறமாக வந்தவள் வீட்டைச் சுற்றிக் கொண்டு வந்தாள் சுதர்ஸனாவின் அறையின் வலது பக்கத்துச் சுவரிலிருந்த யன்னல் பின்புறச் சுவரில்தான் இருந்தது.

பார்க்கும் போது அப்பா பார்த்துவிடக் கூடாதென்ற ஜாக்கிரதை உணர்வோடும் பயத்தோடும் யன்னலருகே வந்து இலேசாக ஒரு ஓரத்தால் உள்ளே பார்த்தாள்.

தொடர் கதை

## பதிலடி கொடுப்போம்!

— றிஸ்வியூ முஹம்மத் நபீல் —


பரத்தையர் உடலம் இந்தப்
பாரிடை முற்றும் இன்பம்
நிரம்பிய கலமே யென்று,
நெருங்கிடும் மாந்தா! வாழ்க்கைத்
தரத்தினை அழிக்கும்; மனிதத்
தன்மைக்கு மாசு சூட்டும்;
நரகினில் தள்ளும் கெட்ட,
நாற்றமே பரத்தை கண்டாய்!

★

பணத்தினை அள்ளி வீசிப்
பரத்தையர் சுகத்தை நாடும்,
குணத்தனே முதுமை கண்ட
கிழவனாய் மாற்றும்; சொற்ப
கணத்திலே மறைந்து போகும்;
காசினில் உயர்வு காண,
உணர்ச்சியில் மனம்வெ தும்பி
உழலுதல் கெடுதி யப்பா!

★

மான்சதி வலையுள் சிக்கி,
மருள்வது போலே மனிதா
ஏன்விலை மாதர் நெஞ்சில்
உறங்கிப்பின் விழிக்கின்றாயோ?
தான்மதி கலங்கித் தனிமை
தன்னிலே வாட நேரும்,
வீண்மொழி மாதர் நாட்டம்
வேண்டவே வேண்டாம் யார்க்கும்!



ஒரு நேரம் சாப்பிடப் போகச் சுணங்கிவிட்டால் ஒன்பது தடவைகள் ஓடியோடி வந்து கேட்கும் ரம்யா அவள் மயக்கம் தெளிந்த பின்பும் அந்த அறைப் பக்கமே வரவில்லை. என்ற வேறு அப்போது வெகுவாக அவளை உறுத்தியது.

பெரியம்மாதான் இரண்டு தடவைகள் வந்து பார்த்துவிட்டு ஹோர்லிக்ஸ் கரைத்துக் கொடுத்து விட்டுப் போயிருந்தாள்.

அந்த வீட்டில் தன்னை திட்டமிட்டு விலக்குவது போன்ற பிரமை மனதைத் தாக்கியது. அவளது சுய கௌரவம் அந்த விநாடியே அங்கிருந்து வெளியேறி விட வேண்டுமென்று கூறியது.

கிரி கூடவா இப்படி நடந்து விட்டார் என்ற கவலை அவளை வெகுவாக வாட்டியது. இந்த உலகத்தில் தான் மட்டும் தனியாகித் தவிப்பது போல அவள் மனம் ஏங்கியது.

முடிந்தளவுக்கு அழுது தீர்த்து விட்டு எழுந்த போது உடல் பலவீனத்தில் நொய்ந்தது. "மாலதி இப்போது அருகில் இருந்தால் எவ்வளவு நல்லது" என்று ஏக்கத்தோடு நினைத்தாள்.

இவளைச் சரியாகப் புரிந்து கொண்டவள் அவள் ஒருத்தி தானே?" எத்தனை ஆறுதல் கதைகளைக் கூறி தேற்றியிருப்பாள் அவள்.

வெளியே தொலைபேசி மணி அடிக்கும் ஓசை கேட்டது.

பெரியம்மா உள்ளே வந்தாள். அறைக்குள்ளிருந்த மாற்றத்தை அவள் நுட்பமாகப் புரிந்து கொள்ளவில்லை.

கண்களை அவசரமாகத் துடைத்துக் கொண்டு எழுந்த சுதர்ஸனாவின் அருகில் வந்து "அன்னை? உடம்பு சரியில்லையா?" என்று கவலையோடு கேட்டவள் "கிரி உன்னை டெலிபோனில் கூப்பிடுகிறார் அம்மா" என்றாள்.

சுதர்ஸனாவின் மனதில் ஆக்ரோஷமான குமைச்சலொன்று கிளர்ந்து கொண்டு எழுந்தது. கஷ்டத்தை தந்துவிட்டு அதனது எதிரொலியைப் பார்க்க விரும்புகிறாரா?

அருகில் நின்ற பெரியம்மாவுக்கு பதில் எதுவும் கூறாமல் விருக்கென்று வெளியே வந்தவள் ரிஸீவரைக் கையில் எடுத்த போது அழுகைக்கு மீறிய ஒரு ஆவேச உணர்ச்சி அவளை உந்தியது.

கிரிதரனின் குரல் கேட்கு முன்பே அவளை மளமளவென்று கொட்டித் தீர்த்துவிட்டாள்.

"டாக்டர்! என்னுடைய கடிதத்தோடு நீங்கள் வைத்திருந்த உங்களுக்கு வந்த கடிதத்தைப் பார்த்தேன். நீங்கள் யோசிக்க வேண்டாம் நான் இன்றைக்கு மெயிலிலேயே கொழும்புக்குப் போகிறேன்.

ஒரு விநாடி மௌனத்தை தொலைபேசி காட்டிய போது அவர் ஏதாவது சமாதானம் சொல்லுவாரென்று அவளின் மனம் நவித்தது. மறுபுறம் ஒரு தமனமாகத் தெரிந்தது. பிரேதம் போல் வெளுத்துவிட்ட அவள் முகத்தைப் பார்க்க நல்ல வேளையாக அந்த இடத்தில் ரம்யாவோ பெரியம்மாவோ இல்லை.

ரம்யா அறைக்குள் கட்டிலில் படுத்திருந்தபடி மேலே பார்த்துக் கொண்டிருந்தாள். அன்றைக்கு காலையில் அந்தப் புகைப்படத்தை பார்த்ததிலிருந்து ஏற்பட்ட அருவருப்பும் எரிச்சலும் சற்றும் குறையவில்லை.

இந்தச் சனியனுக்கு ஏன் அப்பா இங்கே இடம் கொடுத்தார் என்று அவளின் மனம் வெகுண்டு கொண்டிருந்தது. அந்தக் கணமே சுதர்ஸனாவை வீட்டைவிட்டு வெளியேற்றினாலும் அவளுக்கு திருப்தியாக இருந்திருக்கும். சுதர்ஸனாவுக்கு முன்னால் எதிர்ப்படுவதை இனி அவளுக்கு குமட்டுகிற விஷயமாக இருந்தது.

அப்பாவிடம் புகைப்பட விவரத்தை சொல்லுவோமா? என்று அடிக்கடி எண்ணினாள். என்னவென்று இதை அவரிடம் வாய்விட்டு கூறுவதென்றும் அவளுக்குப் புரியவில்லை. இப்படியான வெட்கங்கெட்ட விஷயங்களைச் சிநேகிதர்களுடன் பேசிக் கூட அவளுக்குப் பழக்கமில்லை. வித்தியா வந்தால் மனத் தேறுதலுக்காகவாவது கொஞ்சமாவது பேசலாமென்று நினைத்துக் கொண்டாள்.

கிரிதரன் அன்றைக்கு ஆஸ்பத்திரியிலிருந்து வரும் போது சற்றுத் தாமதமாகி விட்டது. முகம் கடுகடுவென்று ஒரு வேட்டைப் பயங்கரமாகத் தீர்க்க ஆயத்தமான மௌனத்தோடு இருக்கும் ஒரு பீரங்கி போல் இருந்தது.

ஆஸ்பத்திரியில் யாரோடும் பிரச்சினைப் பட்டிருப்பாரோ என்று கவலையோடு யோசித்த வண்ணம் விரைந்து போய் "ரீ" தயாரித்துக் கொண்டு வந்தாள் ரம்யா.

அறைக்குள் போய் உடை மாற்றிக் கொண்டு வந்து சோபாவில் உட்கார்ந்திருந்த கிரிதரன் "ரீ"யை வாங்கிக் குடித்துவிட்டு ஒரு யோசனையான மௌனத்தோடு ரம்யாவைப் பார்த்தார் "சுதா என்ன செய்கிறா?"

அவள் தலையைத் திருப்பி சுதர்ஸனாவின் அறைப்பக்கம் ஜாடை காட்டினாள். "உள்ளே இருக்கிறா"

நெற்றிப் பொட்டை சுட்டு விரலால் தேய்த்தபடி சற்று நேரத்துக்கு மௌனமாக இருந்தார் கிரிதரன். பிறகு ஒரு வேகத்தோடு எழுந்து சுதர்ஸனாவின் அறையை நோக்கிச் சென்றார்.

"சுதா அக்காவின் விஷயம் தான் ஏதாவது அப்பாவுக்கு தெரிந்து விட்டதோ" என்று ஒரு பரபரப்போடு நினைத்த ரம்யா காதைக் கூர்மையாக்கிக் கொண்டு

அங்கிருந்து புறப்பட்டுப் போவது எந்த விதத்திலும் தன்னைப் பாதிக்கவில்லை என அவருக்குக் காட்ட வேண்டுமென்று அவள் பிடிவாதமாக நினைத்திருந்தும் அழுகை முட்டிக் கொண்டு வெளிவரத் துடித்து சண்டித்தனம் செய்தது.

அடுக்கி வைக்கப்பட்டிருந்த அவளது பெட்டிகள் அவள் உட்கார்ந்திருந்த போதும் அவள் போவதற்கு நிஜமாகவே நிச்சயித்து விட்டாற் போல் படுக்கையில் கூட போட்டிருந்த பெட்சீற்றை எடுத்து விட்ட நிலைமை...

ஒரு விநாடிக்குள் பார்வையால் எல்லாவற்றையும் கணக்கிட்டு ... திரையை இழுத்து அவளின் அருகாமையில் போட்டுக் கொண்டு உட்கார்ந்தார்.

"மிஸ் சுதா!" என்றார் அதே அடக்கமான குரலில் "என்னைப் பற்றி உங்களுக்கு அதிகம் தெரியாது. அப்பாவுக்குத் தெரியும். நான் அவருக்குக் கடமைப்பட்டவன். நிறையக் கடமைப்பட்டவன்.

அவரின் மகள் என்னைப் பற்றிய ஒரு தப்பபிப்பிராயத்தோடு போகிறாவென்ற மனவருத்தத்தை தந்து விட்டு போகப் போகிறீர்கள். ஆனால் போவதற்கு நிச்சயித்தால் நான் அதைத் தடுக்கப் போவதில்லை.

ளிடம் தருவதாயிருந்தால் நேரடியாகவே தந்திருப்பேன்.

ஏன் சொல்ல வேண்டியதைச் சொல்லியுமிருப்பேன். இரண்டு கடிதங்களையும் ஹோஸ்பிட்டலில் வைத்து எழுத்து ஒற்றுமையைப் பார்த்து விட்டு தவறுதலாக நான் தந்து விட்டதை தவறுதலாகத் தந்திருப்பாரென்று உங்களால் புரிந்து கொள்ள முடியாததை எண்ண எனக்கு உண்மையிலேயே மிகவும் வருத்தமாக இருக்கிறது.

இதை பெண்களுக்கே உள்ள அவசர புத்தியும் நிச்சயமின்ற

தப்பாக நினைத்து விட்டேன் மன்னித்துக் கொள்ளுங்கள்—

சிறு குழந்தை போல் அவள் தேம்பியது அவரை நெகிழ வைத்தது சொல்ல வேண்டியதை இன்னும் நாசூக்காக இவளிடம் சொல்லியிருக்கலாமே என்று உள்ளூரத் தவித்தபடி அழாதேயம்மா...... அழாதேயம்மா... என்று அவளின் முதுகைத் தடவிக் கொண்டிருந்தார்...

ஹோலில் உட்கார்ந்திருந்த ரம்யாவுக்கு எரிச்சலான எரிச்சல் என்னடா போனதற்கு எதுவுமே கேட்கக் காணவில்லை என்று பதறிக் கொண்டிருந்தாள் திடீரென்று சுதர்ஸனாவின் அழுகை ஒலியைக் கேட்டதும் திகைத்துப் போய் விட்டாள்.

அடுத்து தான் எண்ணியது போல் அவர் அந்த புகைப்பட விஷயத்தைப் பற்றித்தான் பேசுகி

த் சுவரிலிருந்த யன்னல் பின்புறச் சுவரில்தான் இருந்தது.

பார்க்கும் போது அப்பா பார்த்துவிடக் கூடாதென்று ஜாக்கிரதை உணர்வோடும் பயத்தோடும் யன்னலருகே வந்து இலேசாக ஒரு ஓரத்தால் உள்ளே பார்த்தாள்.

வெடுக்கென்று நெற்றிப் பொட்டில் அறைந்தது போலிருந்தது அவளால் அவள் கண்களையே நம்ப முடியவில்லை—

சுதர்ஸனா மடியில் படுத்து விசும்பிக் கொண்டிருக்க கிரிதரன் தாழ்ந்த குரலில் அவளுக்குத் தேறுதல் கூறியபடி அவளின் முதுகை வருடிக் கொண்டிருந்தார்.

(தொடரும்)

### ஜனாஸாக்களை கபன் இடும் விவாதம்

# பணிப்பாளர் விளக்கமும் முஸாபிரின் இறுதிப் பதிலும்

நற்கூலிக்கும் லஞ்சத்திற்கும் பேதம் புரிய வேண்டாமா? என்ற தலைப்பில் 11-6-89 இல் முஸாபிர் என் தலையில் பாரிய குற்றச்சாட்டை சுமத்தி இருக்கிறார். இதற்கு விளக்கம் கூற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறேன்.

உலமாக்களுக்கும் மற்றவர்களுக்கும் ஜனாஸா குளிப்பாட்டுபவர்களுக்கும் இவர்கள் மார்க்க சேவையில் ஈடுபடுவதால் பணம் கொடுப்பதற்கு எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை.

அவர்கள் செய்யும் சேவைக்கு சன்மானம் பெறுவது இமாம்கள் இக்கொடுப்பனவு ஆகுமா என்று பத்வா கொடுத்திருப்பதை நான் அறிவேன். அவர்கள் செய்யும் சேவைக்கு அவர்கள் சன்மானம் பெறுவது அவர்களுடைய உரிமையும் கூட.

ஆனால் முஸாபிர் என்ற ஊர் சுற்றி எழுப்பிய பிரச்சினை வேறு; நான் எழுதியது வேறு. முஸாபிர் எழுதியதையும் என்னுடைய பதிலையும் கவனமாக வாசித்துப் பாருங்கள்.

"கிறிஸ்தவ மிஷனரிகளும் ஏனைய சகோதர இனத்துச் சமுதாய இயக்கங்களும் தங்களது மத போதனைகளுக்கும் மாநாடு உரையாடல்கள் கூட்டங்கள் போன்றவைகளுக்கும் பொதுமக்கள் பெருவாரியாக வருகை தருவதற்கு கையாளும் முறைகளென்ன வருகின்றவர்களுக்கு கூட்ட முடிவில் காகித உறையிலிட்டு கணிசமான தொகையை அன்பளிப்பாகத் தருகின்றனர். நேயர்கள் கவனிக்க வேண்டியது பயிற்சி பெறுவோருக்கு பணம் கொடுப்பதாகக் கூறவில்லை.

என்னுடைய பதில் "தீனுடைய விஷயத்தில் பணம் பகிர்ந்து மக்களை ஊக்குவிப்பது இஸ்லாமிய பாரம்பரியத்தில் இல்லை. இவ்வாறு பணம் பகிர்வது அல்லாஹ்வுக்காக செய்யும் ஒரு அமலில் லஞ்சம் கொடுத்து ஈமானை விலைக்கு வாங்குவது போன்றிருக்கும். கவனியுங்கள் மக்களைப் பெருந்திரளாக சேர்ப்பதைப் பற்றியே என்னுடைய பதில் இருக்கின்றது.

1. பிரசாரம் செய்வதற்காக வேறு மத ஸ்தாபனங்கள் பணம் கொடுப்பது போன்று நாங்கள் ஈமான் வாங்குவது போன்று நடக்க முடியாது என்பதிலிருந்து எதனை நான் குறிப்பிடுகிறேன் என்பதை முஸ்லிம் நேயர்கள் விளங்கிக் கொள்வார்கள்.

2. எமது பாரம்பரியத்தில் இல்லை என்று நான் எழுதி இருக்கும் போது ஜனாஸாவைக் குளிப்பாட்டுபவர்களுக்குப் பணம் கொடுப்பது தலைமுறை தலைமுறையாக எந்தவிதமான கருத்து வேறுபாடுமில்லாமல் நடந்து வருவதால் நான் அதனை குறிப்பிடவில்லை. என்று முஸாபிர் புரிந்திருக்க வேண்டும். அவர் தன்னுடைய கட்டுரையில் குறிப்பிட்டிருந்த பெருந்திரளான பொதுமக்களைப் பற்றியே எழுதினேன் என்பதை அறிந்திருக்க வேண்டும். அதற்குத்தான் நான் ஆட்சேபனை எழுப்பினேன்.

நாங்கள் ஏற்கனவே பிரயாணச் சீட்டும் பணமும் தருகிறோம் என்று இதனைத் தொழிலாக செய்ய விரும்புவோருக்கு பள்ளிகள், தைக்காக்கள் ஸாவியாக்கள் மூலமாக அழைப்பு விட்டிருந்தோம். அதற்கு உற்சாகமான பதில் இல்லாததால் மாதா மாதம் நடக்கும் ஹதீஸ் மஜ்லிஸில் பொதுமக்களுக்கு குளிப்பாட்டும் முறைகளை கற்றுக் கொடுத்தோம்.

இவர்களில் யாரும் இதனைத் தொழிலாகச் செய்வார்கள் என்று எமக்குத் தெரியாது ஆனால் இப்பொழுதும் 10 பெண்கள் இதனைத் தொழிலாகச் செய்வதற்கு முன்வருவார்களானால் அவர்களுக்குப் பிரயாணச் செலவும் பணமும் கொடுக்க நாங்கள் ஆயத்தமாக இருக்கிறோம்.

முஸாபிர் குறிப்பிடும் லஞ்சம் கிரிமினல் லஞ்சம். நான் எழுதியது பொது வழக்கில் பிரயோகிக்கும் லஞ்சம் ஆகுமென ஒரு செயலை செய்ய விரும்பாதவருக்கு அல்லது செய்ய நாடி இருக்காதவருக்கு பணத்தைக் கொடுத்து அதைச் செய்யும்படி செய்தால் லஞ்சம் கொடுத்து செய்யப்பட்டது என்று சொல்வது நான் அறிந்த பொது வழக்கு இதற்கு மாறாகக் கருத்திருந்தாலும் இந்த அடிப்படையில் தான் லஞ்சம் என்று கூறியது மல்லாமல் லஞ்சம் கொடுத்து ஈமானை விலைக்கு வாங்குவது போன்றிருக்கும் என்றும் எழுதினேன்.

ஆசிரியர் அவர்களே என்னுடைய முதற் கடிதத்தில் நான் முக்கியமெனக் கருதிய பந்தியை நீக்கிவிட்டு மிகுதியைப் பிரசுரித்தீர்கள் இந்த சந்தர்ப்பத்தைப் பாவித்து என்னுடைய நோக்கத்தை நிறைவேற்றுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நம் பெண்குலத்தில் சமூக சேவையிலும் மார்க்க சேவையிலும் ஈடுபடுவதற்கு ஆசையுள்ள நூற்றுக்கணக்கானோர் இருப்பதாக ரேடியோ பத்திரிகைகள் மூலமாக உணரக் கூடியதாக இருக்கின்றது.

ஜனாஸாக் குளிப்பாட்டுவதில் நாம் ஏற்படும் தவறுகளைப் பற்றி இவர்கள் கவனத்தில் எடுத்துக் கொண்டால் இவர்களில் பலர் இந்த சேவையை மார்க்க சேவையாகச் செய்ய முன்வருவார்களென்று நான் திடமாக நம்புகிறேன்.

இதனால் இவர்களுக்கு மதிப்புக் குறைவு ஏற்படாது. என்னுடைய ஊராகிய யாழ்ப்பாணத்தில் ஒரு ஹாஜியானி விரும்பி இலவசமாக இதனைச் செய்து வருகின்றார் வேறு ஊர்களிலும் இது போன்ற மக்கள் இருக்கலாம்.

இலவசமாகவோ சன்மானம் வாங்கியோ இந்த சேவையை செய்வதற்கு நாடு முழுவதும் பெண்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

— எம் எம் அப்துல் காதிர்
கௌரவ பணிப்பாளர்
ஸ்ரீலங்கா இஸ்லாமிய நிலையம்)

## முஸாபிரின் முடிவான விளக்கம்

கடந்த ஜூன் 11 ஆம் திகதி "சிந்தாமணி"யில் ஸ்ரீலங்கா இஸ்லாமிய நிலையப் பணிப்பாளரும், முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசருமான அல்ஹாஜ் எம் எம் அப்துல் காதருக்கு "நற்கூலிக்கும் லஞ்சத்திற்கும் பேதம் புரிய வேண்டாமா?" எனும் தலைப்பில் விரிவான விளக்கத்தை அளித்திருந்தேன்.

இவ்விளக்கம் பணிப்பாளருக்கு நடைமுறைச் சங்கடத்தை ஏற்படுத்தி விட்டிருப்பதை அவரது எழுத்துக்கள் உணர்த்துகின்றன.

மேலே பிரசுரமாகியிருக்கும் அவரது கடிதத்தின் 2 ஆம் பந்தியில் இத்தகைய கொடுப்பனவுகளை இமாம்கள் தந்துள்ள "பத்வா"வை கோடிட்டுக் காட்டி அதில் தனக்கு ஆட்சேபனை இல்லை என்று ஏற்றுக் கொண்டுள்ளார்.

முஸாபிரின் விரிவான விளக்கமும் எதிர்பார்த்த நோக்கத்தின் வெற்றி இதுதான்.

தொடர்ந்து வரும் இரு பந்திகளிலும் பிரஸ்தாப வகுப்புகளுக்கு "பொதுமக்கள்" பெருவாரியாக வருகை தருவதற்கு கூறியேனே தவிர "பயிற்சி பெறுவோருக்கு" பணம் கொடுப்பதாகக் கூறவில்லை எனக் கூறியுள்ளார்.

"பொதுமக்கள்" எனப் பணிப்பாளர் குறிப்பிடும் வார்த்தையின் தொனி முஸ்லிம் அல்லாதவர்களையும் ஒன்றினைத்தா கூறுகின்றார்? மேற்படி கூட்டத்திற்கு, வகுப்புகளுக்கும் (பயிற்சிக்கும்) வருபவர் மட்டும்தானே தவிர முஸ்லிம்கள் ஈமான் கொண்டவர்கள் அல்லாதவர்கள் வருவதில்லையே!

முஸாபிர் "பொதுமக்கள்" என்ற வார்த்தையையே பிரயோகிக்கவில்லை. "முஸ்லிம் பெண்கள் பிரஸ்தாப வகுப்புகளுக்கு வரவும் பயிற்சி பெறவும் இப்படிச் செய்தால் என்ன? என்ற எண்ணம் முஸாபிரின் சிந்தனையில் தோன்றுகிறது... என்றுதான் எழுதியிருக்கிறேன்.

பொதுமக்கள் என்று முஸாபிர் குறிப்பிடவுமில்லை; பிரசாரக் கூட்டத்திற்கு வரவா? அல்லது பயிற்சி பெறவா? என்று பிரித்து கூறவுமில்லை. முஸ்லிம் பெண்கள் மேற்படி வகுப்புகளுக்கு வரவும், பயிற்சி பெறவும் என்று இணைத்தே கூறியுள்ளேன் என்பதை பணிப்பாளர் புரிந்தால் நலம் பயக்கும்.

"இத்துறையில் முஸ்லிம் பெண்கள் 10 பேர் இதனை தொழிலாகச் செய்ய முன்வருவார்களானால் அவர்களுக்குப் பிரயாணச் செலவும், பணமும் கொடுக்க நாங்கள் ஆயத்தமாக இருக்கின்றோம் எனவும் தனது கடிதத்தில் பணிப்பாளர் உறுதியளித்துள்ளார்.

இது முஸாபிரின் எழுதுகோல் ஏற்படுத்திய சிந்தனைக்கு கிட்டிய வெற்றியே தவிர வேறில்லை. அல்ஹம்துலில்லாஹ்.

# சோதிட சிந்தாமணி

சிந்தாமணி சோதிடர்: திரு. ஆர்வி

[9—7—1989 தொடக்கம் 15—7—1989 வரை உள்ள பலாபலன்கள்]

## மேஷம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் கால்.

மேஷம்— தொழில் துறையில் முன்னேற்றம் ஏற்படக் கூடிய வாரம் இது. விடுபட்ட உத்தியோகம் கிடைக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படும். மேலதிகாரியின் ஆதரவும் மதிப்பும் உண்டு. வியாபாரத்தில் அதிக இலாபம் கிடைக்கும். கோர்ட் வழக்குகள் வெற்றியாக முடிவடையும்.

## சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1ஆம் கால்.

சிங்கம்— கௌரவம், தேகாரோக்கியம் மேன்மையடையும். பண வருவாய் சிறப்புறும். பழைய கடன்கள் திரும்பி வரும். ஆனாலும் வாகனத்தால் செலவு அல்லது விபத்து ஏற்பட இடமுண்டு. தூரப் பயணங்களைத் தள்ளிப் போடுவது நல்லது. குடும்பத்தில் ஒருவர் சுகயீனம் அடைவார். வைத்தியச் செலவு உண்டு.

## தனு

மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் கால்.

தனு— பொருளாதாரம் நன்றாக இருக்கும். செலவினங்கள் அதிகரித்த போதிலும் சமாளித்துக் கொள்ளலாம். குடும்பத்தில் ஏற்படும் சுபகாரிய நிமித்தம் பழைய கடனைக் கொடுத்துப் புதிய கடன் வாங்க நேரிடும். பிள்ளைகளால் புகழ் ஏற்படும். தாய் வழியில் ஒருவர் சுகயீனம் அடைவார்.

## ரிஷபம்

கார்த்திகை 2, 3, 4 ஆம் கால்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2ஆம் கால்கள்.

ரிஷபம்— பண வருவாய் நன்றாக இருக்கும். கடன் தொல்லை இல்லை. வீட்டுப் பிரச்சினைகள் குறையும். வாகனத்தால் விபத்து அல்லது செலவு ஏற்படலாம். தூரப் பயணங்களைத் தள்ளிப் போடுவது நல்லது. பிள்ளையின் சுகயீனம் மனச் சஞ்சலத்தை ஏற்படுத்தினாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

## கன்னி

உத்தரம் 2ஆம் 3ஆம் 4ஆம் கால்கள். அத்தம் சித்திரை 1, 2 ஆம் கால்கள்

கன்னி— குடும்பத்தில் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கி அன்பும் அமைதியும் நிலவும். ஒரு பிரயாணத்தைச் செய்வதா? விடுவதா? என்ற பிரச்சினை ஏற்படும். சாதகமாகச் செய்யும் முடிவு அதிக பலனைத் தரும். குடும்ப நண்பர் ஒருவரின் சுகயீனம் மனச் சஞ்சலத்தைக் கொடுக்கும்.

## மகரம்

உத்தராடம் , 2, 3, 4ஆம் கால்கள். திருவோணம், அவிட்டம். 1, 2ஆம் கால்கள்.

மகரம்— வியாபாரிகளுக்கு சிறு நஷ்டம் ஏற்பட்டாலும் அதனால் பெரும்பாதிப்பு ஒன்றும் இருக்காது. சகோதரர் வழியால் சில நன்மைகளும் நிர்ப்பந்தங்களும் ஏற்படலாம். கலை, நாடகத் துறையில் உள்ளோர் புகழும் பொருளும் பெறுவார்கள். காதல் விவகாரங்கள் கவர்ச்சியற்றிருக்கும்.

## மிதுனம்

மிருகசீரிடம் 3 ஆம் 4ஆம் கால்கள், திருவாதிரை புனர்பூசம் 1, 2, 3 ஆம் கால்கள்.

மிதுனம்— வெளி வட்டாரப் பழக்கத்தால் புகழ் அதிகரிக்கும். பண வருவாய் மன நிம்மதியைத் தரும். திட்டமிட்ட காரியங்கள் சில தடைப்படலாம். குடும்பத்தில் மனஸ்தாபங்கள் ஏற்பட இடமுண்டு. வெளிநாட்டில் இருந்து கிடைக்கும் செய்தி அதிர்ச்சியைத் தரும். கடன் தொல்லை இல்லை.

## துலாம்

சித்திரை 3, 4ஆம் கால்கள், சுவாதி விசாகம் 1, 2, 3 ஆம் கால்கள்.

துலாம்— எதிர்பார்க்கும் விஷயங்கள் துரிதமாக முன்னேறும். பண வசதி அதிகரிக்கும். செலவினங்கள் கட்டுக்கடங்கியிருக்கும். உறவினர் ஒருவரின் வருகையால் குடும்பத்தில் பிரச்சினைகள் உருவாகும். கோர்ட் வழக்குகள் வெற்றியாக முடியும். ஆனாலும் மனத் திருப்தி ஏற்படாது.

## கும்பம்

அவிட்டம் 3, 4 ஆம் கால்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் கால்கள்.

கும்பம்— இந்த வாரம் சிறிது அமைதியின்மை ஏற்பட்டாலும் பண வருவாய் அதிகரிக்கும். அதனால் பிரச்சினைகளை வெற்றிகரமாகச் சமாளிக்கக் கூடியதாக இருக்கும். வீடு, காணி, வாகனம் போன்றவற்றால் வருமானம் ஏற்படும். இரும்பு, ஐவுளி வியாபாரிகள் அதிக ஆதாயமடைவார்கள்.

## கடகம்

## விருச்சிகம்

## மீனம்

# நவக்கிரக நாயகன்

எஸ். பிரபாகர்

— 7 —

அருணும், தேவியும் அந்த பளிங்கு மயில் அருகில் வந்ததும் அந்த மயில் திடீரென்று ஒரு தங்க காப்பாக மாறி அந்தரத்தில் எழுந்து அருணின் இடக்கையில் வந்து பொருந்தியது.

அருண் மிக ஆச்சரியம் அடைந்து போனான். தன் இடக் கையை தன் முகத்திற்கு நேராக உயர்த்திப் பிடித்தான் அருண் அப்போது அந்த தங்க காப்பு பேசத் தொடங்கியது.

"எஜமானர் அவர்களே, நான் தான் உங்களை அழைத்தேன் என்னால் எப்படி பேச முடிகின்றதென ஆச்சரியப்படுகின்றீர்களா நான் பேசும் சக்தியை பெற்றுள்ளேன்.

உருமாறும் சக்தியையும் பெற்றுள்ளேன். உங்களுக்கு தேவையான போது என்னை பறக்கும் பளிங்கு மயிலாக உபயோகித்துக் கொள்ளலாம். தேவையற்ற போது இப்போதுள்ளது போல் காப்பாக மாற்றி நீங்கள் அணிந்து கொள்ளலாம்.

அதனால் நான் எப்பொழுதும் உங்களுடனேயே இருப்பேன்"

"நல்லது நீ பேசும் துணையாக எனக்கு அமைந்ததையிட்டு நான் மிக மகிழ்வடைகின்றேன். நீ சொன்னவாறே நான் உன்னை உபயோகித்துக் கொள்கின்றேன். ஆமாம், இப்போது நாம் வந்திருக்கும் இக்கிரகம் எது என்று உன்னால் கூற முடியுமா..." அருண் காப்பைப் பார்த்து கேட்டான்.

"ஆம் இது தான் வியாழக் கிரகம் இங்கு எந்த வித மனிதர்களும் இல்லை. இதற்கு முன் நீங்கள் சென்றவை, சுக்கிரன், செவ்வாய், புதன் ஆகியவையாகும்" தங்கக் காப்பு இவ்வாறு கூற அருண் ஆச்சரியப்பட்டு வினவினான்.

"என்ன... உனக்கு இதற்கு முன் நான் சென்ற கிரகங்களும் தெரியுமா......"

"ஆமாம் எஜமானர் அவர்களே, அவற்றை என் மனோசக்தியால் நான் அதனை அறிந்து கொண்டேன். நீங்கள் முதலில் கண்ட பளிங்கு உலகமே சுக்கிரன்.

இரண்டாவது செவ்வாய் என்னை பெற்றது புதன் கிரகத்தில் இப்போது நாம் வந்திருக்கும் இக்

களும் தமக்குள் சண்டை போட ஆரம்பித்து விட்டன."

"ஆம். அன்பரே அதனால் தான் போலும் இங்கு புல், பூண்டு மனிதர்கள் ஒருவரும் இல்லாத வரண்ட கல் நிலமாகக் காணப்படுகின்றது"

"விசித்திர பளிங்கு மயிலே... இந்த உலகத்தில் இப்படி இயந்திரங்கள் தோன்றக் காரணம் என்ன? இங்கு இதற்கு முன் மனிதர்கள் இருக்கவில்லையா..." அருண் தன் கைக் காப்பினை உயர்த்தியவாறு கேட்டான் காப்பாக இருந்த மயில் பேசத் தொடங்கியது.

"எஜமானர் அவர்களே, இந்த வியாழக் கிரகத்தில் முன்னொரு காலத்தில் மிகவும் முன்னேறிய மனிதர்கள் வாழ்ந்தார்கள். விஞ்ஞானத்தின் முதிர்ச்சியில் அவர்

போதாக் குறைக்கு ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு வகையில் அற்புத சக்திகளும் உள்ளன.

இத்தகைய இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளுக்கு பூலோக விஞ்ஞானம் கூட விடை தர முடியாது" — மயில் காப்பு கூறி முடிக்க அருண் தொடர்ந்தான்.

"உண்மை தான் நானும், பூலோகத்திற்கு திரும்பிப் போகாமல் புதன் கிரகத்திற்கே மீண்டும் போய் வாழலாம் என்று நினைக்கின்றேன். — அருண் கூறினான்.

"சரி இப்போது இங்கிருந்து சற்று தூரம் சென்று இங்கு வேறு என்ன இருக்கின்றதென்று பார்ப்போம்..." அருண் கூறி விட்டு முன்னே நடந்தான்.

சிறிது தூரம் சுற்றிப் பார்த்த பின்பு மயில் காப்பு சொன்னது "எஜமானர், அவர்களே... இங்கு


தோற்றம் நெஞ்சை அள்ளி நிறைத்தது.

"இன்னும் சற்று நேரத்தில் அந்த எழில் கோளத்தில் நாமிருப்போம் இல்லையா..." தேவி யுரேனஸை சுட்டிக் காட்டி அருணிடம் கேட்டாள் "ஆமாம் தேவி......

சற்று நேரத்தில் அனைவரும் அடைந்தனர். யுரேனஸை

அங்கு பளிங்கு மயிலை காப்பாக்கி அணிந்து கொண்டு அருண் தேவியை தன் இடக்கையில் பிடித்துக் கொண்டு தரையில் வெகு உற்சாகமாக கால் போன போக்கில் நடந்தான். யுரேனஸ் கிரகம் தரை பூமித் தரையைப் போன்றே சாதாரணமாக காணப்பட்டது. ஒரே கற்களும் மண்ணும் தான் நீரோ, தாவரமோ இருக்கவில்லை.

"மயில் காப்பே தொலைவில்




கள் பலவிதமான இயந்திரங்களைக் கண்டு பிடித்தார்கள் பல மனிதர்கள் ஒன்று கூடி செய்ய முடியாத வேலைகளையும் தனியொரு இயந்திரம் செய்யத் தொடங்கியது இதனால் மனிதன் சோம்பேறியாக்கப்பட்டதுடன் பல பிரச்சினைகளையும் எதிர் நோக்க வேண்டியவனாக

விசேடமாகப் பார்ப்பதற்கு எதுவும் இல்லை. இந்த இயந்திரங்களைத் தவிர இங்கு ஒன்றுமில்லை. ஆகவே நாம் வேறு ஒரு கிரகத்திற்கு போவோம்"

"நல்லது... உன் விருப்பப்படியே நடக்கட்டும் நீ பளிங்கு மயிலாக மாறி வேறு எங்காவது

எழிற்கோளமாக திகழ்ந்த இச் யுரேனஸில் இப்போது எந்த வித அழகும் இல்லையே" அருண் கேட்க மயில் சொன்னது.

"எஜமானர் அவர்களே... வைப் போதும் வெளித் தோற்றத்தை பார்த்து உள்தோற்றத்தை அறிய முடியாது என்பதை உணர்த்தத்

கள் சில தடைப்படலாம். குடும்பத்தில் மனஸ்தாபங்கள் ஏற்பட இடமுண்டு. வெளிநாட்டில் இருந்து கிடைக்கும் செய்தி அதிர்ச்சியைத் தரும். கடன் தொல்லை இல்லை.

கும். உறவினர் ஒருவரின் வருகையால் குடும்பத்தில் பிரச்சினைகள் உருவாகும். கோர்ட் வழக்குகள் வெற்றியாக முடியும். ஆனாலும் மனத் திருப்தி ஏற்படாது.

கரமாகச் சமாளிக்கக் கூடியதாக இருக்கும். வீடு, காணி, வாகனம் போன்றவற்றால் வருமானம் ஏற்படும். இரும்பு, ஜவுளி வியாபாரிகள் அதிக ஆதாயமடைவார்கள்.

## கடகம்

புனர்பூசம் 4 ஆம் கால் பூசம் ஆயிலியம்

கடகம்– தொழில் – வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்பட்டாலும் எண்ணியபடி ஆதாயம் கிடையாது. நீண்ட நாட்களாகப் பிடித்திருந்த நோய் படிப்படியாகக் குறைய ஆரம்பிக்கும். செலவுகள் கட்டுக் கடங்கி இருக்கும். தூரத்து உறவினர் ஒருவரின் துக்க செய்தி வார இறுதியில் வரும்.

## விருச்சிகம்

விசாகம், 4 ஆம் கால் அனுஷம், கேட்டை

விருச்சிகம்– கௌரவம், ஆரோக்கியம் நலமாக அமையும். பிள்ளைகளின் படிப்பு விஷயம் மனத் திருப்தியைத் தரும். அயலவரின் பொறாமை தீமை பயக்கும். ஜாக்கிரதையாக இருப்பது நல்லது. கண்ட கண்ட இடங்களில் உணவு அருந்தக் கூடாது.

## மீனம்

பூரட்டாதி, 4 ஆம் கால் உத்திரட்டாதி, ரேவதி

மீனம்– பணப் புழக்கம் சுமாராக இருக்கும். கொடுக்கல் – வாங்கல் திருப்தியாக நடைபெறும். வழக்குகள் இருந்தால் ஒத்திப் போடுவது நல்லது. உறவினர் ஒருவர் விபத்துக்கு ஆளாகக் கூடும். வார இறுதியில் தேக ஆரோக்கியம் சிறிது பாதிக்கப்படலாம். ஆனால் கவலைக்கு இடமில்லை.

# சிந்தாமணி எண் சோதிடம்

## NUMEROLOGY

9—7—1989 தொடக்கம் 15—7—1989 வரை உள்ள பலாபலன்கள்]

### 1

1– 10– 19– 28 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு–

பொருளாதாரம் நன்று. பலவித பொருட்பேறு. உற்றார் உறவினர் உதவி. மனமகிழ்ச்சி. உற்சாகம். காதலில் மகிழ்ச்சி– பிரயாணம்–

அதிஷ்ட நாட்கள்– செவ்வாய்– வியாழன்.

### 2

2– 11– 20– 29 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு—

காரிய சித்தி பெரியார் உதவி போட்டிகளில் வெற்றி, வாகனந் தால் செலவு– பிரயாணம்– காதலில் சிக்கல்– யோசனை மிகுதி.

அதிஷ்ட நாட்கள்– திங்கள்– வியாழன்.

### 3

3– 12–21– 30 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு–

குடும்ப சுகம்– மனைவி வழியால் உதவி– மனநிறைவு– பிரிந்த நண்பர்கள் சேர்தல்– இரத்தக் காயம்– வியாபாரத்தில் இலாபம்.

அதிஷ்ட நாட்கள்– ஞாயிறு– சனி.

### 4

4– 13– 22– 31 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு–

வாக்கு வசிகரம்– காரிய சித்தி, பிரயாசை மிகுதி– குடும்ப சுகக் குறைவு– வெளியூர்ச் செய்தியால அதிர்ச்சி– உறவினரால் தொல்லை.

அதிஷ்ட நாட்கள்– திங்கள்– செவ்வாய்.

### 5

5– 14– 23 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு–

அலுவலகத்தில் நிம்மதி குறைவு, மேலதிகாரியின் சீற்றம்– அயலவர் உதவி– பணவசதி– எதிர்பாராத பிரயாணம்– வாகன சுகம்.

அதிஷ்ட நாள்– வெள்ளி.

### 6

6– 15– 24 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு–

தொழில் துறையில் நிம்மதி பணத் தட்டுப்பாடு. கொடுக்கல் வாங்கலில் அதிருப்தி– கடிதப் போக்குவரத்து அனுகூலம்– அதிக யோசனை.

அதிஷ்ட நாட்கள்– ஞாயிறு புதன்.

### 7

7– 16– 25 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு–

பணவசதி– இலட்சுமி கரம்– பலவித பொருட்பேறு– இனசன விரோதம்– ஆரோக்கிய அபிவிருத்தி– பயனற்ற பிரயாணம்

அதிஷ்ட நாட்கள்– திங்கள்– செவ்வாய்.

### 8

8– 17– 26 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு–

தொழிலில் முன்னேற்றம்– பிள்ளைகளால் கவலை– வீண் செலவு– வழக்குகளில் வெற்றி– பிரயாணம்– பூமியால் சுகம்– அக்கினி பயம்.

அதிஷ்ட நாட்கள்– திங்கள்– புதன்– வெள்ளி.

### 9

9– 18– 27 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு–

அதிக புகழ்– வாகன சுகம்– அயலவர் உதவி– வீட்டுப் பிரச்சினைகள் தீர்தல்– கஷ்டமான பிரயாணம்– அக்கினி ஆயுத பயம்.

அதிஷ்ட நாட்கள்– புதன்– சனி.




முன் நான் சென்ற கிரகங்களும் தெரியுமா......"

"ஆமாம் எஜமானர் அவர்களே. அவற்றை என் மனோசக்தியால் நான் அதனை அறிந்து கொண்டேன். நீங்கள் முதலில் கண்ட பளிங்கு உலகமே சுக்கிரன்.

இரண்டாவது செவ்வாய் என்னை பெற்றது புதன் கிரகத்தில் இப்போது நாம் வந்திருக்கும் இக்கிரகம் வியாழக் கிரகம் இங்கு மனிதர்கள் இல்லை. ஆயினும் சக்தி வாய்ந்த இயந்திரங்கள் காணப்படுகின்றன"

"சரி இங்கு சற்று சுற்றிப் பார்த்து விட்டு வேறு கிரகத்திற்குப் போவோம் என்று சொல்லிய அருண் தேவியையும் கூட்டிக் கொண்டு கால் போன போக்கிலே நடக்க ஆரம்பித்தான்.

அங்கு நீர் இருப்பதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை. சிறிய அளவில் இருந்த பாறைகள் அளவு வரையில் நீல நிறக் கற்களே காணப்பட்டன. ஆங்காங்கே அரிதாக பொன்னிறக் கற்களும் கிடந்தன.

சிறிது நேரத்திற்குப் பின் அருணும் தேவியும் அப்பாறைகள் இருந்த இடத்தை அடைந்தனர். அப்போது அங்கே சற்று தூரத்தில் ஒரு இரைச்சல் கேட்டது.

தொடர்ந்து "கர்...ர்...ர்... என்ற சத்தங்கள் கேட்டன. அருணும், தேவியும் சடக்கென ஒரு பாறை பகுதியில் ஒளிந்து கொண்டார்கள்.

அப்போது அங்கே பல்வேறு வகைப்பட்ட வடிவ அமைப்புகளைக் கொண்ட சில இயந்திரங்கள் அருண் தேவி மறைந்திருந்த பாறைக்கு சிறிது தூரத்தில் இருந்த ஒரு பொட்டல் வெளியில் வந்து நின்றன. அவைகளிலிருந்து தான் அந்தச் சத்தம் வந்துக் கொண்டிருந்தது.

ஒரு சில வினாடிக்குள் அந்த இயந்திரங்களில் பெரியதாக இருந்த இயந்திரம் மற்ற இயந்திரங்களை விட்டு சற்று விலகிச் சென்று "ரீர்... ரீர்...ரீங்... ரீங்..." என்று சத்தமிட்டது. மறுகணம் மற்ற இயந்திரங்களெல்லாம் ஒரு வரிசையில் ஒழுங்காக அணி வகுத்து நின்றன.

பின் அந்த தலைமை இயந்திரம் ஒரு வகை விசித்திர ஒலியை வெளிவிட்டது. அப்போது வரிசையாக நின்றிருந்த இயந்திரங்களில் இருந்து இரு இயந்திரங்கள் வெளியேறி ஆக்ரோஷமாக ஒன்றை ஒன்று மோதிக் கொள்ளத் தொடங்கின.

அவைகளின் மோதலில் ஏற்பட்ட பெருஞ் சத்தம் காதைப் பிளந்தது. அவைகள் மோதிக் கொண்ட போது விசித்திர ஒலிகள் தோன்றின. தீப் பொறிகள் பறந்தன. அருணுக்கும் தேவிக்கும் அவற்றைப் பார்க்க ஒரு மாதிரியாக இருந்தது.

"பார்த்தாயா தேவி... மனிதர்களுக்குள் தான் சண்டை உள்ளது என்றால் இப்போது இயந்திரங்கள் பலவிதமான இயந்திரங்களைக் கண்டு பிடித்தார்கள் பல மனிதர்கள் ஒன்று கூடி செய்ய முடியாத வேலைகளையும் தனியொரு இயந்திரம் செய்யத் தொடங்கியது இதனால் மனிதன் சோம்பேறியாக்கப் பட்டதுடன் பல பிரச்சினைகளையும் எதிர் நோக்க வேண்டியவனாக இருந்தான்.

இருந்தும் தனது புதிய, புதிய கண்டு பிடிப்புகளால் மமதை மாத்திரமின்றி இறைவன் என்றொருவன் இருப்பதையும் மறந்தான் அது மாத்திரமின்றி இறைவன் என்பதெல்லாம் நம் மனுக் கற்பனையே அப்படி ஒரு சக்தியும் இல்லை என்னும் தர்க்க ரீதியாக வாதிட தொடங்கினான்.

இறை பக்தி குறைந்ததால் இறை சக்தியும் இங்கு குறைந்தி போனது நாளடைவில் இங்கிருந்த மனிதர்கள் கண்டு பிடித்த இயந்திரங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து இங்கிருந்த எல்லா மனிதர்களையுமே அழித்து விட்டன.

இன்று இங்கு இயந்திரங்களின் ஆட்சியே இங்கு நிலவுகின்றது. இன்னும் சில நாட்களில் அவைகளும் தங்களுக்குள்ளாகவே மோதிக் கொண்டு அழிந்து விடும் போல் இருக்கின்றது..." பளிங்கு மயில் மெதுவாக கூறி முடித்தது.

"ம்...... பூலோகத்திலும் இந்நிலை ஒரு காலத்தில் ஏற்படலாம். ஆனால் இந்த புதன் கிரக மனிதர்கள் மிகவும் கொடுத்து வைத்தவர்கள் அவர்களின் உலகும் ஓர் இன்பலோகமாக அல்லவா இருக்கின்றது.

அங்குள்ள மனிதர்கள் அனைவருமே நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் அல்லவா இருக்கின்றார்கள்." — அருண் இவ்வாறு கூற மயில் காப்பு தொடர்ந்து பேசியது.

"ஆம் எஜமானர் அவர்களே... புதன் கிரக மனிதர்கள் என்றும் போலவே, இருப்பதுடன் இறைவனிடம் மிகுந்த நம்பிக்கை உடையவர்களாகவும் இருக்கின்றார்கள். அத்துடன் போட்டி, பொறாமை, சூழ்ச்சி, குரோதம், விரோதம், கொலை, கொள்ளை, திருட்டு, பேராசை போன்ற எந்தவித தீய குணங்களும் இல்லாதவர்கள் அவர்கள் அதனாலேயே அவர்களுக்கு, மகிழ்ச்சிகரமான நிறைவான வாழ்க்கையை இறைவன் அருளியிருக்கின்றான்.

விசேடமாகப் பார்ப்பதற்கு எதுவும் இல்லை. இந்த இயந்திரங்களைத் தவிர இங்கு ஒன்றுமில்லை. ஆகவே நாம் வேறு ஒரு கிரகத்திற்கு போவோம்"

"நல்லது... உன் விருப்பப்படியே நடக்கட்டும் நீ பளிங்கு மயிலாக மாறி வேறு எங்காவது அழைத்துச் செல்..." அருண் இவ்வாறு கூறியதும் அருணின் கையிலிருந்த காப்பு இரண்டாகப் பிளந்து நிலத்தில் வீழ்ந்து கண்ணிமைக்கும் நேரத்தில் பளிங்கு மயிலானது.

உடனே அருணும், தேவியும்




அப்பளிங்கு மயிலில் ஏறி அமர பளிங்கு மயில் அவர்களை சுமந்துக் கொண்டு யுரேனஸ் நோக்கிப் பறந்தது.

தூரத்தில் யுரேனஸ் மிக மிக அழகாகவும், குளிர்ச்சியாகவும் காணப்பட்டது. அதனது எழிற்கோளமாக திகழ்ந்த இச் யுரேனஸில் இப்போது எந்த வித அழகும் இல்லையே" அருண் கேட்க மயில் சொன்னது.

"எஜமானர் அவர்களே; எப்போதும் வெளித் தோற்றத்தை பார்த்து உள்தோற்றத்தை அறிய முடியாது என்பதை உணர்த்தத் தான் கடவுள் இதனை இப்படி படைத்து விட்டார் போலும்..."

"உண்மை தான். மின்னுவதெல்லாம் பொன்னல்லவே... ஒருவன் அழகாக இருப்பான். அவன் உள்ளம் அழகற்றதாக இருக்கும் ஒருவன் அழகற்றவனாக இருப்பான் அவன் உள்ளம் அழகாக இருக்கும்.

ஒரு மனிதனின் நடத்தையில் தான் உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பேதம் சாதி, சமய வேறுபாடுகளில் அல்ல..." அருண் சொல்லி முடிக்க மயில் காப்பு ஆச்சரியத்துடன் கேட்டது.

"எஜமானர் அவர்களே என்ன சொல்கிறீர்கள். எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே...

"ஓ... உனக்கு விளங்க முடியாதது தான் நான் ஏதோ பூலோக ஞாபகத்தில் பேசி விட்டேன். ஆமாம் இங்கும் மனிதர்கள் இல்லையா? இல்லை எஜமானரே... என்றது பளிங்கு மயில் மூவரும் சிறிது நேரம் அங்குமிங்கும் நடந்து திரிந்தனர்.

(தொடரும்)

# மணிக் கவிதை

## சோக கீதம்!

வாழ வழி தேடிச் சென்று
வாழ்க்கையினைக் கற்றவன்!
சொந்தங்களை நாடிச் சென்று
சோகங்களை நுகர்ந்தவன்!
பட்டங்களைச் சுமந்து கொண்டு
பதவிகளைத் தேடியவன்!
பாதங்கள் தேய்ந்த போது
பாதையினை மாற்றியவன்!
கரை கடந்து பொருள் உழைத்து
காசுகளைச் சேர்த்தவன்!

★ டி எம் சுபைர்கான்
(சவூதி அரேபியா)

## உண்மை அன்பு!

உண்மை அன்பிற்காய்
உள்ளம் ஏங்கியபோது
புது உறவைத் தந்து
பூரிக்கச் செய்தவளே!
உன் செயல்கள் அத்தனையும்
போலியென அறிந்தபோது
அனுபவிக்கும் வேதனையால்
அருந்துகிறேன் மதுவை இன்று!

★ ஜெயராணி – ராஜா

## பாசம் நேசம்!

தங்கையே உன் நேசம் கண்டு
விழிகளிரண்டும் வியர்க்கின்றன!
உன் மதிமுகம் பார்த்துத்தான்
என் விழிகள் தினம் மலர்கின்றன
உனது பாசம் நினைக்கையிலே
கண்ணில் இன்னும் நீரில்லை!
தொட்டுப் பார்த்த நெஞ்சில்
காவேரி இன்னும் வற்றவில்லை!
வாழ்நாளெலாம் அண்ணனை
வாழ்ந்தாலே போதுமம்மா!

★ வி தனராஜா

## நான் உத்தமன்!

பாசத்தின் ஊற்றாய்
பரிவின் பிறப்பிடமான
எனதருமைத் தங்கையே!
உன் நினைவின் – வீண்
சந்தேகம் அது
என்னளவில் உண்மை அல்ல!
உன் மனதின் எண்ணமதை
களைந்தெறிவாயே – என்றும்
உன் அண்ணன் உத்தமனே!
உறுதியாய் நம்பிடு நீ!

★ ரியால் எம். பௌஸர்

## சுயநலவாதிகள்

கிடைக்கும் என்று கொடுப்பார்
கிடைக்காவிடில் சபிப்பார்!
இப்படியும் சுயநலவாதிகள்
இருக்கிறார்கள் எம்மிடையே!


★ ரேஷான் ஜகான்

WOMAN & HOME



# மனையும் மங்கையும்

# தூய்மையான தோற்றம் தர பெண்களே முயலுங்கள்



## ஒருவர் குணநலன்களை அறிய அவர் அணியும் ஆடை உதவும்

அழகு என்பது வெறுமனே ஒருவரின் தோற்றத்தை மட்டும் குறிக்காது. உடல் உள்ளம் இரண்டையும் உள்ளடக்கியதாக பல்வேறு அம்சங்கள் அழகில் அடங்கியுள்ளன.

எனவே அந்த லட்சணங்கள் சிலவாவது அமையப் பெற்றவரே உண்மையான நிலையான அழகுடன் விளங்க முடியும்.

அழகுக்கு அடிப்படையாக அமைவது தூய்மையாகும். அதிலும் எண்ணத்தில் சிந்தனையில் தூய்மையில்லா விட்டால் எதிலும் தூய்மை தோன்றாது. நல்லெண்ணம் ஏற்பட்டாலே ஒழிய செயல்படாதீர்கள். ஏனெனில் நல்லெண்ணத்தோடு செய்யாத செயல்கள் பயன் தராது.

அடுத்து நமது தோற்றத்தில் தூய்மை தென்பட வேண்டும். நாம் அழகானவர்களாக இல்லா விட்டாலும் நமது உடல்– உள்ள– தோற்றம் போன்றன நேர்த்தியாக இருந்தாலே நாம் கவர்ச்சியாக தோன்றலாம்.

சில வேளைகளில் நாம் அணிகின்ற ஆடைகளே (நாம் எத்தனை தான் அழகானவர்களாக இருந்தாலும்) நம்மை மட்டமாகக் காட்டக் கூடும். "ஆள் பாதி ஆடை பாதி" என்பார்கள்.

அந்தளவுக்கு ஒருவரின் குணவியல்புகளை மதிப்பிட அவரை இனங்காண பெரிதும் உதவுகின்றன, ஆடைகள். எனவே அழகான

நம் அந்தஸ்த்தை குறைத்துவிடும்.

அதிலும் குறிப்பாக பெண்கள் ஆபாசமான உடைகளை ஒரு போதும் அணிய துணியக் கூடாது. அது அவர்களை சமூகத்தின் பார்வையில் தவறாகக் காட்டக் கூடும். அவர்களின் ஒழுக்கத்திற்கும் பங்கம் விளைவிக்கலாம்.

நாம் அழகானவர்களாகவோ அல்லது அவலட்சணமானவர்களாகவோ இருந்தாலும் எமது தனித்தன்மையை அருமையை எடுத்துக் காட்டுவது நமது நடத்தைகளே ... நாம் மனதிற் கொள்ள வேண்டும்.

உடற்குறைகளோடு பிறந்த எத்தனையோ பேர் தமது பண்புக ளால் பிறரைக் கவர்ந்து அவர்கள் உள்ளத்தில் இடம் பிடித்திருக்கிறார்கள்,

சதா புன்னகை தவழும் முகம் உட... ...ர்த்தி அர்த்தமுள்ள அளவான பேச்சு அத்தோ... ...யுமே நம் தனித்துவத்தை பிறர் மத்தியில் பிரபல்யப்படுத்தி நம்மை அழகு சுந்தரிகளாக காட்டும்.

அதிலும் பெண்களின் அழகுக்கு நளினம் சேர்ப்பது அடக்கமும் நாணமுமாகும். நாணமில்லாத நங்கை உப்பில்லாத பண்டம் போலத்தான்.

ஆபாசமான கவர்ச்சி மிகுந்த ஆடை அலங்காரங்கள் நாணம் என்னும் நல்லியல்பை ஒழித்து விடும். ஆகவே உடையலங்காரமோ இல்லை சிகையலங்காரமோ எதுவென்றாலும் அது எளிமையாக அமைவதே பெண்மைக்கு அழகு. அநாவசிய கூந்தல் அலங்காரங்கள் நம்மை மட்டமாகவே காட்டும்.

அழகு மனிதர்களின் நற்பண்புகளோடு பெரிதும் சம்பந்தப்பட்டிருப்பதால் நல்ல பண்புகளை வரிந்து பழகிக் கொள்ள வேண்டும்.

குடும்பத்தார், அயலவர்கள் அடிக்கடி சந்திப்பவர்கள் நம்முடன் வேலை செய்பவர்கள் இப்படி எல்லோருடனும் சிநேகபூர்வமாக வாஞ்சையுடன் பழகும் போது எமது உடற்குறைகள் ஒரு பொருட்டாக அவர்கள் கண்களுக்கு தென்படா.

எப்போதும் எவர்க்கும் உதவி செய்யத் தயாரான மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும். சுயநலத்தை தடைத்தெறிய வேண்டும்.

அவ்வாறே கோபம் என்னும் பொல்லாக் குணத்தையும் அறவே விட்டொழிக்க வேண்டும். கோபம் ஏற்படுகையில் நமது உடலினுள்ளே ஏற்படுகின்ற தீவிர மாற்றங்கள் காரணமாக முகம் கோபாக்கினியை பிரதிபலிக்கின்றது.

அப்போது நமது அழகு முகம் சோபை இழந்து, வசீகரம் குன்றி அகோரமாக காட்சியளிக்கும். அதுவே வழக்கமாகிவிடும் போது முகம் கடுகடுப்பாக மாறி விடும். அதன் பிறகு நாம் புன்னகையை விலை கொடுத்துத்தான் வாங்க வேண்டி நேரும்.

எனவே இயன்றவரை சந்தோஷமாக கவலைகளை கணக் கெடுக்காதவர்களாக இருந்தால் நமது முகமும் புது தேஜஸுடன் மிளிரும். நாம் மகிழ்ச்சியாக இருக்கின்றோம் என்பதை காட்டிக் கொள்ள எப்போதும் சிரித்த முகம் தேவை.

இந்த புன்னகைக்கு எத்தனையோ குறைகளை மறைத்து பிறரை வசீகரிக்கும் மந்திர சக்தி உண்டு. அதற்காக எந்நேரமும் சிரித்துக் கொண்டிருந்தால் நம்மைப் பார்ப்பவர் வேறு விதமாக எடை போடுவர்.

சிலர் தாம் அழகாயில்லை எனத் தாழ்வு மனப்பான்மை கொண்டு ஒதுங்கி வாழ முற்படுகின்றனர். நல்ல அழகிய பண்புகளோடு நாம் பவனி வந்தால் யார்தான் நாம் அழகில்லை என்பர்?

எனவே மேக்கப் சாதனங்கள் என அலையாமல் நல்ல அழகிய இயல்புகளை தேடி பழக்கப்படுத்திக் கொண்டால் அதுவே நிலையான அழகுக்கு போதுமானது எனலாம்.

சொல்வது சுலபம், செயல்படுத்துவது சிரமம் என்கிறீர்களா? அதிலே தான் வெற்றியே இருக்கிறது. (த)

— நூர்ஜஹான் —

## கால்களை நம்பி உயிர் வாழும் சுசிலாவின் துணிவு!



இன்றைய உலகம் எதையாவது செய்து சாதனை படைக்க வேண்டுமென்றே நாளாந்தம் விழைந்து கொண்டிருக்கிறது.

ஆண் — பெண் இரு பாலாரும் சாதனை புரிவதற்கு போட்டி போட்டுக் கொண்டு முன்வருகிறார்கள். குறிப்பாக வெளிநாடுகளில் சாதனை படைப்பது என்பது சர்வ சாதாரணமான தொன்றாக மாறி விட்டதென்றே

யார் இந்த சுசிலா...?

ராஜஸ்தானில் டோங்கா மாவட்டத்தில் உள்ள ஜஹனியா கிராமத்தைச் சேர்ந்த ஓர் ஏழை இளம் பெண்தான் சுசிலா.

இவர் என்ன சாதனை படைத்து விட்டார் என்கிறீர்களா?

இவர் தமது கைகளை பயன் படுத்தாது கால்களாலேயே

## சிந்தாமணி சமையற்கலை

### தோமுட்டை பொடிமாஸ்

தேவையானவை –

கோழி முட்டை – 4
வெங்காயம் – 50 கிராம்
கடுகு – ½ தேக்கரண்டி
எண்ணெய் – 50 கிராம்
உளுத்தம் பருப்பு – ½ தேக்கரண்டி
பச்சை மிளகாய் – 4
இஞ்சி – 1 துண்டு
கொத்தமல்லித் தழை – 1 கட்டு
உப்பு – ½ தேக்கரண்டி
கறிவேப்பிலை – 1 கொத்து

### செய் முறை

முதலில் வெங்காயத்தை பொடியாக நறுக்கிக் கொள்ள வேண்டும். அதே போல இஞ்சி பச்சை மிளகாய் கறிவேப்பிலை கொத்தமல்லி தழை இவைகளையும் நறுக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

அடுப்பில் வாணலியை வைத்து எண்ணெய் விட்டுக் காய்ந்தவுடன் வெங்காயம், இஞ்சி பச்சை மிளகாய் கறிவேப்பிலை கொத்தமல்லித் தழை ஆகியவைகளைப் போட்டு சிவக்க வதக்கி ஒரு தட்டில் எடுத்து வைத்துக் கொள்ளுங்கள்.

அதே வாணலியில் எண்ணெய் விட்டு காய்ந்தவுடன் உளுத்தம் பருப்பைப் போட்டு சிவந்தவுடன் கடுகைப் போட்டு வெடிக்கும் சமயம் வதக்கிய வெங்காய மசாலைப் போட்டு தாளித்து உடனே ஒவ்வொரு முட்டையாக உடைத்து இதில் விட்டுக் கிளறிக் கொண்டேயிருந்து முட்டை சிவக்க வெந்தவுடன் இறக்கி வைத்து விட வேண்டும்.

இருந்தாலே நாம் கவர்ச்சியாக தோன்றலாம்.

சில வேளைகளில் நாம் அணிகின்ற ஆடைகளே (நாம் எத்தனை தான் அழகானவர்களாக இருந்தாலும்) நம்மை மட்டமாகக் காட்டக் கூடும். "ஆள் பாதி ஆடை பாதி" என்பார்கள்.

அந்தளவுக்கு ஒருவரின் குணவியல்புகளை மதிப்பிட அவரை இனங்காண பெரிதும் உதவுகின்றன, ஆடைகள். எனவே அழகற்ற அசிங்கமான பகட்டான ஆடைகளை நாம் தேர்ந்தெடுத்தால் அவை நமக்கு ஒரு கண்ணியமான தோற்றத்தை தரத்தவறி விடும்.

இன்றைய உலகம் எதையாவது செய்து சாதனை படைக்க வேண்டுமென்றே நாளாந்தம் விரைந்து கொண்டிருக்கிறது.

ஆண் — பெண் இரு பாலாரும் சாதனை புரிவதற்கு போட்டி போட்டுக் கொண்டு முன்வருகிறார்கள். குறிப்பாக வெளிநாடுகளில் சாதனை படைப்பது என்பது சர்வ சாதாரணமான தொன்றாக மாறி விட்டதென்றே கூற வேண்டும்.

இதற்கு சுசிலா மட்டும் விதிவிலக்கா என்ன?

யார் இந்த சுசிலா...?

ராஜஸ்தானில் டோங்கா மாவட்டத்தில் உள்ள ஜூனியார் கிராமத்தைச் சேர்ந்த ஓர் ஏழை இளம் பெண்தான் சுசிலா.

இவர் என்ன சாதனை படைத்து விட்டார் என்கிறீர்களா?

இவர் தமது கைகளை பயன்படுத்தாது கால்களாலேயே எல்லா வேலைகளையும் — மாரைப்புதில் இருந்து செய்கிறார்.

சாதனை படைக்க வேண்டும்



என்பது இவரது நோக்கமல்ல — என்றாலும் நம்மைப் பொறுத்த வரை இது ஒரு சாதனையேதான்!

காரணம் கால் மேல் கால் போட்டுக் கதிரையில் அமர்ந்து கொண்டு வேலையாட்களிடம் வீட்டுப் பணிகளை ஒப்படைத்து விட்டு "ஹாயா"க இருக்கும் நம்மவர் மத்தியில் இப்படியும் ஒரு பெண்!

சுசிலாவின் தந்தையும் இப்படி கால்களால் பல செயல்களை செய்து காட்டிப் பிழைப்பு நடத்தியவர். தனது ஐந்து வயதில் தந்தையிடம் இந்தக் கலையைப் பயின்றவர்தான் சுசிலா.

ஏழைக் குடும்பமாதலால் சுசிலாவால் தொடர்ந்து படிக்க முடியவில்லை. எனவே இந்தக் கலையைப் பயின்று ஊர் ஊராகச் சென்று வித்தை காட்டி பணம் சம்பாதித்து வருகிறார் இவர். இதில்தான் இன்று குடும்பமும் நடக்கிறது.

தந்தைக்கு வயதாகி விட்டதால் அவரால் சுசிலாவுக்கு உதவி செய்ய முடியவில்லை. என்றாலும் மனம் தளராத சுசிலா தொடர்ந்து தனது வித்தையைக் காட்டி சம்பாதிக்கிறார்.

— லேகா —

(த)

| | | |
|---|---|---|
| கோழி முட்டை | — | 4 |
| வெங்காயம் | — | 50 கிராம் |
| கடுகு | — | ½ தேக்கரண்டி |
| எண்ணெய் | — | 50 கிராம் |
| உளுத்தம் பருப்பு | — | ½ தேக்கரண்டி |
| பச்சை மிளகாய் | — | 4 |
| இஞ்சி | — | 1 துண்டு |
| கொத்தமல்லித் தழை | — | 1 கட்டு |
| உப்பு | — | ½ தேக்கரண்டி |
| கறிவேப்பிலை | — | 1 கொத்து |

முதலில் வெங்காயத்தை பொடியாக நறுக்கிக் கொள்ள வேண்டும். அதே போல இஞ்சி பச்சை மிளகாய் கறிவேப்பிலை கொத்தமல்லி தழை இவைகளை யும் நறுக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

அடுப்பில் வாணலியை வைத்து எண்ணெய் விட்டுக் காய்ந்தவுடன் வெங்காயம், இஞ்சி பச்சை மிளகாய் கறிவேப்பிலை கொத்த மல்லித் தழை ஆகியவைகளைப் போடுங்கள்.

அதே வாணலியில் எண்ணெய் விட்டு காய்ந்தவுடன் உளுத்தம் பருப்பைப் போட்டு சிவந்தவுடன் கடுகைப் போட்டு வெடிக்கும் சமயம் வதக்கிய வெங்காய மசாலைப் போட்டு தாளித்து உடனே ஒவ்வொரு முட்டையாக உடைத்து இதில் விட்டுக் கிளறிக் கொண்டேயிருந்து முட்டை சிவக்க வெந்தவுடன் இறக்கி வைத்து விட வேண்டும்.

# பெண்ணுக்கு அழகு தரும் அலங்காரம்

உடல் அலங்காரம் என்றதும் சட்டென நமக்கு ஞாபகத்துக்கு வருவது நமது முகம் தான். முகத்துக்கு பவுடர் பூசி நெற்றியில் திலகமிட்டு, கண் மை பூசி, உதட்டுக்கும் சாயமிடுவது தான் அலங்காரம் என்பது நமது பொதுவான நம்பிக்கை.

ஆனால் இது அலங்காரமாகாது. உடல் அலங்காரம் என்றால் சர்வ அங்கங்களையும் தூய்மையாக சரியான கவனிப்புடன் வைத்துக் கொள்வது என்பது தான் இதன் அர்த்தம்.

சிலரை எடுத்துக் கொள்ளுங்கள். முகம் சகல ஆபரணங்களுடன் ஜொலிக்கும். ஆனால் அவர்களுடைய கை நகங்களைப் பாருங்கள். அவை வெட்டப்படாமல் அல்லது சுத்தம் செய்யப்படாமல் கறுப்பாகக் காணப்படும். கால்களைப் பாருங்கள். சொரசொரப்பாக அழுக்கேறிப் போய், தண்ணீரைக் கண்டே பல நாட்கள் ஆகியிருக்கும். பாதங்கள் சுத்தம் செய்யப்படாமல் இருக்கும். உடைகளில் வியர்வை மணக்கும். கழுத்து மடிப்புகளில் தட்டு தட்டாக அழுக்கு காணப்படும்.

ஆகவே, அலங்காரம் செய்து கொள்வது என்பதற்கு முகத்தைப் போலவே ஏனைய அங்கங்களையும் சுத்தமாக வைத்துக் கொள்வது என்பது தான் சரியான பொருள்.

சிலர் வியர்க்கிறது என்று அழுவார்கள். வியர்க்கும் போது எரிச்சல் எரிச்சலாக வருவது உண்மைதான். ஆனால் உடல் வியர்க்க வேண்டும். வியர்க்க விட வேண்டும். வசதியானவர்கள் பெட்மிண்டன், டென்னிஸ் என்று ஆட்டங்களில் ஈடுபட்டோ அல்லது உடற்பயிற்சி நிலையங்களுக்குச் சென்று நீச்சலில் ஈடுபட்டோ, உடற்பயிற்சி செய்து உடலை வியர்க்க விடுகிறார்கள். வசதியில்லாதவர்கள் வீட்டு வேலைகளில் ஈடுபட்டாவது அல்லது சிறு உடற்பயிற்சிகளில் ஈடுபட்டாவது வியர்வையை வெளியேறச் செய்ய வேண்டும். ஏனெனில் அழுக்கு நீரை வெளியேற்ற வியர்வை உதவுகிறது. இது சருமத்துக்கு மிகவும் நல்லது.

சருமத்தைக் கவனமாகப் பெண்கள் பாதுகாத்து வரவேண்டும். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதைப் போல உடல் ஆரோக்கியத்தின் தன்மையை சருமத்தைப் பார்த்தே சொல்லிவிடலாம். சருமம் பளபளப்பாக கவர்ச்சியாக காணப்பட்டால் நீங்கள் ஆரோக்கியமாக இருக்கிறீர்கள் என்று அர்த்தம். சரியான தூக்கம், சரியான உணவு, சரியான மல வெளியேற்றம் மற்றும் உடற்பயிற்சிகள் ஆகியன உங்கள் சரும ஆரோக்கியத்துக்கு மிகவும் உதவுபவை.

உடல் இளைக்க வேண்டும் எனச் சிலர் கடுமையான உணவுக் கட்டுப்பாடுகளை மேற்கொள்வது வழக்கம். இவ்வாறு உணவுகளைக் குறைப்பது சருமத்துக்கு வேண்டிய சத்துகளைக் கிடைக்க விடாமல் செய்து விடுகிறது. விட்டமின் சி சத்து குறையுமானால் சருமம் பாதிக்கப்படும். தோல் வெடித்து இரத்தம் வழியத் தொடங்கும். சருமத்தின் பளபளப்பு நீங்கி நிறமும் மாறும். தேகத்தின் நிறமும் மாறக் கூடும். ஆகவே உடல் இளைக்கிறேன் என்று உடலை பட்டினி போட வேண்டாம்.

சவர்க்காரம் போட்டு நாம் அடிக்கடி உடலைச் சுத்தம் செய்து கொள்கிறோம் அல்லவா? இவ்வாறு சுத்தம் செய்து கொள்வது அவசியமானாலும் கூட அதிகமாக சவர்க்காரம் கொண்டு அங்கங்களைத் தேய்த்து தேய்த்து சுத்தம் செய்து கொள்வது நல்லது அல்ல. ஏனெனில் சருமத்தை எண்ணெய்ப் பசையுடன் வைத்துக் கொள்ள இயற்கையாகவே உடல் ஒருவகை எண்ணெயைச் சுரக்கிறது. பல்வேறு அங்கங்களுக்கான விசேஷ சுரப்பிகளும் அவசியமான எண்ணெய் வகைகளைச் சுரக்கின்றன. சரும பாதுகாப்புக்கும் அங்கங்களின் இயக்கத்துக்கும் இவை அவசியமானவை. நாம் சவர்க்காரம் கொண்டு அடிக்கடி அங்கங்களைக் கழுவிச் சுத்தம் செய்வதால் இந்த எண்ணெய் உடலில் இருந்து அகற்றப்பட்டு விடுகிறது.

கறுப்பு சருமம் கொண்டவர்களை விட வெண் சருமம் கொண்டவர்கள் சூரிய ஒளியால் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே வெளியே செல்லும் போது எப்போதும் கையில் குடையைத் தவறாமல் எடுத்துச் செல்லுங்கள்.

அலங்காரத்தைப் பற்றி நிபுணர்கள் சொல்லும் போதெல்லாம் ஒரு விடயத்தை எப்போதும் குறிப்பிட மறப்பதில்லை. அதுதான் மனதையும், ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பதும் அது மட்டுமல்ல, பெண்கள் எடுத்ததற்கெல்லாம் புருவங்களை நெறிக்கக் கூடாது. முகத்தைச் சுளிக்கக் கூடாது. அடிக்கடி உணர்ச்சிகளைப் பிரதிபலிப்பது முகத்தில் சுருக்கங்களைத் தோற்றுவித்து விடும். வயதான தோற்றத்தை ஏற்படுத்தி விடும். அழகாகச் சிரித்தால் மட்டும் போதும்.

அதிகம் குளிர்ந்த நீரும், அதிகம் உஷ்ணம் கொண்ட நீரும் குளியலுக்கு உகந்தவை அல்ல. வெதுவெதுப்பான நீர்தான் சருமத்துக்கு நல்லது.

(ம—032)

# குழந்தைகளின் ஆலோசனை நிபுணர்களுக்கு பக்க பலம்!

குழந்தைகளின் ஆலோசனையைப் பெறுவதில் இஸ்ரவேல் கலைஞர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். கட்டிடக் கலை நிபுணர் றக்கேல் சீபா நாட்டிலுள்ள எல்லா ஆரம்பப் பாடசாலைகளுக்கும் விஜயம் செய்கிறார். எவ்விதமான விளையாட்டிடம் குழந்தைகளுக்குத் தேவையெனக் கேட்கிறார். பின் அவர்களினதும், ஆசிரியர்களினதும் ஆலோசனையுடன், 4 புதிய விளையாட்டு மைதானங்களை அவர் உருவமைத்திருக்கிறார்.

ஏற்கனவே இருந்த விளையாட்டு மைதானத்தை அவர்களது ஞாபகத்திலிருந்து வரையுமாறு டாக்டர் சீபா குழந்தைகளைக் கேட்டார். இதிலிருந்து அவர்களது பார்வைக்கு விளையாட்டு மைதானம் எப்படித் தெரிந்தது, அத்துடன் இட வசதி, உபகரணம் போன்றவை தொடர்பில் அவர்களுக்கு எது முக்கியமாக இருந்தது என்பதை அறிந்து கொள்ளலாம். அவர்கள் விளையாடுவதைப் பார்த்த பின், அவர்களுக்குப் பிடித்தமான விளையாட்டு மைதானத்தை வரையுமாறு சொன்னார்.

அவர்களுடைய சில ஆலோசனைகள் — நீச்சல் தடாகம், கேளிக்கைப் பூங்கா சவாரிகள் போன்றவை முடியாத காரியங்கள். ஆனால், விளையாட்டு மைதானம் ஓடுவதற்கு, பாய்வதற்கு, மற்றும் பெரிய மோட்டார் வாகன விளையாட்டுகளுக்கு உரிய இடமென்று 11 வயதுக்குட்பட்டவர்கள் கண்டு கொண்டார்கள் என்பதை அவர் அறிந்து கொண்டார். அதாவது அங்கே அவர்கள் குதூகலத்தை அனுபவிக்க, அவர்களுடைய வீரத்தைச் சோதிப்பதற்கு, அத்துடன் விளையாட்டு வீடுகளிலும், கார்களிலும் ரயில்களிலும் முழுச் சுதந்திரத்தோடு விளையாட விரும்பினார்கள் என்பது புலனாயிற்று.

"குழந்தைகளின் வரைதல் மிகவும் ஆக்கபூர்வமாக இருந்தது" எனக் கூறுகிறார் டாக்டர் சீபா. அவர்கள் வரையும் போது விளையாட்டிடம் அமைப்பில் உள்ள அடிப்படைப் பிரச்சினைகளை அவர்கள் மனத்தில் வைத்திருந்தார்கள் என்பதைக் கண்டார். அவர்களை ஈடுபடுத்தியது, குழந்தைகளின் எண்ணத்தில் மட்டுமே உதிக்கக் கூடிய புதிய நோக்குகள், உள் நோக்குகள், எண்ணங்கள் கொண்ட உருவமைப்புகளை உருவாக்க உதவிற்று என டாக்டர் சீபா கூறுகிறார்.

கோட்பாட்டைச் செயலில் காட்டி, கட்டிடக் கலை உருவமைப்பில் உள்ள புதுப்பாங்கின் மீதுள்ள அவரின் நம்பிக்கைக்கு டாக்டர் சீபா உருவம் கொடுத்தார். "முதியோரைப் போன்றே குழந்தைகளும் தங்களுக்கு வேண்டிய சூழலை அமைத்துக் கொள்ள விரும்புவதோடு மட்டுமல்ல, அப்படி அமைத்துக் கொள்ளவும் அவர்களால் முடியும். அத்துடன் அவர்களுடைய வாழ்க்கையை அவர்களே நிர்ணயித்துக் கொள்ளவும் விரும்புகிறார்கள்" எனக் கூறுகிறார் டாக்டர் சீபா.

(ம)

# தந்தை — மகன் உறவை நிரூபிக்க இரத்தப் பரிசோதனை உதவுமா?

ஒரு குழந்தைக்கு இவர்தான் தந்தை என்று உறுதியாகக் கூறலாமா? உறுதியாகத் தகப்பனைத் தெளிவுபடுத்தும் முறை என்ன என்பதைச் சற்றே தெரிந்து கொள்வோம்.

"இவற்றுள் முதன்மையானது:- (1) இரத்த அணுக்களின் சேர்க்கை. ஒருவருக்கு அவருடைய இரத்தம் "ஏ" பிரிவைச் சார்ந்தது என வைத்துக் கொள்வோம்.

தாயினுடைய இரத்தமும் "ஏ" பிரிவைச் சார்ந்ததாக இருக்குமேயானால், கண்டிப்பாக குழந்தை "ஏ" பிரிவு இரத்தத்தைச் சார்ந்ததாகத்தான் இருக்க வேண்டும்.

குழந்தை "பீ" பிரிவு அல்லது "ஓ" பிரிவைச் சார்ந்ததாக இருக்குமேயானால், கண்டிப்பாக அக்குழந்தைக்கு தகப்பன் "ஏ" பிரிவைச் சார்ந்தவர் அல்லர்.

அடுத்து, தகப்பன் "ஏ" பிரிவும், தாய் "பி" பிரிவுமாக இருந்தால், குழந்தை "ஏ" அல்லது "பி" பிரிவு இந்த வகையைச் சார்ந்ததாகத்தான் இருக்க வேண்டுமேயொழிய, "ஓ" பிரிவைக் கொண்டிருக்க முடியாது. அவ்வாறு இருந்தால் "ஓ" பிரிவைக் கொண்ட அக்குழந்தை "ஏ" பிரிவு தகப்பனுக்குப் பிறந்த குழந்தை அல்ல.

தகப்பன் "ஓ" பிரிவு ஆக இருந்தால் தாயும் "ஓ" பிரிவு ஆக இருக்கும் பட்சத்தில் பிறக்கும் குழந்தை "ஓ" பிரிவு ஆக இருந்தால்தான், "ஓ" பிரிவு தகப்பனின் குழந்தையாக இருக்க முடியும்.

குழந்தை "ஏ" அல்லது "பீ" பிரிவு வகையைச் சேர்ந்து இருந்தால் இது ஒன்றே போதும், "ஏ" பிரிவைச் சார்ந்த குழந்தை "ஓ" பிரிவைச் சார்ந்த தகப்பனுடையது அல்ல என்பதைத் தெளிவுபடுத்தும்.

அடுத்து ஆர் எச் எனப்படும் வகையைக் கண்டறிய வேண்டும். ஒவ்வொரு மனிதரின் இரத்தத்திலும் ஆர் எச் குறிகள் உள்ளன.

இந்த ஆர் எச் குறிகள் இரு வகைப்படும். ஒன்று ஆர் எச் பொசிட்டிவ் வகையைச் சார்ந்தது. மற்றொன்று ஆர் எச் நெகட்டிவ் வகையைச் சார்ந்தது. இந்த இரண்டு வகை ஆர் எச் குறிகளில் ஏதேனும் ஒன்றுதான் ஒருவருடைய இரத்த அணுவில் இடம்பெற்றிருக்கும்.

தகப்பன் ஆர் எச் பொசிட்டிவ் குறியைச் சார்ந்தவராக இருந்தால் பிறக்கும் குழந்தை ஆர் எச் பொசிட்டிவ் ஆகத்தான் இருக்க வேண்டும்.

ஆர் எச் நெகட்டிவ் குறியைச் சார்ந்ததாக இருக்க முடியாது. அவ்வாறிருந்தால் அந்தக் குழந்தை ஆர் எச் பொசிட்டிவ் குறியைச் சார்ந்த தகப்பனுடைய குழந்தையாகாது.

அவ்வாறே தகப்பன் ஆர் எச் நெகட்டிவ், தாயும் ஆர் எச் பொசிட்டிவ் குறியைச் சார்ந்திருக்கும் போது, குழந்தை ஆர் எச் பொசிட்டிவ் குறியைச் சார்ந்ததாக இருக்க முடியாது.

அவ்வாறிருந்தால் ஆர் எச் பொசிட்டிவ் குறியைச் சார்ந்த அக்குழந்தை ஆர் எச் நெகட்டிவ் குறியைச் சார்ந்த தகப்பனுக்கு சொந்தமானதல்ல என்று கூறி விட முடியும்!

(ம—19)



சத்யராஜ் வாத்தியார் ஆகிருரா? ஷோபனுவுக்கு அவர் காதல் பாடம் புகட்டுவது "வாத் தியார் வீட்டுப் பிள்ளை" படத்தில்.

(ம-10)



செந்தில் கண்டால் ஆபத்துத்தான். "மனைவி நல்ல மனைவி" படத்தில் கோவை சரளாவை மடக்கியவர் சார்லி.

(ம-10)

# சீதா ராசியான கதாநாயகி

சீதா ராசியான கதாநாயகி ஆகிவிட்டார். இவருடன் அறிமுகமான டைரக்டர் – கதாநாயகன் பாண்டியராஜன் "ஆண் பாவம்" மூலம் புகழ்பெற்ருர். இப்போது டைரக்டர், கதாநாயகன் பார்த்திபன் "புதிய பாதை" மூலம் புகழ் பெற்று இருக்கிருர்–

இவர்களை அடுத்து புதிய டைரக்டர் – கதாநாயகன் ராஜேஷ் கண்ணு தனது "நான் வளர்த்த பூவே" படத்துக்கு சீதாவிடம் "கால்ஷீட்" கேட்டு இருக்கிருர்.

"புதிய பாதை" படம் சீதாவிற்கு பல வகையிலும் உண்மையாகவே புதிய பாதையாகவே அமைந்துள்ளது ரஜனிகாந்த். கமல் உட்பட பல "டாப்" நட்சத்திர நடிகர்களுடன் நடித்தும் கிடைக்காத அளவிற்கு ஒரு பெயரை சீதாவிற்கு இந்தப் படம் தந்திருப்பது உண்மை.

சீதா என்றவுடன் அவரது சிறப்பு மிக்க கண்கள்தான் எல்லாருக்குமே நினைவுக்கு வரும். சீதாவின் சக்தி மிக்க அந்தக் கண்கள் அவருடைய நடிப்பில் பாதி வேலையைச் செய்துவிடுகின்றன. எந்த இயக்குநராக இருந்தாலும் சீதாவின் கண்களை குளோசப் காட்சிகளாகக் காட்டத் தவறுவதே இல்லை.

"பார்த்திபனின் புதிய பாதை உங்களுக்கு ஏராளமான பாராட்டுக்களைப் பெற்றுத் தந்திருக்கிறது போலத் தெரிகிறதே சரிதானு?" என்று நிருபர் கேட்டார்.

"ரொம்ப கரெக்ட். இப்போது கனமான வேடங்களைக் கூட என்னை நம்பிக் கொடுக்கலாம் என்று பல டைரக்டர்கள் நினைக்கிருர்கள். தமிழ்ப் படங்களில் சற்றே டல்லாக இருந்த எனக்கு புதிய சீசனை ஆரம்பித்துக் கொடுத்திருக்கிறது "புதிய பாதை".

"நான் கவர்ச்சியாக நடிக்க எப்போதுமே ஆசைப்பட்டது கிடையாது. மாடர்ன் உடைகளை அணிந்து நான் நடிப்பதை ரசிகர்கள் விரும்பவில்லை. "கவர்ச்சி உங்கள் வளர்ச்சிக்கு ஏற்றதல்ல; உங்கள் காந்தக் கண்கள் தராத கவர்ச்சியையா உடைகள் கொடுத்துவிடப் போகின்றன" என்று பல ரசிகர்கள் எழுதுகிருர்கள். சீதா என்ருலே அடக்க ஒடுக்கமான ஆறு கஜ புடவை என்ருகி விட்டது" என்ருர் சீதா.

"ஏதாவது படங்களில் நடிக்க முடியாமல் போய்விட்டதே என்று எண்ணியது உண்டா?"

"அப்படி நினைக்காத நடிகைகளே இருக்க முடியாது. சமீபத்தில் வெள்ளி விழா கொண்டாடிய படமான "பாட்டி சொல்லைத் தட்டாதே" படத்தில் நடித்து கேடயம் வாங்கி இருக்க வேண்டியவள் நான். ஆனல், வேறு படங்கள் இருந்ததால் தவறிவிட்டது. பிரபல டைரக்டர் கே எஸ் ஜி "அத்தை மடி மெத்தையடி" படத்தில் நடிக்கக் கூப்பிட்டு இருந்தார். அவர் கேட்ட 25 நாட்களில் வேறு படப்பிடிப்புக்கள். என்ன செய்வது. நல்ல குடும்பப் படம் ஒன்றை இழந்தேன். இப்படி எத்தனையோ படங்கள்.

ஆனல், நான் மிக விரும்புகின்ற ஊமைப் பெண் போன்ற வேடங்களில் நடிக்க யாராவது எனக்கு வாய்ப்புக் கொடுத்தால் எப்படியாவது அட்ஜஸ்ட் செய்து அதில் நடிப்பேன். சற்று வித்தியாசமான வேடத்தில் நடித்து சிறந்த நடிகை பரிசை தமிழ்நாட்டிற்கு பெற்றுத் தர விரும்புகிறேன்" என்ருர் சீதா.

(ம-10)

# ராமராஜனுக்கு கொலை மிரட்டல்

காலை நேரம்– ராமராஜன் வீட்டில் இருந்து புறப்படும்போது டெலிபோன் மணி ஒலித்தது– "இன்று வீட்டிலேயே இரு– வெளியே கிளம்பி எங்கள் கண்காணிப்பில் இருக்கும் பெண்ணை மீட்க முயன்ருல் உனது உயிர் பறிக்கப்படும்" என்று டெலிபோனில் மிரட்டினுன் ஒரு மர்ம மனிதன்–

மிரட்டலுக்கு அஞ்சாமல் மோட்டார் சைக்கிளில் ஏறி அந்த பெண்ணை மீட்க செங்கல் பட்டை அடுத்த திரிசூலம் மலை நோக்கி பறந்தார் ராமராஜன்–

இப்படி ஒரு பரபரப்பான காட்சி ஸ்ரீ காயத்ரி சினிஆர்ட்ஸ் ஏராளமான பொருட் செலவில் தயாரிக்கும் "அன்புக் கட்டளை" என்ற படத்துக்காக படமானது–

ராமராஜன் ஜோடியாக பல்லவி நடிக்க செந்தில் – கிட்டி – விஜசக்ரவர்த்தி – விஜயகிருஷ்ண ராஜ் – கோவை சரளா மற்றும் பலர் நடிக்கிருர்கள்–

இளையராஜா இசை அமைக்க ஆர் எம் சுப்பையா தயாரிப்பு மேற்பார்வையில் யார் கண்ணன் கதை திரைக்கதை வசனம் எழுதி டைரக்ட் செய்யும் படம் "அன்புக் கட்டளை"– (ம—10)

# ஊட்டியில் வளரும் "ராஜா சின்ன ரோஜா"

ரஜனிகாந்த் நடிக்க ஏவி எம் புரொடக்சன்ஸ் "ராஜா சின்ன ரோஜா" என்ற படத்தை வளர்த்து வருகிறது– படப்பிடிப்பு ஏவி எம் படப்பிடிப்பு நிலயத்தில் அமைக்கப்பட்ட பிரமாண்ட அலங்கார அரங்குகளில் நடந்தது–

இறுதிக் கட்ட படப்பிடிப்பு ஊட்டியில் 10 நாட்கள் நடைபெறும்– ராஜாவாக ரஜனிகாந்த் நடிக்க சின்ன ரோஜாவாக நடிக்கிருர் பேபி ஷாலினி–

விநாயகம் ஒளிப்பதிவு செய்கிருர்– எஸ் பி முத்துராமன் டைரக்ட் செய்யும் இந்த "ராஜா சின்ன ரோஜா"வின் தயாரிப்பு– ஏவி எம் சரவணன் – பாலசுப்பிரமணியன்– இணை தயாரிப்பு– எம் எஸ் குகன்– (ம—10)

# நட்சத்திர கூட்டத்துடன் "வெற்றி விழா"

# உஷ்.... இது ரகசியம்

கணவனைப் பிரிந்த பிரபல நடிகை ஒருவரும், கதாநாயகன், வில்லன் நடிகரும் தினமும் அந்தப் பெரிய நட்சத்திர ஹோட்டலில் சந்தித்து பொழுதைக் கழிக்கிருர்கள்.

★

மகாபலிபுரத்தை அடுத்த ரோட்டு ஓரம் நடிகை திருதேவிக்கு கண்ணுக்கு எட்டாத தூரம் வரை விரிந்து பரந்துள்ள தோட்டம் ஒன்று உள்ளது. இதை அங்கு தினசரி சென்று மேற்பார்வையிடும் பொறுப்பு நடிகையின் அப்பாவுக்கே. அப்பா அந்தத் தோட்டத்துக்குச் செல்வதோ "ஓல்டு மாடல்" காரில்தான். இந்தக் காரைப பார்த்து சிரிக்கும் ரசிகர்கள் கூட்டத்தை அங்கு தவருமல் பார்க்கலாம்.

★


"சின்னப் பூவே மெல்லப் பேசு" படத்தின் அறிமுக நாயகன் இன்று பல படங்களில் நடிக்கும் இந்த நாயகன் படத்துக்குப் படம் ஊதிய "ரேட்"டை எக்கச்சக்கமாக உயர்த்துவதால் புதுப்பட எண்ணிக்கை குறைகிறதாம்! இந்த நடிகரின் ஊதியத்தைக் கேட்டதும், நேராக முரளி மற்றும் புத நடிகர்கள் பக்கம் ஓடுகிருர்களாம்! அந்த அறிமுக நாயகனின் சரியான ஒத்துழைப்பு இல்லாதது, ஊதிய ரேட்டை உயர்த்துவது ஒரு நடிகரின் முன்னேற்றத்துக்கு தடை போடும் என்பது தெரியுமா?

★

"புதிய பாதை" கதாநாயகன் கதாநாயகி இடையே காதல், விரைவில் கல்யாணம் என்ற பேச்சு சினிமா வட்டாரத்தில் அடிபடுகிறது. இது அந்த கதாநாயகனை கிளப்பிவிடும் தகவல் என்ற பேச்சும் அடிபடுகிறது. "ஒரு படத்தின் ஜோடியாக நடித்ததுமே காதல் கல்யாணம் என்று சொல்வதா?" என்று கடுகடுப்புடன் கேட்கிருராம், கதாநாயகி.

★

கோடை வெயிலுக்கு சுகம் தேட பிரபல நடிகர்கள்– நடிகைகள் படப்பிடிப்பை ஊட்டி, கொடைக்கானலில்



...ன் சாயான ஒத்துழைப்பு இல்லாதது, ஊதிய ரேட்டை உயர்த்துவது ஒரு நடிகரின் முன்னேற்றத்துக்கு தடை போடும் என்பது தெரியுமா?

★

"புதிய பாதை" கதாநாயகன் கதாநாயகி இடையே காதல், விரைவில் கல்யாணம் என்ற பேச்சு சினிமா வட்டாரத்தில் அடிபடுகிறது. இது அந்த கதாநாயகனை கிளப்பி விடும் தகவல் என்ற பேச்சும் அடிபடுகிறது. "ஒரு படத்தின் ஜோடியாக நடித்ததுமே காதல் கல்யாணம் என்று சொல்வதா?" என்று கடுகடுப்புடன் கேட்கிறார், கதாநாயகி.

★

கோடை வெயிலுக்கு சுகம் தேட பிரபல நடிகர்கள்-நடிகைகள் படப்பிடிப்பை ஊட்டி, கொடைக்கானல் நடத்த பட அதிபர்களுக்கு கண் ஜாடை செய்கிறார்கள். இந்தி நடிகர், நடிகைகள் அமெரிக்கா, லண்டன் என்று கண் அசைவு காட்டுகிறார்களாம்! படத் தயாரிப்பு "பட்ஜெட்"டுக்கு தக்கபடி சுகம் தேடும் இடங்களும் மாறுமோ!

(ம-10)

...புரொடக்சன்ஸ் ராஜா சின்ன ரோஜா" என்ற படத்தை வளர்த்து வருகிறது- படப்பிடிப்பு ஏவி எம் படப்பிடிப்பு நிலையத்தில் அமைக்கப்பட்ட பிரமாண்ட அலங்கார அரங்குகளில் நடந்தது-

இறுதிக் கட்ட படப்பிடிப்பு ஊட்டியில் 10 நாட்கள் நடைபெறும்- ராஜாவாக ரஜனிகாந்த் நடிக்க சின்ன ரோஜாவாக நடிக்கிறார் பேபி ஷாலினி-

கௌதமி - ரவிச்சந்திரன்- ரகுவரன் - ஜெய்கணேஷ் - எஸ் எஸ் சந்திரன் - கோவை சரளா மற்றும் பலர் நடிக்கிறார்கள்-

பஞ்சு அருணாசலம் கதை திரைக்கதை வசனம் எழுத சந்திரபோஸ் இசை அமைக்க - ...ரூ- எஸ் பி முத்துராமன் டைரக்ட் செய்யும் இந்த "ராஜா சின்ன ரோஜா"வின் தயாரிப்பு ஏவி எம் சரவணன் - பாலசுப்பிரமணியன்- இணை தயாரிப்பு- எம் எஸ் குகன்-

(ம—10)

## நட்சத்திர கூட்டத்துடன் "வெற்றி விழா"

சிவாஜி புரொடக்சன்ஸ் "வெற்றி விழா" படத்தை பிரமாண்ட முறையில் உருவாக்கிக் கொண்டிருக்கிறது-

மலஹாசன் - பிரபு நடிக்கும் படம் இது- கமலஹாசனின் ஜோடியாக அமலா - சசிகலா - டிஸ்கோ சாந்தியும் - பிரபுவின் காதலியாக குஷ்பூவும் நடிக்கிறார்கள்-

சௌகார் ஜானகி - எஸ் எஸ் சந்திரன் - ஜனகராஜ் - சின்னி ஜெயந்த் நடிக்க வில்லனாக கன்னட நடிகர் சுதிர் - ராஜா பகதூர் - பிரதீப் சக்தி - சந்திரகாந்த் நடிக்கிறார்கள்-

சண்முக பிரியன் - கே ராஜேஸ்வர் கதை வசனம் எழுத திரைக்கதை அமைத்து டைரக்ட் செய்கிறார் பிரதாப் போத்தன்- இசை- இளையராஜா-

(ம—10)



பிரபு காதலிப் பதில் கெட்டிக்காரன்தான். நிரோஷா அவரைச் சீண்டி விளையாடுவது "காவலுக்குக் கெட்டிக்காரன்" படத்திற்காக.

(ம-10)

# கொச்சைத் தமிழ் பேசி நடிக்கிறார் சீதா

முன்னாள் அமைச்சர் எஸ் திருநாவுக்கரசு வழங்க புதிய பட நிறுவனம் பொன்மனம் பிலிம்ஸ் "மருது பாண்டி" என்ற பெயரில் படம் தயாரிக்கிறது-

ராம்கி - சீதா ஜோடியாக நடிக்கும் "மருது பாண்டி" தொடக்க விழா பிரசாத் ஒலிப்பதிவு கூடத்தில் பாடல் ஒலிப்பதிவுடன் நடந்தது-

இளையராஜா இசை அமைக்க மனோஜ்குமார் கதை திரைக்கதை வசனம் எழுதி இயக்கும் படம் "மருது பாண்டி"- பாரதிராஜாவின் பல படங்களில் டைரக்ஷன் துறையில் பணிபுரிந்த மனோஜ் குமார் ஏற்கனவே டைரக்ட் செய்து திரைக்கு வந்துள்ள படம் "மண்ணுக்குள் வைரம்" விரைவில் திரைக்கு வரும் "பச்சைக் கொடி" என்ற படத்தையும் டைரக்ட் செய்து கொண்டிருக்கிறார்-

மைசூர் - தலைக்காவேரி - கொள்ளேகால் மற்றும் இயற்கை எழில் சூழ்ந்த பகுதிகளில் படப்பிடிப்பு நடைபெறும்- பொன்மனம் சுப்பையா தயாரிப்பு மேற்பார்வையில் எஸ் செல்வரத்தினம் தயாரிக்கிறார்-

"மருதுபாண்டி"யில் கறுப்பு போர்வை அணிந்த இரவு நேரம் ஊர்காக்கும் காவல்காரனாக வேடமேற்று ராம்கி நடிக்க கொச்சைத்தமிழ் பேசும் நாட்டுப்புற பெண் வேடமேற்று நடிக்கிறார் சீதா-

"சினிமாஸ்கோப்"பில் (அகன்ற திரை) உருவாகும் "மருது பாண்டி"யை வருகிற தீபாவளி நாளில் திரையிட திட்டமிட்டு உள்ளனர்-

(ம—10)

## "பொண்ணு வந்த நேரம்"

கே முத்தையா வழங்க கே எம் எஸ் சினி ஆர்ட்ஸ் தயாரிக்கும் "பொண்ணு வந்த நேரம்" என்ற படத் தொடக்க விழா ஏவி எம் ஒலிப்பதிவு கூடத்தில் பாடல் ஒலிப்பதிவுடன் நடந்தது-

யோகராஜ் - முரளி - செந்தில் - கவுண்டமணி - விஜயசக்ரவர்த்தி - சிவராமன் - ரஞ்சனி- பிரமிளா - காந்திமதி - கோவை சரளா - புதுமுகம் ராகப்பிரியா



கௌதமி அருகில் இருக்கும் போது விஜயகாந்த் சீதாவுடன் சரசம் ஆடுவது முறையல்ல. "ராஜ நடை" படத்தில் இந்தக் கட்டம்.

(ம-10)

# கவர்ச்சியில் மாதுரியும் சித்ராவும் பலப்பரீட்சை


மாதுரிக்கும், சித்ராவுக்கும் இடையே ஒரு ஆரோக்கியமான போட்டி ஏற்பட்டுள்ளது. மாதுரி ஒரு டைரக்டரின் காதல் வலையில் சிக்கி இருந்த நேரத்தில், அவருடைய இடத்தை சித்ரா பிடித்துக் கொண்டார். கவர்ச்சி காட்டி நடிப்பதில் மாதுரியை விட தாராளமாக நடந்து கொண்டார். இதனால் சித்ராவுக்கு படங்கள் குவிந்தன.

இப்போது மாதுரி காதல் வலையில் இருந்து விடுபட்டு விட்டார். இழந்த "மார்க்கெட்"டை திரும்பப் பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். "சித்ராவை விட கவர்ச்சி காட்டி நடிக்கத் தயார்" என்று எல்லா தயாரிப்பாளர், டைரக்டர்களுக்கும் தூது விடுகிறார்.

ஆனாலும் குறைந்த பட்ஜட் படம் என்றால் தயாரிப்பாளர்கள் பல்லவியையே தேடுகிறார்கள். பல்லவியின் சம்பளமும் குறைவு. "கால்ஷீட்" தொல்லையும் குறைவு என்பதே இதற்குக் காரணம்.

ஆனால் கௌதமியோ புதுமுக நடிகர்களுடன் நடிக்க மறுக்கிறார். நட்சத்திர அந்தஸ்துள்ள "ஹீரோ"க்களுடன் மட்டுமே நடிப்பேன் என்று நிபந்தனை விதிக்கிறார்.

(ம-10)



பாண்டியனின் வெற்றிடம்பைத் தொடும் போது சித்ராவுக்குக் கிளுகிளுப்பு ஏற்படுகிறது. படம்; "மனைவி நல்ல மனைவி"

(ம-10)

# கோடம்பாக்கம் டைரி

நடிகர் யோகராஜ் பெயரைச் சொன்னால் துணை நடிகைகள் "இம்சை" என்று தலையில் அடித்துக் கொண்டு ஓட்டம் பிடிக்கிறார்களாம்.

★

1990 முதல் ரஜனிகாந்த் வருடத்துக்கு இரண்டு படங்களில் மட்டும் நடிக்க திட்டமிட்டு இருக்கிறார். மீதி நேரத்தை இமய மலை ஆசிரமங்களில் சாமியார்களுடன் கழிக்க முடிவு செய்து இருக்கிறார்.

★

சமீபத்தில் சென்னையில்வீசிய புழுதிப் புயலுக்கு டைரக்டர் பாரதி ராஜா "என் உயிர்த் தோழன்" படப்பிடிப்புக்காக திறந்த வெளியில் மிகுந்த பொருட் செலவில் அமைத்திருந்த குடிசைகள் நிறைந்த அரங்கமும் தப்பவில்லை. புயலில் பறந்தது பாதி! கையில் கிடைத்ததை சிலர் எடுத்துச் சென்றதால் காணாமல் போனது மீதி! ஆக, அரங்கமே காலி! மீண்டும் அரங்கம் அமைக்கப்பட்டது. செலவு இரட்டிப்பு! படத் தயாரிப்பில் இது போன்ற சோதனைகள் பல!

(ம-10)

# தியாக உள்ளம்

முபீதா ஆரிபீன்

காற்று பலமாகச் சுழன்றடித்துத்தான புயல் ஏற்பட வேண்டும் என்பதில்லை. ஒரு சிறு கடிதம் கூட ஒரு மாபெரும் புயலை உண்டாக்க முடியும்.

அதற்குச் சாட்சியாக இருந்தது மும்தாஜின் கையிலிருந்த அந்தக் கடிதம்.

தன்னுடைய விவகாரத்தில் மெதுவும் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல், சஞ்சலத்தில் ஆழ்ந்தவளாகவும் அதே நேரத்தில் தன் சஞ்சலத்தைச் சாமார்த்தியமாக மறைத்துக் கொண்டவளாகவும் நடமாடிக் கொண்டிருந்தாள் மும்தாஜ். அவளது சிவந்த முகத்தில் அனல் பறந்தது.

இரவு முழுவதும் தூங்காமல் தன் படுக்கை அறையில் "நான் குறுக்கும் நெடுக்கும் சுற்றிச் சுற்றி எத்தனை நடை நடந்திருப்பேனோ?" என்று தன்னையே கேட்டுக்கொண்டாள்.

தூக்கமில்லாத காரணத்தாலோ என்னவோ கண்களின் சிவந்து கரித்தது கண்ணீர், மனம் வெடித்தது.

சன்னலினூடே சலவிட்டு வீசிய இளங் காற்றினூடே பள்ளிவாயலிலிருந்து வந்த அதான் ஒலி அவளது செவிகளில் மோத; சுய நினைவுக்கு வந்தவளாய் ஸுப்ஹுத் தொழுகைக்காக ஆயத்தமானாள்.

காலைத் தொழுகையை முடித்துவிட்டு அவ்விடத்திலே இருந்து வழமையாக ஓதும் குர்ஆனில் குறிப்பிட்ட சில பக்கங்களை ஓதினாள்.

அறை முழுவதும் ஊதுவத்தியின் நறுமணம் கமழ்ந்து கொண்டிருந்தது. தனக்குப் பிடித்தமான சூழ்நிலையில் மனதுக்கு அமைதி தரும் காரியத்தை செய்து கொண்டிருந்தாள்.

"டீ போட்டிருக்கேன் வந்து குடிச்சிட்டுப் போம்மா மும்தாஜ்..." வேலைக்காரியாக வந்து ஒரு தாயின் அன்பை வழங்கும் கதீஜா உம்மாவின் குரல் அது.

தேநீரைப் பருகிவிட்டு வந்த மும்தாஜ் கட்டிலில் சாய்ந்து கொண்டு அவள் இதயத்தை பாதித்த அந்த மடலை கையில் எடுத்தாள்.

அவளையறியாமல் கண்கள் நிறைய... அவளது எண்ணப் சுழலைப்பிடிப்பான கன்னங்கள், ஒளி வீசும் கண்கள்... வானில் மின்னும் நட்சத்திரக் கூட்டங்களுக்கிடையில் பவனிவரும் வண்ண நிலா போல் ஒளிர்ந்து கொண்டிருந்தாள்.

"உம்... அப்புறம்?" என்றான் லாபீர், அவளைப் பார்த்து ஒரு பெருமூச்சு விட்டபடி; "என்ன விசேஷம் ஏதாச்சும் உண்டா?"

"நிறைய!" என்றாள் மும்தாஜ், மண்ணைக் குவித்தபடி,

"சொல்லேன்"

"அடுத்த கிழமை நாங்களெல்லாம் நுவரெலியா அங்கில கார்டன் பிக்னிக் போகப் போகிறோம்"

"உம்"

போறீங்களேன்; வாப்பா இப்போ ரொம்ப "பிஸி"யாக இருக்கிறார், என்று நான் சொல்லித்தான் நீங்க தெரியணுமா? திரும்பவும் மக்காவுக்குப் போகிறார்" "சரிதான் போ! இன்னும் எத்தனை நாளைக்குத் தான் இப்படி நினைவிலேயே காலத்தைக் கடத்துவது?

லாபீர் அவளது தந்தையின் வியாபார நிறுவனத்தை பொறுப்பேற்று நடத்துபவன், மும்தாஜின் தந்தையான இத்ரீஸ் ஹாஜியாரின் அன்புக்கும், நம்பிக்கைக்கும் பாத்திரமானவன்;

தனக்கு பதினைந்து வயது நடக்கும் போதே தன் வறுமையிலிருந்து விடுதலை பெறும் நோக்கில் கல்வியையும் இடைநிறுத்தி விட்டு வேலை தேடி அலைந்த லாபீரின் அதிர்ஷ்டமோ என்னவோ இத்ரீஸ் ஹாஜியாரின்

அன்பு மைனியை ஏமாற்ற மாட்டீர்கள் என்றே நம்புகிறேன்,

நீங்கள் இல்லையென்றால் எனக்கொரு வாழ்வே வேண்டாம் கடிதம் கண்டதும் உடனே வரவும்.

இப்படிக்கு உங்களிற்காகவே பிறந்த ரிஸ்மியா.

கடிதத்தைப் படித்த மும்தாஜின் உள்ளம் உருகியது. சட்டென்று காது அடைக்காதா, கண் மயங்காதா, வாய் குழறாதா, நெஞ்சு வெடிக்காதா, பூமி அப்படியே பிளந்து தன்னை விழுங்காதா, ஆகாயம் "பொத்" தென்று தலை மேல் விழாதா என்றெல்லாம் கலங்கிக் கொண்டிருந்தாள்.

அவள் உடலின் ஒவ்வொரு அங்குலத்திலும் ஊசியைச் செருகின மாதிரி ஊமைக்காயமாக வலித்தது. வேதனை செய்தது.

பெரியும் நெருப்பினூடே அங்கனை அல்லாஹ்வுக்காகத் தியாகம் செய்யும் மனம் அவர்களுக்கு இருந்தது.


அன்புக்கனி இஸ்மாயில் (அலை) அவர்களை அல்லாஹ்வுக்காக இழக்கும் – குர்பான் செய்யும் – சிந்தை அவர்களுக்கு அமைந்திருந்தது.

இத்தகைய உயர் குணங்களை ஆய்ந்து தெரிந்து ஒழுகுவதே "தியாகத் திருநாளை" நல்முறையில் கொண்டாடும் முறையாகும்.

அல்லாஹ்விற்காக ஆசை, பந்தம், பாசம் அனைத்தையும் தியாகம் செய்தார்கள் ஹஸரத் இப்ராஹிம் (அலை) அவர்கள், மக்கா சென்று ஹஜ் செய்வோரின் மனநிலையும் இது போன்று தான் அமைந்திருக்கும்.

இதைத்தான் "ஹஜ்" பெருநாள் ஆண்டுதோறும் நினைவுறுத்திக் கொண்டிருக்கிறது.

எனவே தியாகத் திருநாளின் உயிர்ப்பையும். உட்கிடக்கையை யும் உணர்ந்து செயலாற்றுவோமாக! தியாக உணர்வுடனே பெருநாளை நாடுவோமாக!"



"இப்போது இருக்கிற காரை விற்று விட்டு வேறு புதுக்கார் வாங்கும்படி எங்க வாப்பாக் கிட்டே சொல்லிட்டிருக்கேன்"

தானே? எங்கே போக ஐடியாப் பண்ணியிருக்கே?"

"நீங்க நினைக்கிற எங்கேயும் இல்லே அதை விட முக்கியமான இடத்துக்கு... அது தான் உங்க வீட்டுக்கு போக வேணும்னு சொல்றேன்..."

"இத்தனை நாளாய் வராத ஆசை எப்படி திடீர்னு வந்துட்டுது? ஆச்சரியமாயிருக்கே..."

"இப்ராஹிம் (அலை) அவர்களின் ஒரே மகன். இஸ்மாயில் (அலை) அவர்களை அல்லாஹ்வுக்காக தியாகம் செய்யும்படி உத்தரவு வந்த போது தன் இதயத்தின் ஒரு துண்டான இஸ்மாயில் (அலை) அவர்களை அல்லாஹ்விற்கு அர்ப்பணிக்கத் துணிந்தது ஆசையினாலா? இல்லையே!

அது அல்லாஹ்வின் கட்டளை என்பதனால் தானே பந்த பாசங்களை அவளது சிந்தனை அலைமோதியது.

"என் மௌனமாயிட்டே?, நாளைக்கு வேறு எங்கேயும் போக மாட்டேன், உன்னோடு அங்கும் நீ நினைக்கிற இடத்துக்கு வந்திடுறேன் போதுமா?

அவளது முகத்தில் திருப்தி தெரிந்தது. அது அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

பயணத்துக்கான ஆயத்தங்

வங்க... எங்களுக்கு ஒழுக்கம் தான் முக்கியம்... என் மகனுடைய நடத்தை பற்றி எங்களுக்கு வதந்திகள் வந்து கொண்டே இருக்கு.

முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படக் கூடாதும்மா. அவன் வேலைசெய்யிற கடை முதலாளியோட மகளை அழைத்துக் கொண்டு சுற்றித்திரிவதாக வந்து சொல்கிறார்கள்,

முதலாளியோட உப்பைத் தின்று வளர்ந்தவன் அவருக்கே துரோகம் பண்ணத் துணிந்திட்டானே என்று தான் அம்மா கவலைப்படுறேன்..." பேசிக் கொண்டே போனாள், அந்தத் தாய்.

தாயின் பேச்சு முடிய அந்த இளம் பெண் தன் ஆலாபனத்தை ஆரம்பித்தாள்,

"என் நாநா இவ்வாறு பொறுப்பற்ற நிலையில் நடந்து கொள்வதை அந்தப் பெண்ணும் தெரிந்து கொள்ள வேணும்னு தான் நான் தந்திரமாக ஒரு கடிதம் எழுதினேன், நெருப்பில்லாமல் புகை கிளம்பாதுன்னு சொல்வாங்க, நாங்க சந்தேகப்பட்டதையும் தவறில்லை தான்..." என்றாள், அந்த இளம் பெண்!

அப்படியானால் அந்தக் கடிதம் அது... அதை எழுதியது...? ஆகாயத்தில் பறப்பது போல்

## கிழோனாக வாழேன்

– சோமலிங்கம் –

நடுங்கும் இடும்பை வந்தாலும்
நல்லதைத் துறக்க நான் துணியேன்
அடங்காக் கோபம் சுரந்தாலும்
அல்லது செய்து பழி கொள்ளேன்
தடங்கல் ஏதும் கண்டாலும்
சலிப்புக் கொண்டு சோர்வடையேன்
கிடங்கில் உடம்பு மறையு மட்டும்
கிழோனாக நான் வாழேன்!

★

தேடும் செல்வம் அழிவுற்றால்
தினமும் நொந்து அதற்காக
வாடும் நிலை அடையாமல் இனி
வாழும் வழியை வகுத்திடுவேன்
பேடு மறைந்தால் இன்னுமொரு
பெண்ணைத் தேடி நான் அலையேன்
கூடு மண்ணுள் போகு மட்டும்
கூடாச் செயல்களில் நான் இறங்கேன்.

★

இடுக்கண் வந்த போதினிலும்
இரந்து பிறரை நான் அண்டி
கொடுத்ததைக் கொண்டு என்னுடைய
குடும்பம் நடத்தி நான் வாழேன்
இடத்துக் கேற்ற விதமாக
ஏதோ உள்ளதைச் சரிக்கட்டி
கிடைப் பதைக் கொண்டு மனம் மகிழ்வேன்
கிழோனாக நான் வாழேன்!



...கொண்டிருந்தான்,

"உ போட்டிருக்கேன் வந்து குடிச்சிட்டுப் போம்மா மும்தாஜ்..." வேலைக்காரியாக வந்து ஒரு தாயின் அன்பை வழங்கும் ஹலீமாவின் குரல் அது.

தேநீரைப் பருகிவிட்டு வந்த மும்தாஜ் கட்டிலில் சாய்ந்தவாறு அவள் இதயத்தை பாதித்த அந்த மடலை கையில் எடுத்தாள்,

அவளையறியாமல் கண்கள் நீரை மல்க அவளது எண்ணப் பறவைகள் சிறகடித்துப் பறந்தன, கடந்த காலத்தை நோக்கி,

பரந்து கிடக்கும் காலிமுகத் திடலில் கிலட் ஹவுசுக்கு சற்று தூரத்தில் ஜோடியாக அமர்ந்திருந்தவர்கள் மீது சிற்பக் கலைஞர் யாரேனும் ஒருவரின் பார்வை பதிந்திருக்குமானால் "ஆ...! இதோ இருக்கிறதே நமது அடுத்த சிற்பத்துக்கான ஐடியா!" என்று மகிழ்ந்திருப்பான்,

அத்தனை அழகாக அங்கே உட்கார்ந்திருந்தார்கள், கால்களின் இரு கரண்டைகளின் கீழ்பகுதியும் கைகளின் இரு மணிக்கட்டு முன்பகுதியும், முகமும் தவிர்ந்த ஏனைய பகுதியெல்லாவற்றையும் தன் நீலநிறச் சாரியால் மூடிய நிலையில் அடக்கமே உருவாய் அமர்ந்திருந்தாள் மும்தாஜ்,

வெட்டமான சிவந்த முகமும்...

"இப்போது இருக்கிற காரை விற்று விட்டு வேறு புதுக்கார் வாங்கும்படி எங்க வாப்பாக்கிட்டே சொல்லிட்டிருக்கேன்"

"உங்க வீட்டிலே மாடு, ஆடு ஏதாவது இருக்கிறதா?" என்று திடுமெனக் கேட்டான் லாபீர்,

"இதென்ன புதுக் கேள்வி?"

"இல்லே, இருந்தால் அது கன்று போட்டு விட்டதா என்று உன்னைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் பார், அதுக்காகத் தான் கேட்டேன்..." என்றவனை சுடுசிடுத்தாள்,

விசேஷம் ஏதாவது இருக்கா என்றால் அப்பன் பாட்டி கதையெல்லாம் அளக்கிறயே?"

"இதெல்லாம் விசேஷமில்லாமல் வேறென்னவாம்!"

"என்னோட அகராதியில் விசேஷமென்னு நம்ம ரெண்டு பேரைப் பற்றிய விவகாரம் என்று தான் அர்த்தம்... சரி, உன் வாப்பாக்கிட்டே நம் விஷயத்தை சொன்னியா?"

"இன்னும் கொஞ்ச நாள்...

...கில் கல்வியையும் இடைநிறுத்தி விட்டு வேலை தேடி அலைந்த லாபீரின் அதிர்ஷ்டமோ என்னவோ இத்ரீஸ் ஹாஜியாரின் கடையில் வேலைகிடைத்தது,

"இனிமையாக உரையாடுவதும், தன்னம்பிக்கை மிகுந்த தோற்றத்துடன் காட்சியளிப்பதும் தான் ஓர் இளைஞனுக்கு ஒரு டசின் அறிமுகக் கடிதங்கள் நற்சாட்சிப் பத்திரங்கள் ஆகியவற்றைவிட விலைமதிப்பு மிக்கனவாகும்" என்ற அப்துல் றஹீமின் கூற்று அவனைப் பொறுத்த மட்டில் நூற்றுக்கு நூறு சரியாகத் தான் இருந்தது,

சுறுசுறுப்பானவனாகவும், விஷயத்தை சீக்கிரம் விளங்கிக் கொள்ளக் கூடியவனாகவும், வியாபாரத்தில் நேர்மை மிக்கவனாகவும் திகழ்ந்தான்,

இத்தகைய உயர் பண்புகளை கண்ணுற்ற இத்ரீஸ் ஹாஜியார் தன் கடையையே அவனிடம் ஒப்படைத்து விட்டார்,

கடையில் மட்டுமன்றி அவரது வீட்டிலும் அனைத்து ஜீவன்களின் இதயங்களிலும் நீங்காத இடத்தைப் பெற்றான்,

ஹாஜியாரின் ஒரே மகள் மும்தாஜ், அவன் மீது தன் உயிரையே வைத்திருந்தாள், அவளது இஸ்லாமியப் பற்றும், ஒழுக்கமான நடைமுறையுடன் அடக்கமான தோற்றமும், அவனைக் கவர்ந்தன,

பணக்காரக் குடும்பத்தில் பிறந்தாலும், தற்பெருமை, கர்வம், அகம்பாவம் போன்ற குணங்கள் அவளிடம் மருந்துக்குக் கூட காணமுடியவில்லை,

அவளது கள்ளங் கபடமற்ற இதயத்தில் அவன் ஒருத்தனுக்குத் தான் இடம் ஒதுக்கப்பட்டுள்ளதை அவன் அறிவான்,

அவர்களது காதல் தங்கு தடையின்றி மலர்ந்து மணம் பரப்பிக் கொண்டிருந்த போது தான் இந்தக் கடிதம் தெளிந்த நீரோடையில் ஒரு கல்லைப் போட்டால் எவ்வாறு கலங்கி அலைகளை உருவாக்குமோ அதை விடவும் அவள் இதயத்தை கலக்கியது—

கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் கைகளில் இருந்த கடிதத்தில் விழுந்து எழுத்துக்களை கரைத்தன, திரும்பவும் கடிதத்தை படித்தாள்,

"அன்பின் மச்சான்,

உங்கள் தாய் அதுதான் என் மாமிக்கு அடிக்கடி சுகக்குறைவு ஏற்படுவதால் என்னையும் உங்களையும் மணக்கோலத்தில் பார்க்க ஆசைப்படுகிறா, உங்களுக்காகவே காத்திருக்கும் உங்கள்

அவள் உடலின் ஒவ்வொரு அங்குலத்திலும் ஊசியைச் செருகின மாதிரி ஊமைக்காயமாக வலித்தது, வேதனை செய்தது,

"இத்தனை வருடங்களாக என்னிடம் மனம் விட்டுப் பழகிய போதும் தனக்காக ஒருத்தி காத்திருக்கிறாள் என்று சொல்லவில்லையே அவர்!,

சீ இந்த ஆண் ஜென்மமே இப்படித்தான் சந்தர்ப்பவாதிகள், ஏமாற்றவே பிறந்த இந்த ஆண்களுக்குகென்றே ஏமாறும் பெண்ணைப் படைத்த இறைவன் சோதனையில் தான் எத்தனை துன்பம்..."

சீ இது எவ்வளவு தவறான சிந்தனை என்னை நேசிப்பவர் எனக்குத் துரோகம் செய்ய மாட்டார்... ஆனாலும் அவர்...?, ஏய் பாழாய்ப்போன மனமே உனக்கு ஏன் தான் இப்படி குழப்பமான சிந்தனைகள்! கொஞ்சம் நிம்மதியாய் இருக்க விட மாட்டாயா! ...ப இறைவனிடம் ஒப்படைத்து விட்டு வடு பஸ்!"

இப்படியாக ஓராயிரம் எண்ணப் போராட்டங்கள் அவளுள் எழுந்தன, ஒரு பெண்ணின் வயிற்றில் எரிகின்ற "தீ"யில் இன்னொரு பெண் குளிர்காய்வதா!

தாங்க முடியாத துயரத்தின் இறுதியில் தான் மனது உள்ளத்தில் அசைக்க முடியாத உறுதி தோன்றுகிறது,

எதிர்பாராத ஏமாற்றத்தால் நெஞ்சில் வைரம் பாய்கிறது, கடுமையான சோதனைகளால் தான் மனிதனுக்கு விவேகம் பிறக்கிறது, பொறுமை புடம்போட்ட பொன்போல் சுடர் விட்டுப் பிரகாசிக்கிறது,

தன் புத்தக அலுமாரியைத் திறந்து எதோ தேடிக்கொண்டிருந்தாள் மும்தாஜ், கைபட்டு அருகில் இருந்த ஒரு புத்தகம் கீழே விழுந்தது,

எடுக்கக் குனிந்தவளின் கவனத்தைக் கவர்ந்தது விரிந்த பக்கங்களில் மலர்ந்த பூ! அல்ல பூப்போன்ற வாசகங்கள்,

"தியாகத்தின் மாதத்திலே தியாகம் பற்றி நினைப்பது பொருத்தமுடைய ஒன்றே ஆகும், இத் தியாகத் திருநாளில் நல்லோர் தம் உள்ளமெல்லாம் இறை தூதர் இப்ராஹீம் (அலை) அவர்களை - அவர்களின் வாழ்வின் பல நிலைகளை - வியந்து நயந்து போற்றும் கொழுந்து விட்டும் உணர்ந்து செயலாற்றுவோமாக! தியாக உணர்வுடனே பெரும்பொருளை நாடுவோமாக!"

மும்தாஜின் இதயக்கதவுகள் எண்ணையில்லாமல் கிரீச்சிட்டன நாள் ஒன்றும் நகர்ந்தது,

கண்களை பாதி மூடிய நிலையில் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்த மும்தாஜின் செவிகள் காலடிச் சத்தம் கேட்டதும் மோனம் கலைந்தது,

திடுக்கிட்டு கண்திறந்தவள் எதிரில் லாபீர் நிற்பதைக் கண்டதும் பதறிப் போய் விட்டாள்,

"அடடே நீங்களா?" என்றவள், வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்திருந்தாள், "உட்காருங்க... தாகத்துக்கு ஏதாவது குடிக்கிறீங்களா...? என்ன கொண்டு வரட்டும்?" என்று உபசாரமாகக் கேட்டாள்,

"ஒன்றும் வேண்டாம் மும்தாஜ்" என்று அவன் சொல்லியும் கூட, உள்ளே ஓடிப்போய் ஒரு நொடியில் சர்பத் தயாரித்து எடுத்து வந்தாள்,

அவன் ஆவலுடன் பானத்தைப் பருகுவதை மட்ட நின்று பார்த்தபடியே இருந்தாள் மும்தாஜ், கசங்கிய ஆடைகள், கலைந்த கேசம், களையிழந்த முகம், நெற்றியிலே வியர்வை முத்துக்கள்... ஏனோ மும்தாஜின் மனத்தில் அப்போது ஒரு வசித்திரமான கற்பனைதான் தோன்றியது;

குடும்பத் தலைவன் களைத்துப் போய் அலுவலகத்திலிருந்து வீடு திரும்பியிருக்கிறான், அவன் மனைவி அவனுக்கு சிரமபரிகாரம் செய்து கொண்டிருக்கிறாள்,

லாபீரின் நெற்றியில் அரும்பியிருக்கும் வியர்வையைத் துடைத்து விட வேண்டும் என்று உள்ளம் குறுகுறுத்தது மும்தாஜிக்கு... ஆனால், மனம் ஆசைப்படுவது எல்லாவற்றையும் நம்மால செய்து விட முடிகிறதா?

எனவே மின்விசிறியைச் சுழல விடுவதுதான் அப்போது அவளுக்குச் சாத்தியமாக இருந்தது, அவள் தான் பேச்சை ஆரம்பித்தாள்,

"நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை இல்லையா?"

"என்னை வெளியே அழைச்சிட்டுப் போங்க அப்படீன்னு சொல்லாமச் சொல்றே! அப்படித் தியது,

"ஏன் மௌனமாயிட்டே?, நாளைக்கு வேறு எங்கேயும் போக மாட்டேன், உன்னோட அதுவும் நீ நினைக்கிற இடத்துக்கு வந்திடுறேன் போதுமா?

அவளது முகத்தில் திருப்தி தெரிந்தது, அது அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது,

பயணத்துக்கான ஆயத்தங்களைப் பண்ண வேண்டாமா?" என்றவள் எழுந்து உள்ளே சென்றாள்,

தன் அன்பு மகனை கண்ட தாயின் உள்ளம் கசிந்தது, ஆனந்தக் கண்ணீர் வடித்தது, மகனை அணைத்து நெற்றியிலே முத்தமிட்டாள் அன்னை,

கூட இருந்த மற்றப் பெண் பாவாடை தாவணியில் எடுப்பான உயரம், சிவந்த நிறம், பேரழகி இல்லையென்றாலும் சுமாரான அழகு, அவள் தான் லாபீரின் மைனியாக இருக்கும் என மனதினுள் ஒரு அசாதாரண கற்பனை, விழுந்தடித்துக் கொண்டு உபசரித்தாள்.

தன் எதிர்காலக் கணவனோடு முன்பின் அறிமுகமில்லாத அதுவும் ஒரு வயது வந்த பெண் தைரியத்துடன் வீட்டுக்கு வந்தால் அதனை எந்தப் பெண்ணால் தான் தாங்கிக் கொள்ள முடியும்?

இதுதான் பொது நியதி, அதற்கும் முற்றும் மாற்றமாக அவள் நடந்து கொண்டாள், அவளது முகத்தில் எவ்வித சலனமும்



**சிறுகதை**

இன்றி அன்போடு ஆதரித்தாள், சாப்பிட உட்கார்ந்ததும் மரியாதையாக இருவருக்கும் உணவைப் பரிமாறினாள்,

லாபீர் உண்மையிலே ஓர் அதிர்ஷ்டசாலி தான் என்று மனதினுள் சொல்லிக் கொண்டாள் மும்தாஜ், லாபீரின் தாய் தான் ஏதோ பேச ஆரம்பித்தாள்,

"என் குழந்தைகள் படிக்கிற வயசிலே அவங்கட வாப்பா மவுத்தாயிட்டாங்க அத்தோடு குடும்ப பாரம் என் மகனோட தலையில் தான் சுமத்தப்பட்டது.

நாங்க ஏழைங்க தான்மா, ஆனா மானம் மருவாதியா வாழ்ற ...தெரிந்து கொள்ள வேணும்னு தான் நான் தந்திரமாக ஒரு கடிதம் எழுதினேன், நெருப்பில்லாமல் புகை கிளம்பாதுன்னு சொல்வாங்க, நாங்க சந்தேகப்பட்டதுலயும் தவறில்லை தான்..." என்றாள், அந்த இளம் பெண்!

அப்படியானால் அந்தக் கடிதம் அது... அதை எழுதியது...?! ஆகாயத்தில் பறப்பது போல் இருந்தது மும்தாஜிக்கு,

"இப்ராஹீம் (அலை) அவர்கள் தன் அன்பு மகனை அல்லாஹ்வுக்காகப் பலியிட நிர்ப்பந்திக்கப்பட்ட போது... அவர்களை அறுப்பதற்காக எடுத்த கூரிய கத்தியை இஸ்மாயில் (அலை) அவர்களின் கழுத்திலே வைக்க அக்கத்தியை மொட்டையாக்கி அவர்களது மகனைக் காப்பாற்றிய அல்லாஹ்வின் ஆற்றல் தான் எத்தனை மகத்தானது! அல்லாஹ்வின் சோதனைகளில் தான் எத்தனை ரகம்?," அவளது சிந்தனை சுழன்றது;

இத்தனை நேரமும் அமைதியாக வீற்றிருந்த மும்தாஜ், பேச ஆரம்பித்தாள், மிகவும் அடக்கமாக,

"தனக்கு வயது வந்த தங்கை ஒருத்தி வீட்டில இருந்தும் அண்ணா பொறுப்பில்லாமல் நடந்து கொண்டதற்காக நான் ரொம்பவும் கவலைப்படுகிறேன்.

இனியும் தங்கையையும் தாயையும் பிரிந்து வாழமாட்டார், கூடவே இருவரையும் அழைத்துப் போகத்தான் வந்திருக்கிறார், லாபீரோட முதலாளி இவ்வருடமும் இரண்டாவது முறையா ஹஜ்ஜி செய்வதற்கு ஆசைப்பட்டார்,

மக்காவுக்குப் போகாமல் ஹஜ் செய்த நன்மையைப் பெறும் ஒரு நல்ல காரியத்துக்கு உதவும் பாக்கியத்தை அல்லாஹ் காட்டிவிட்டதாக உணர்கிறேன,

நீங்கள் இருவரும் புறப்பட்டு எங்களோடு வரவேண்டும், புனித மிகு ஹஜ்ஜுப் பெருநாள் மாதத்திலே உங்க மகளுக்கு ஒரு நல்ல வரனைத் தேடி திருமணத்தை முடிப்பது லாபீரோட முதலாளியின் பொறுப்பு..." மிகவும் நிதானமாகப் பேசினாள்,

அவளது அந்த வார்த்தைகள் பெற்ற தாயின் செவிகளில் தேன்மழை பொழிந்தன, அவளது கண்கள் பனித்தன,

"துஆவு"க்காக வானத்தை நோக்கி எழுந்தன விதவைத் தாயின் கரங்கள்,

நல்லவர்கள் இன்னும் வாழ்கிறார்கள், உலகில் அன்பு அழிந்து விடவில்லை,

(மு)

# ஞானம் வரும்

— ஏ. எம். எம். அலி —

"நாற்பது வயது, ஆகிறது! — பெரும்
ஞானம் உனக்கு வருகிறது!", எனக்
கேட்பது சரியா எல்லார்க்கும் — கல்வி
கேள்வி மிகுந்திடின் ஞானம்வரும்!

★

ஞானம் என்பது மதியுடைமை — அதை
நாளும் அறிந்து செய்கடமை!
வீணும் பிறரின் குறைகூறல் — அதை
விட்டு நடந்திடு ஞானம்வரும்!

★

"கோணல்" பார்த்துக் களிக்கிறது! — மனம்
கோணி ஏன்தான் நடக்கிறது?
வீணில் வார்த்தை பேசிடுதல் — இனி
வேண்டாம் திருந்திடு ஞானம் வரும்!

★

ஏய்க்கும் மனமே இருக்கிறது! — அந்த
இறைவனைக் கூட ஏய்க்கிறது!
"காய்க்கும் கனிக்கும்" வேற்றுமை காண்! — அதை
காண முனைந்திடு ஞானம்வரும்!

★

இறைவன் அளித்த அறிவிருக்கு
எனினும் நெஞ்சில் இருளிருக்கு; நீ!
குறைகள் குற்றங் கூறுகிற — மனக்
கொள்கை விட்டிடு ஞானம் வரும்!

★

போட்டி பொறாமை எழுகிறது — மனம்
புண்பட் டின்று அழுகிறது
எட்டிற் படித்ததை எடுத்தெறிந்து — நீ!
நடந்தால் எப்படி ஞானம்வரும்!

# சிந்தாமணி கேள்வி ? பதில்

திரிஞானி

செல்வி நஸ்லியா ஸவ்பியான்
கடுகண்ணவை—

கே— பார்க்கக் கூடாதது எது? பார்க்கக் கூடியது எது?

ப— பார்க்கக் கூடியன காதலியின் கண்கள் —பார்க்கக் கூடாதது அந்தக் கண்களில் கண்ணீர்!

✶

செல்வி மஞ்சுளா ஜெயராம்
பொகவந்தலாவ—

கே— நடிகைகள் பகிரங்கமாகத் திருமணம் செய்து கொள்வதில்லையே ஏன்?

ப— "இமேஜ்" சரிந்து விடும் என்பதால்! சினிமாவில் "மிஸ்"ஸுக்குத்தான் கிராக்கி!

✶

செல்விகள் மகேஸ்வரி
மயில்வாகனம்,
கௌரி மயில்வாகனம்,
அலவத்துகொட—

கே— இன்றைய இருபதாம் நூற்றாண்டில் சினிமா என்று ஒன்றில்லாவிட்டால் எப்படியிருக்கும்?

ப— விரைவில் இல்லாமல் தானே போகப் போகிறது. டிவி முற்றாக நுழைந்து விட்டால்!

✶

செல்வி ஆர் என் ஈஸ்வரி
கருங்காலிச்சோலை—

கே— தாங்கள் யாருடைய பாடல்களை ரசித்துக் கேட்பீர்கள்?

ப— அந்தக் காலத்தில் கண்ணதாசன்! இந்தக் காலத்தில் வைரமுத்து!

✶

எஸ் சுந்தரராஜ்
புளத்சிங்கள—

கே— உலகம் முழுவதையும் ஆளும் பொறுப்பு உங்களிடம் ஒப்படைக்கப்பட்டால் முதலில் என்ன செய்வீர்கள்?

ப— முதலில் ஓர் இடத்தில் உட்கார்ந்து என்னை நான் ஆளுவதற்குத் தியானம் செய்வேன்!

✶

எம் ஏ அனஸ்
பொலன்னறுவை—

கே— ஒரு சிலர் சினிமாவை ஏன் விரும்புவதில்லை?

ப— ஒன்றை விரும்புவதும்





எம் ஜி ஆர்

மதார்
குருநாகல்—

கே— நாளைக்கு உலகம் அழியப் போகிறது என்று இன்றே தெரிந்தால் என்ன செய்வீர்கள்?

ப— ஏன் இவ்வளவு அவசரம்! நாளை மறுநாள் அழியக் கூடாதா என்று கவலைப்படுவேன்!

★

இ அலாவுதீன்
பொலன்னறுவை—

கே— மேல்சபை ஒழிப்புக்கும் வெண்ணிற ஆடை நிர்மலாவுக்கும் என்ன சம்பந்தம்?

ப— நிலாவான அந்த வெள்ளை ஆடை – மேல் சபையில் உட்காரக் கூடாது என்று ஆனதினால்தானே மேல் சபையைக் கலைத்தார் புரட்சியாளர்! இது தான் சம்பந்தம்!

✶

செல்வன் க ரெட்ணையா
மட்டக்களப்பு—

கே— காதலும் பண்ணாமல் ஆசையும் கொள்ளாமல் வாழ ஏதும் வழி கூறுங்களேன்?

ப— வழி எனக்குத் தெரியவில்லை! ஏனென்றால் அப்படி வாழ மரக்கட்டை ஒன்றினால் தான் முடியும்!

✶

ஆயிஷா சுபைர்
நஸீரா சுபைர்

செல்வி எஸ் சந்திரகலா
கண்டி—

கே— எனக்கு எதற்கெடுத்தாலும் அதிக கோபம் வருகின்றது— அதற்கு என்ன செய்யலாம்?

ப— ஒன்றும் செய்ய முடியாது - உம்மைப் போன்ற ஒரு "கரெக்டர்" துர்வாசர் என்ற பெயரில் முன்பே இருந்திருக்கிறாரே!

★

செல்வி க சசிகலா
பொகவந்தலாவ—

கே— ஓவியத்தில் சிறந்த ஓவியம் எது? காப்பியத்தில் சிறந்த காப்பியம் எது?

ப— ஓவியத்திலே சிறந்த ஓவியம் ரவிவர்மா தீட்டிய மார்க்கண்டேயர் ஓவியம்! காப்பியத்திலே சிறந்த காப்பியம் கம்பன் தீட்டிய ராமாயண காப்பியம்!

★

ஜே அப்துல் மஜீத்
அம்பகஸ்தன்னே—

கே— உங்களுக்கு நடிப்புத் துறையில் ஆர்வம் இல்லையா?

ப— மிக மிக உண்டு! நான் முதலில் நாடக ஆசிரியனாகத் தானே எழுத்துத்துறையில் பிரவேசித்தேன்!

★

செல்வி கிறேஸ் சின்னையா
புளத்சிங்கள—

கே— உலகத்தின் தொடக்கம் எங்கே? அதன் முடிவு எங்கே என்று கூறுவீர்களா?

ப— உலகத்தின் தொடக்கம் தாயின் வயிற்றிலே! அதன் முடிவு மயானத்தின் மண்ணிலே!

★





# மலையக மாருதம்

தயாரிப்பு: — கே. தமிழ்மாறன்

# பாரம்பரிய கலைகள்

## மலையகத்தில் மங்கும் நிலை

— கே. எம். மகாலிங்கம் —

மலையகத்தில் கலைத்துறை இன்று ஏதோ ஒரு இனம் காண முடியாத தாக்கத்தினால் முற்று முழுதாக மறைந்து கொண்டு வருகின்றது.

மலையக கலாசாரம் சுமார் பத்து வருடங்களுக்கு முன் நம் நாட்டில் தனித்துவமான இடத்தை வகித்ததை மலையக கலைத் தொண்டாற்றிய மூத்த கலைஞர்கள் அறிவர்.

இந்தியாவில் இருந்து தென்னகத்துக் மக்கள் இலங்கையின் மலையகப் பகுதிகளில் வந்து குடியேறிய காலத்தில் தங்கள் உழைப்பினை மட்டுமே கொண்டு வரவில்லை.

தமிழகத்தில் பாரம்பரிய கலைகளாகக் காத்து வளர்த்து வந்தவைகளையும் தங்களோடு கொண்டு வந்தனர் என்றே கூற வேண்டும்.

அக்காலத்தில் தொழிலாளர்களை அழைத்து வரும் கங்காணிகள் கலைஞர்களாயிருந்து வாத்தியார் என்றழைக்கப்படும் ஒரு சிலரையும் அழைத்து வந்தனர்—

அவர்களின் வசிப்பிட வசதிகளையும் அவர்களுக்கு ஊதியத்தையும் கங்காணிகளே ஏற்படுத்தி கௌரவமாக நடத்தினர்.

இவ்வாறு வந்த வாத்தியார்கள் தங்களுக்கு நன்கு பயிற்சியான புராதன நாடகங்கள், கூத்துக்கள் இவற்றை பண்டிகை காலங்களில் தொடர்ச்சியாகவும் பயிற்றுவித்து அரங்கேற்றியுள்ளனர்.

குறிப்பாக அருச்சுனன் தபசு, பொன்னர் சங்கர், கோவலன் சரித்திரம், கந்தபுராணம், மகாபாரதம் போன்றவற்றை மேடைக்கூத்தாகவும் காமன் கூத்தை வீதி நாட்டியமாகவும் நடத்தியுள்ளனர்.

இம்மாதிரியான நடைபெறும்

திருத்த நாடகங்களைத் தயாரித்து அல்லது தமிழக சீர்திருத்த எழுத்தாளர்களின் நாடகங்களை நெறிப்படுத்தி அரங்கேற்ற ஆரம்பித்தனர்.

அத்தோடு மன்றங்கள் மூலம் பொதுப் பணிகளையும் செய்து வந்தனர்.

மணவீடுகளில் இசை நிகழ்ச்சிகள் நடத்துவது, வருடா வருடம் போட்டி கலை நிகழ்ச்சிகளை நடத்துவது, நிதிக்காக நாடகம் நடத்துவது அதன் வருவாயை பொதுக்களை எழுதி வெளியிட்டனர்.

சமூக சேவை அமைப்புக்கள், தொழிற் சங்கங்கள் முறையாக கிரமமாக கலாசாரப் போட்டிகளை நடத்தி ஊக்குவித்தன. தற்போது இந்நிலை முற்றுமுழுதாக மாற்றமடைந்துள்ளது.

இளைஞர்கள் மத்தியில் கலை சம்பந்தமான உணர்வே அற்றுப் போய் விட்டது. இதற்கு இன்று எம் மத்தியில் அறிமுகப்படுத்தி பிரபல்யமடைந்துள்ள விடியோ,

காலை நேரம் உழைப்பு பகல் நேரம் விடியோ படம் பார்ப்பு. இவையே பெரும்பான்மை இளைஞர்களின் இன்றைய பணியாகி விட்டது.

முன்பெல்லாம் பொங்கல் திருவிழாக் காலங்களில் நடத்துவதற்காக கலை நிகழ்ச்சிகளைப் பயின்று (போட்டி முறை மன்றங்கள் அமைத்து) அரங்கேற்றங்களை நடத்திய தோட்டங்களில் இன்று விடியோ மூலம் படம் ஒன்று திரையிட மட்டுமே முயற்சிக்கின்றனர்.

சிலர் விடியோவும் ஒரு கலை எனலாம். ஆனால் அந்த விடியோவில் கூட நமது நாட்டுக்கு, சமூக அமைப்புக்கு ஏற்றவாறு படங்கள் இருக்கின்றனவா?

தேசிய தொலைக்காட்சி சேவையில் கூட நம்நாட்டு கலைஞர்களின் டெலி நாடகங்கள் தமிழில் மிக மிகக் குறைவு.

மனித மனம் இன்புற்றிருக்கச் செய்யல்; இன்பம் ஈடுபாடு தேவை என பொழுது போக்கிற்காக கலையை பயன்படுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கம் இன்று எமது கலைக்கு ஏற்பட்டுள்ளது.

நமக்குள்ளாக வீரம், விவேகம், நம்பிக்கை, தெம்பு ஆகியவற்றை விரைந்து தரும் ஊசி மருந்து போல் நமது கலைகள் இயங்க வேண்டும்.

அழிந்து வரும் மலையக கலைகள் வளர்ச்சியுற புத்துயிர்பெற மலையக கலாபிமானிகளும் பத்திரிகைகளும் ஆக்கபூர்வமான வழிகளை அறிந்து செயல்படாது போனால் மலையக மக்களின் கலாசாரம் என்று சொல்லிக் கொள்ளக் கூட எதுவுமில்லாது

## குறுக்குப் பாதை

— ராஜ்பாரதி —

மூங்கிலிலே வேய்ந்தெடுத்த கூடை தன்னை
முதுகினிலே மூச்சிரைக்க தினம் சுமந்து
முதுமை நிலை அடையும் வரை மலைகளிலேறி
மூதாதை வளர்த்த இந்த பொன் மலைநாடு!

✶

குறுக்குப் பாதை ஏத்தத்திலே கூட்டம் கூட்டமாக
குமரிகளோ ஏறுகின்றார் கும்மாளங்கள் போட்டு!
குன்றுகளில் வரிசையிலே நின்று தினம் காலை
கூவிப் பொளி போட்டவுடன் கூடைகளும்
நிரம்பும்!

✶

பத்துமணி ஆனவுடன் பச்சிளந் தாய் மார்கள்
பால் பருக்க பாலகரை நோக்கி மலை வந்து
போத்தலிலே சாயத்துடன் புதுமலைக்கு செல்லும் —
இந்தப்
பொதுச்சேவை தினந் தோறும் பொதுவாக நிகழும்!

✶

பகலுணவு அருந்திவிட்டு மலைகளுக்குச் சென்று
பக்குவமாய் தளிர் கொய்து கூடைகளை நிரப்பி
வரக்குவரக போட்டியுடன் மலைவிட்டு இறங்கி

[illegible]

★

எம் ஏ அனஸ்
பொலன்னறுவை-
கே- ஒரு சிலர் சினிமாவை ஏன் விரும்புவதில்லை?
ப- ஒன்றை விரும்புவதும்


வெண்ணிற ஆடை நிர்மலா

வெறுப்பதும் அவரவர் ரசனையை பொறுத்தது! சினிமாவை ஒதுக்குபவர் நாடகப் பிரியராக இருக்கலாம் அல்லவா — என்னைப் போல!

★

செல்வி பர்ஸானா பரீத்
செல்வி வஸ்பியா பரீத்
மள்வானை.
கே- இன்றைய சிங்களத் திரையுலகில் உங்களுக்குப் பிடித்தமான நடிகை யார்?
ப- சுவர்ண மல்லவராச்சி — ஏனென்றால் அவர் ஒருவரின் இடைதானே பிடியில் அடங்குவதாய் இருக்கிறது!

★

ஸுஹ்ரியா பௌஸி
பேருவளை-
கே- இப்போது பாடசாலைகளில் மதிய போசனம் வழங்குவது நீடிக்குமா?
ப- பாடசாலையே நீடிக்கவில்லையே!

★

எச் டீன்
குருநாகல்-
கே- உலகிலே ஆடம்பரமானது எது?
ப- நடிகையின் நாய்!

★

செல்வீ எஸ் ரஷீட்
போகஹகும்புரை-
கே- பெண்களுக்குத் தங்க ஆபரணங்கள் மீதே அதிக மோகம் - அதே போல் ஆண்களுக்கு எதில் மோகம்?
ப- ஆண்களுக்கு "கரன்ஸி நோட்டு"கள் மீது அதிக மோகம்!

★

எச் எம் றிபான்
காத்தான்குடி - 02
கே- உங்களை ஒரு பெண் காதலித்துக் கல்யாணம் முடிக்க மறுத்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?
ப- சந்தோஷப்படுவேன்! ஏனென்றால் நான் அவளைக் காதலித்ததில்லையே!

★

பாத்திமுத்து சொஹ்ரா

கே- காதலும் [illegible] ஆசையும் கொள்ளாமல் வாழ ஏதும் வழி கூறுங்களேன்?
ப- வழி எனக்குத் தெரியவில்லை! ஏனென்றால் அப்படி வாழ மரக்கட்டை ஒன்றினால் தான் முடியும்!

★

ஆயிஷா சுபைர்
நஸீரா சுபைர்
கழுகமுவ-
கே- சமீபத்தில் தங்கள் மனதை நெருடிய சம்பவம் எது?
ப- மலையகத்தில் நிகழ்ந்த மண் சரிவு!

★

செல்விகள் சுரனு - கமரூன்
சொய்சாபுர-
கே- ஒரு மனிதன் உயிருடன் இருக்கும் போது கிடைக்காத மரியாதை அவன் இறந்த பிறகு கிடைப்பதேன்?
ப- இருக்கும் போது மரியாதை கொடுத்தால் அவன் பெரிய மனிதனாகி விடுவானே என்ற பொறாமைதான் — அவன் சாகும் வரை காத்திருந்த "ஹோ" என்று ஓலமிடுவதாகும்!

★

கி வசந்தன்,
பலாங்கொடை-
கே- பெண்கள் ஆண்களையும் ஆண்கள் பெண்களையும் கூடுதலாகப் பார்ப்பதனால்தான் முகத்


சுவர்ண மல்லவராச்சி

தில் பருக்கள் வருவதாகக் கூறுகிறார்களே - இது உண்மையா?
ப- அது தவறு! கூடுதலாகக் கொழுப்புச் சத்தையும் சீனியையும் உண்பதனால்தான் பருக்கள் வருகின்றன!

★

ஈ எல் சாமுவேல்
கண்டி-
கே- எம் ஜி ஆர் மீண்டும் தமிழ்நாட்டை வந்து பார்த்தால் என்ன நினைப்பார்?
ப- இன்னும் தனக்கு ஒரு மணி மண்டபம் கூடக் கட்டாமல் தன்னை இவ்வளவு சீக்கிரம் மறந்து விட்டனரே தன் இரத்தத்தின் இரத்தங்கள் என்று கவலைப்படுவார்!

★


கவிஞர் வைரமுத்து

செல்வன் நைரூஸ்
கல்லொழுவை-
கே- கணவனின் உத்தரவில்லாமல் வெளியே செல்லும் மனைவியின் நிலைமை என்ன?
ப- அவசரகாலச் சட்டமே மதிப்பற்று இருக்கும் காலத்தில் கணவனின் உத்தரவு என்ன பிரமாதம்!

★

ஏ எஸ் அமானுல்லா
தும்மளசூரிய-
கே- நீங்கள் மறு வாழ்வுக்காகவேண்டி என்ன புண்ணியங்கள் செய்திருக்கிறீர்கள்?
ப- நான் புகைபிடிப்பதில்லையே அது ஒன்றே போதாதா?

★

அமீனா றஸ்ஸாக்
தல்கஸ்பிட்டிய-
கே- நீங்கள் எப்போதாவது மோதிரக் கையால் குட்டுப்பட்டதுண்டா?
ப- வளையல் கையால் கூட குட்டுப்பட்டிருக்கிறேனே!

★

ரோசினி — சரஸ்வதி
இறக்குவானை-
கே- ஆண்களிடம் வருமானத்தைக் கேட்காதே- பெண்களிடம் வயதைக் கேட்காதே என்கிறார்களே- ஆனால் மனைவி கணவனுடைய வருமானத்தை அறியலாமா?
ப- அறிவதுதான் நல்லது! இல்லாவிட்டால் வீட்டை ஐவுளிக் கடையாக்கி விடுவாளே!

★

செல்வன் மெய்யன் நடராஜா
பூண்டுலோயா-
கே- நீர் உமது மனையாளுடன் சென்று கொண்டிருக்கும்போது ஒரு அழகி உம்மை இடைமறித்து "என்னை நீங்கள் இப்படி ஏமாற்றுவீர்கள் என்று நினைக்கல- எனக்கு ஒரு வழி சொல்லிட்டுப் போங்க" என்று கலாட்டா பண்ணினால் என்ன செய்வீர்கள்?
ப- "தங்கையே நீங்கள் உடனடியாக ஒரு கண் டாக்டரைப் பார்ப்பது நல்லது! பார்வையில் ஏதோ கோளாறு இருக்கிறது" என்று சொல்லி விட்டுக் கொஞ்சம் பார்த்துப் போங்கள் பின்னால் என் மனைவி வருகிறாள் மோதி விடாதீர்கள் என்று எச்சரிப்பேன்!

★

வித்து அரங்கேற்றியுள்ளனர்.

குறிப்பாக அருச்சுனன் தபசு, பொன்னர் சங்கர், கோவலன் சரித்திரம், கந்தபுராணம், மகாபாரதம் போன்றவற்றை மேடைக்கூத்தாகவும் காமன் கூத்தை வீதி நாட்டியமாகவும் நடத்தியுள்ளனர்.

இம்மாதிரியான நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு மக்கள் பெருந்திரளாக பக்கத்து தோட்டங்களில் இருந்தும் வந்து கூடுவர்.

அதேவேளை வருடா வருடம் வரும் விழாக் காலங்களிலும் திருவிழா நேரத்திலும் ஆடற் கலைஞர்களாய் இருந்தவர்கள் பொய்க்கால் குதிரை ஆட்டம், கரகம், காவடி கோலாட்டம் கும்மி இவற்றைப் பயிற்றுவித்த ஆடிக் காட்டுவர். உருமி, மேளம், தப்பு, உடுக்கை, நாதஸ்வரம் போன்றவை இசைக்கும் இசைக் கலைஞர்களும் இசைத்து வந்தனர்.

இவை எல்லாம் காலப் போக்கில் தொழில் முறைகளாயின. அதன் பின் 1955 க்குப் பின் மலையகத்தின் சில பகுத்தறிவுவாதிகளின் முயற்சியால் நவீன முறையில் சமூகப் பிரச்சினைகளையும் அரசியல், மூட நம்பிக்கை போன்ற கருத்துக்களை உள்ளடக்கிய சீர்

பத்துமணி ஆனவுடன் பச்சிளந் தாய்மார்கள்
பால் பருக்க பாலகரை நோக்கி மனை வந்து
போத்தலிலே சாயத்துடன் புதுமலைக்கு செல்லும் —
இந்தப்
பொதுச்சேவை தினந் தோறும் பொதுவாக நிகழும்!

★

பகலுணவு அருந்திவிட்டு மலைகளுக்குச் சென்று
பக்குவமாய் தளிர் கொய்து கூடைகளை நிரப்பி
வாக்குவாத போட்டியுடன் மலைவிட்டு இறங்கி
வந்திடுவர் பெயர் போட மடுவங்களை நோக்கி!

விடயங்களுக்கு அளிப்பதும் பணியாக இருந்தது.

அதேவேளை திரைப்படங்களில் ஈழத்து நடிகர்களாய் இன்று பிரபலமடைந்தவர்கள் கூட மலையக மேடை நாடகங்களில் நடித்து அனுபவமடைந்தவர்களில் சிலர் என்பதையும் குறிப்பிட வேண்டியுள்ளது.

சிலர் திரைப்படங்களில் மலையக நாட்டியங்களில் கூட இடம் பெற்றுள்ளனர்.

இம்மாதிரியான கலை வளர்ச்சிக்கு இளம் கலைஞர், கவிஞர், நாடகாசிரியர் இவர்களை ஊக்குவிக்க உற்சாகப்படுத்த சில கலை சம்பந்தமான பகுதிகளை ஏற்படுத்தி பத்திரிகைகள் மூலம் உதவினர். நாடகப் பாடல் நூல் தொலைக்காட்சியும் ஒரு காரணியாகியுள்ளது.

உதாரணத்துக்கு முன்பெல்லாம் மலையக நகரங்களில் இரண்டொரு பட மாளிகைகள் மட்டுமே இருந்தன- ஒரு படத்தை வெளியிட்டால் (திரையிட்டால்) ஒரு மாதம் கூட அப்படம் ஓடும்-

இப்படத்தை ஒருவர் ஒரு முறை மட்டுமே பார்க்கும் நிலை இருந்தது. தற்போது மலையக நகரங்களில் தினசரி புதுப்புது படங்கள் பல விடியோ மூலம் காட்டப்படுகின்றன.

மலையக நகரங்களில் பிற்பகல் ஒரு மணியாகி விட்டால் இம்மாதிரியான விடியோ கிளப்புகளில் தான் இளைஞர்கள் கூடுகின்றனர்.

அழிந்து வரும் மலையக கலைகள் வளர்ச்சியுற புத்துயிர்பெற மலையக கலாபிமானிகளும் பத்திரிகைகளும் ஆக்கபூர்வமான வழிகளை அறிந்து செயல்படாது போனால் மலையக மக்களின் கலாசாரம் என்று சொல்லிக் கொள்ளக் கூட எதுவுமில்லாது அற்றுப்போகும் நிலை ஏற்படலாம்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் உடனடி நடவடிக்கையில் ஈடுபட வேண்டியது தலையாய கடமையாயுள்ளது.

மலையக கலைத்துறையில் ஒரு திருப்பம் ஏற்படுத்த வேண்டும். கடந்த காலத்தில் ஏற்பட்ட சீரற்ற நிலையினால் மலையகத்தில் இன்று சிறந்த கலைஞர்களும் எழுத்தாளர்களும் சிதைவுபட்டு இனம் காண முடியாது உள்ளனர்.

இவர்களை ஒன்றிணைத்து ஆக்கபூர்வ கலைவளர்ச்சியில் முன்னேற்றம் காண வேண்டும் என்ற எண்ணத்தில் மலையக கலைஞர்கள் ஒன்றியம் அமைப்பதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.

(தூ-ங)

# உலகத் தேயிலை நிபுணத்துவத்திற்கு பட்டேவியா ஒரு முன்னோடி

ஜாவா, சுமாத்ரா ஆகிய தீவுகள் டச்சுக்காரர்களின் காலனித்துவ ஆட்சியில் நீண்ட காலம் இருந்தன, அவர்களின் கவனம் மிகவும் கூடுதலான முறையில் ஜாவாவின் மீதே இருந்தது.

குறிப்பாக டச்சுக்காரர்களின் நுணுக்கமான அறிவு, தெற்காசிய நாடுகளில் போதுமான அழகிய கூவடுகளையும், அபிவிருத்திப் பாரம்பரிய நிலைகளையும் வைத்துச் சென்றுள்ளது.

அந்த வம்சத்தைச் சேர்ந்த ஒரு விஞ்ஞானி சி பேனட் என்பவர், அவருடைய நுணுக்கமான அறிவுத் திறமையினால் தேயிலை உலகுக்குச் செழுமையான ஆலோசனைகள் கிடைத்துள்ளன,

1880 க்கும் 1930க்கும் இடைப்பட்ட காலத்தில் தேயிலை பற்றிய ஆய்வு நெறிகளை ஓய்வின்றிக் கடைப் பிடித்த மாபெரும் அறிஞர், தமது தாய் மொழி மூலம் தேயிலை சம்பந்தப்பட்ட நூல்களை எழுதியுள்ளார், அவர் எழுதிய நூல்கள் மொத்தம் ஐம்பது ஆகும்.

உலகில் ஒரு விடயம் பற்றி இத்தனை கூடுதலான நூல்களை எழுதியவர்களில் திரு பேனு அவர்கள் முன்னணி வகிக்கிறார். இவர் தன் வா[illegible] முக்கால் வாசியை தேயிலைச்செடிகளுக்காக அர்ப்பணித்தவராவார்,

பட்டேவியாவும் ஒரு மலையகமே, சென்ற நூற்றாண்டு முழுவதும் தேயிலைப் பயிர்ச்செய்கை ஜாவாவில் இடம்பெற்றுள்ளது, இலங்கையின் மலையகத்தில் எப்படி கோப்பியும், பிறகு சிங்கோனாவும், இறுதியில் தேயிலையும் இடம் பெற்றதோ அதேபோல ஜாவாவிலும் இம்மூன்று சகாப்தங்களும் இருந்தன,

பட்டேவியா தேயிலை ஆய்வு நிலையம் உலகத் தேயிலை நிபுணத்துவத்துக்கு ஒரு முன்னோடி என்று கூறலாம்.

அதற்குக் காரணமான ஒரே மனிதர் திரு பேனட் அவர்களே, அவருடைய நூல்கள் நாற்பதுக்கும் மேற்பட்டவை இலங்கைத் தேயிலை ஆராய்ச்சி நிலையத்துக்கு 1928 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டன,

அவருடைய தத்துவங்களின்படி தேயிலைத் தாவர இயல்பு தேயிலை மரத்தின் உயரத்தை ஒரு குறிப்பிட்ட அளவிலே வைத்திருப்பதின் மூலம் போஷாக்கான கொழுந்து இலைகளைப் பெறலாம் என்பதேயாகும்.

இதுவரை தேயிலை மரங்களின் இயல்பான குணங்கள், வித்தியாசமான கடல் மட்டப் பிரதேசங்களுக்கு ஏற்றவாறு மாறுபடும்,

கிருமிகளின் தாக்கங்களும் அதற்கு ஏற்றவாறு மாறுபடும், இத்தகைய மாற்றங்க

**— தி. இரா. கோபாலன் —**

ளுக்கு மாறுபாடான காலநிலை மூலகாரணம், வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதில் நிலத்தில் காணப்படும், ரசாயனப் பொருட்களின் நேரடிப் பங்கு இவை பற்றிய ஆய்வுகள் அவருடைய ஆலோசனைகளுக்குரிய தலைப்புக்களாகும்,

நமது வர்த்தகத் தேயிலையின் விவேக முன்னேற்றத்திற்கும் ருசி வேறுபாட்டு வேலைகளுக்கும் பட்டேவியா நூல்கள் பெரிதும் துணை புரிந்துள்ளன,

தற்போதைய அபிவிருத்தி முனைவுகளின் முன்னோடியாக விளங்கிய பல்வேறு நாடுகளின் அனுபவ ஆலோசனைகள் அனைத்தும், சரித்திரத்தின் கதவுகள், அந்த நாடுகளின் தேயிலை என்றதொரு பின்னல் வேலைகளின் அங்கமான நமது தேயிலை ஆராய்ச்சி நிலையம் என்ற சகாப்தம் ஒரு மாபெரும் வெண்சங்கு,

தேயிலை உற்பத்தியின் இறுதிக் கட்டமான சுவைத்தல் முறையில் அவ்வப்போது ஏற்பட்ட உணர்வுகளே இதன் வயதை இத்தனை உயரத்துக்கு அழைத்து வந்துள்ளன,

இந்த நூற்றாண்டின் ஆரம்பம் இத்துறைக்கு ஒரு உந்து சக்தியாக அமைந்தது,

தேயிலைக் கொழுந்துகளைப் பறித்துத் தொழிற்சாலைகளுக்கு அனுப்புவதோடு மட்டும் அவற்றின் வேலைத் திட்டம் நின்று விடுவதில்லை, காய வைத்தல் அரைத்தல் உலர்த்துதல், சலித்துதல், முறுக வைத்தல், அடைத்தல் போன்ற எல்லா நிலைகளும் ஒரு விஞ்ஞான ரீதியான தொழிற்பாடு,

இவற்றை நாம் பொதுவாக வேனும் - அல்லது நுணுக்கமாக வேனும் தெரிந்து கொண்டு சிந்தித்தோமானால் எதிர்காலத் தேயிலை வர்த்தகப் பங்களிப்பில் விஞ்ஞான ரீதியாக ஈடுபடலாம்.

அதற்குரிய தேவையும், பக்குவமும் அவற்றை அறிந்து கொள்வதன் மூலமே அடையலாம்.

(தூ-ங)

சிந்தாமணி

சிந்தாமணி CHINTAMANI

தின வெளியீடு "தினபதி" ஞாயிறு வெளியீடு "சிந்தாமணி"

# எல்லாப் பிராணிகளுக்கும் புத்தி உண்டு

பூச்சி, வண்டு போன்றவற்றின் புத்தியை மனித புத்தியுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியாது. ஏனென்றால் அதற்கு சிறந்த சிலாக்சாரமான புத்தி இருக்கின்றது என்பதில் சந்தேகமில்லை.

தேனீயில் இருந்து திமிங்கலம் வரையிலான எல்லா பிராணிகளுக்கும் சிறந்த புத்தி உள்ளது.

கொக்கு தனது சிறகொன்றை நீரில் இறங்கி விரித்து மீன் போன்ற பிராணிகள் வராதா என ஏங்கிக் கொண்டு காத்திருக்கும்.

ஏதாவது வந்தவுடன் தனது சொண்டின் மூலம் அதனை கொத்தி சாப்பிடும்.

கழுகு முட்டைகளின் சுவை ருசிப்பதற்காக கருங்கற்களை போட்டு அதனை உடைத்து விடுகின்றது. இவ்வாறான பிராணிகள் தங்கள் ஆகாரத்திற்குத் தேவையான உணவுப் பொருட்களை தேடிக் கொள்ள பல வழி முறைகளைக் கையாளுகின்றன.

சில பிராணிகள் தாம் தேடிக் கொண்ட உணவுப் பொருட்களை பதுக்கி சேமித்து வைத்துக் கொள்ளும். இவ்வாறு சேமித்து வைத்த உணவுப் பொருட்களை தமக்குத் தேவையேற்படும் போது அவ் உணவுகளை எடுத்துச் சுவைக்கும்—

இப் பிராணிகள் சில வேளைகளில் வருடக் கணக்கு சென்றாலும் கூட இப் பொருள்களை பதுக்கி வைத்த இடத்திலிருந்து எடுத்து உண்ணும்.

ஆபிரிக்காவில் உள்ள குரங்குகள் உணவுப் பொருட்களை பதுக்கி எடுப்பதற்காக ஒரு மொழியில் உரையாடுகிறது.

இதனை இது சம்பந்தமாக ஆய்வு நடத்திய விஞ்ஞானி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு பிராணியினுடைய புத்தி மகிமையும் அதன் சூழலுக்கு ஏற்ப மாறுபட்டு இருக்கும். ஒரு சுற்றுப் பகுதியில் மட்டும் உல்லாசமாக பறந்து திரியும் பிராணிகளின் வேகம் அதன் எடை, வகைகளுக்கு ஏற்ப வேறுபட்டு இருக்கும்.

கொக்கு மணித்தியாலத்திற்கு 125 மைல் வேகத்தில் பறந்து செல்லும். ஓலெய்யா என்னும் பறவையினம் மணித்தியாலத்திற்கு 300 மைல் வேகத்தில் பறக்கும். ஆசியாவிலுள்ள ஒலெய்யா பறவையினம் மணித்தியாலத்திற்கு 200 மைல் வேகத்தில் தான் பறக்கும்.

உலகத்திலேயே மிகவும் வேகமாக பறக்கக் கூடிய பறவையினம் இதுவாகும்.

இப்பறவைகளை ஐரோப்பாவிலுள்ள மாடிக் கட்டிடங்களில் காணலாம்.

இதனை இப்பறவைகள் பற்றி ஆராய்ச்சி நடத்திய விஞ்ஞானி ஒருவர் தெரிவித்துள்ளார் (து-இ)

# கடன் சுமை



— ஏ. எம். எம் அலி

சின்னஞ் சிறுகதை

அடியேய் பாத்தும்மா ஒன்ட வாய கொஞ்சம் அடக்கிப் பேசடீ! யோக்கியகாரி" ஹாஜரா ஆத்திரம் தாங்காமல் கத்தினாள்—

"ஏண்டி? இல்லாட்டிப் போனா நீ என்ட நாக்கே வெட்டிப் போடுவியோ...?" பாத்தும்மா எதையுஞ் சொல்வதற்கு "லைசென்ஸ்" பெற்றவள் போல் பொரிந்து தள்ளிக் கொண்டிருந்தாள்!

"ஓம் எனக்கி இதுவும் வேண்டும்... இன்னமும் வேண்டும்டீ! கொடுத்த கடனக் கேட்டது குற்றமாப் போச்சி இல்லையா...?" ஹாஜரா குசப்போடு பேசினாள்—

"நாங் ஒனக்கென்ன ஆயிரக்கணக்கிலயா கடன் தரணும்... நேரம் ஒகுத்தில்லாம கடனுங் கடன்..." வரிந்து கட்டிக் கொண்டு பாத்தும்மா சண்டைக்கு நின்றாள்—

"கடன் கேட்கிற போது மட்டும் நேரம் ஒகுத்து இவளுக்கு இல்லயோ? திருப்பிக் கொடுக்கிறபோது மட்டும் நேரமும் ஒகுத்தும் வேண்டிக் கெடக்கு. யோக்கியமாம் யோக்கியம்..." ஹாஜராவும் விட்டுக் கொடுக்கவில்லை—

அந்த "கொடுக்கல் வாங்கல்" சண்டையிலே பாத்தும்மாவின் கொக்கரிப்பு நியாயம் இல்லைதான்! "கொடுத்ததைக் கேட்டால் அடுத்தது சண்டை" என்பதை அவள் நிரூபித்து விட்டாள்—

என்ன விசித்திரமான மனிதர்கள் இவர்கள்? கடன் கேட்கும்போது பல்லிளிப்பு! கொடுத்த கடனைத் திருப்பிக் கேட்கப் போனால் சொல்லளப்பு...!!

அந்த ஐம்பது ரூபாயைக் கடனாகப் பெற்று கிட்டத்தட்ட நான்கு மாதங்களுக்கு மேலாகின்றன— அதைக் கேட்ட போதுதான் பாத்தும்மாவுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்து விட்டது—

கடன் கொடுத்தவள் ஐம்பது சதமானாலும் கேட்காமலா இருப்பாள்...? அதுவும் நாலு மாதங்கள் திரும்பக் கேட்காமலேயே இருந்து விட்டால் பாத்தும்மாவுக்கு மறந்தே போய் விடும்! "நான் எங்கே ஒனக்கிட்ட கடன் வாங்கினேன்" என்றே அலாப்பி விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை—

இந்த நிலைமை தோன்றக் கூடாதென்றுதான் ஹாஜரா அந்தக் காசை – கடனைக் கேட்டனுப்பினாள்... பாத்தும்மா மறந்து போகாமல் இருந்தது நல்ல வேளை ஆயிற்று! இல்லையென்றால் அந்தக் காசு கடலிலே போட்ட கல்லுத்தான்!

ஊர் வம்பளக்கும் ஐந்தாறு பெண்களுடன் பாத்தும்மா அன்று அந்த வட்டாரத்துப் "பலதும் பத்தும்" நிகழ்ச்சிக்குத் தலைமைதாங்கிக் கொண்டிருக்கும் போது ஹாஜராவுடைய பெண்பிள்ளையொன்று அந்த மந்திராலோசனைச் சபைக்கே சென்று கடன் காசைக் கேட்டது தப்பாப் போச்சு...!

அத்தோடு பாத்தும்மாவின் கௌரவமும் பாதி போச்சு...! உடனே சபையைக் கலைத்து விட்டு சுடச் சுடவே "சமருக்கு" எழுந்து வந்தாள் பாத்தும்மா—

"என்னை கேள்வியடீ! நான் நாலு பேருடன் பேசிக் கொண்டிருக்கும் போதா? உன் மகள கடன் கேட்டு அனுப்புவது? என்ட பெயர் என்னாவது அடீ?" ஏதோ அவளுடைய பக்கமே நியாயம் இருப்பதாக எண்ணிக்கொண்டு எகிறிக் குதித்தாள் பாத்தும்மா...

"சரி... சரி... இத்துடன் முடிஞ்சா போச்சி... பார்ப்பண்டீ ஒன்ட கவுருவத்த?" ஹாஜராவும் சளைக்காது சொற்களைப் பாய்ச்சினாள்...

இப்படி மற்றவர்களிடம் கடன் வாங்குவதும், வாங்கிய கடனை ஒப்படைக்காது நாட்களை நீட்டிக் கொண்டுபோவதும் கடைசிலே களத்திலே குதிப்பதும் சிலருக்கு வாடிக்கையான விடயந்தான்!

ஏச்சுச் சூறாவளி! நீடித்து வீசியபின் பாத்தும்மாவின் சுரணை அவளது நெஞ்சைச் சுண்டியது போலும்! எப்போதோ ஹாஜராவின் வீட்டிலிருந்து வாங்கிப் போயிருந்த நாலு சுண்டு அரிசி மாவு கூட அன்று ஹாஜராவின் வீட்டுக்கு வந்து சேர்ந்தன,

"கொஞ்ச நாளைக்கு உறவு! கொஞ்ச நாளைக்குப் பகை! இன் இப்படியான உறவுகள் நமக்குத் தேவையில்லை" என்று ஹாஜரா இறுக்கமாகத் தீர்மானித்து விட்டாள்!

"பக்கத்து வீட்டான் பசித்திருக்கும் போது நீ ஒரு போதும் புசித்திருக்காதே என்பது வள்ளல் நபிமணி அவர்கள் வழங்கிய வாஸ்தவமான மொழிதான்!

இருந்தும்...? உதவி ஒத்தாசை, கடன்தனிசு என்று கொடுத்து வாழப் போனால்...? சொல்லடியும் சிலவேளை பொல்லடியும் பட நேரிடுறகிதே! என்ன உலகமிது! கஷ்டம் வரும் போது கடன் கேட்டு வருவது? கொடுத்ததைத் திரும்பக் கேட்டால் சண்டைக்கு வருவது?

வீட்டுக்கே வந்து வீண் சொல்லாடலும், "நான்" என்ற விமர்சனமும் நிகழ்த்துவது? இதெல்லாம் பெண்களுடன் கூடப் பிறந்த பொறுமைக் குணத்தின் பிரதியீடுகளா?

ஆம்! பாத்தும்மாவுடனான உறவு முறிந்து சுமார் ஒரு வருடமாயிற்று! அவளது மூன்றாவது மகள், ஹாஜராவுடைய இரண்டாவது மகளுடன் கூடப் படிப்பவள்.

உறவுள்ள நாட்களில் வீட்டுக்கு வந்து இரவு ஒன்பது பத்து மணி வரையும் இரண்டு தோழியர்களும் ஒன்றுகப் படிப்பார்கள்,

இப்போது அந்தப் பிள்ளையும் "இந்த உம்மா விஞல் ஹாஜராவின் வீட்டுக்கு வருவதே இல்லை,

ஏன் இது? விவஸ்தை தெரியாத இப்படியான "உம்மாக்களால்" ஒன்றுமறியாத பிள்ளைகளின் நட்புறவில் கூட பகைமை நஞ்சு கலந்து விடுகிறதே!]

திக்குச்சியானாலும் கடனுக்கு ஓடி வருகின்ற பாத்தும்மா, இப்போது ஒரு இலையுதிர்கால மரம் தன் இலைகளை உதிர்த்து விட்டு நிர்வாணமாய் நிற்பது போல பழைய சண்டை நினைவுகளையும் போர்க் குணத்தையும் உதிர்த்து விட்டு ஹாஜராவைக் காணும்போது அவளது முகத்தை அடிக்கடி பார்க்கின்றாள்!


இது பழைய உறவைப் புனர் அமைக்கும் முயற்சியா? இல்லை புதிய உறவுக்கு அத்திவாரமா?

"முஸ்லிம்கள் ஒருவரை ஒருவர் பகைத்துக் கொண்டு மூன்று நாட்களுக்கு மேல் பேசாதிருப்பது முனாபிக்குடைய தன்மையாகும்" என்பது ஏந்தல் நபி வாக்கியம்,

என்றாலும் இந்த பாத்தும்மாவுடன் பேச்சு வார்த்தைகளை வைத்துக் கொண்டால் பிரச்சினையல்லவா உருவாகின்றது, ஹாஜரா யோசிக்கின்றாள்—

(து)

# ஒப்புயர்வற்ற இயந்திரம்



மனிதர்கள் தனித்துவமான பிறவிகள். எலும்பும் தோலும் சதையும் கொண்டு உருவான அவர்களது உடலியந்திரம் விந்தையானது. சுமார் 200 எலும்புகள் . . . 5.5 லீட்டர் இரத்தம் . . மைல் கணக்கான இரத்தக் குழாய்கள், நரம்புகள், தசைநார்கள் . . . நுட்பமாகத் தொடுக்கப்பட்ட உறுப்புகள் . . இவையனைத்தும் பனமென்ற விசித்திர சக்தியின் ஏவுதலுக்கேற்ப வெகு நுணுக்கமாகவும் அதிசயிக்கத்தக்க முறையிலும் சேர்ந்தியங்குகின்றன.

விந்ரெப்பில் உள்ள நாம் இந்த உடலியந்திரத்தைப் பேணிப் பராமரிக்கும் பணியில் 100 ஆண்டுகளுக்கும் மேலாக உழைத்து வருகிறோம். ஆரோக்கியப் பராமரிப்பு எமது கூட்டுமொத்தமான குறிக்கோள். உலகெங்குமுள்ள 125 நாடுகளில் 45 உற்பத்தி நிறுவனங்களின் சார்பில் 20,000 மக்கள் இந்தக் குறிக்கோளுக்காக உழைக்கிறார்கள். உலகோர் நம்பி நாடும் கைமருந்துகள், வைத்தியர்களால் சிபாரிசு செய்யப்படும் மருந்துகள், வீட்டுப் பாவனைப் பொருள்கள் ஆகியவற்றைத் தயாரித்துச் செம்மைப்படுத்துவதற்காக 12,000 க்கும் அதிகமான விஞ்ஞானிகள், நியூயோர்க்கிலும் ஐரோப்பாவிலுமுள்ள

## உடலின் உயிர்த்துடிப்பை உற்றுக் கேளுங்கள்

ஆய்வுகூடங்களில் வேலைசெய்கிறார்கள். நீங்கள் பல வழிகளில் எங்களை அறிந்திருப்பீர்கள்.

பனடோல் வாங்கும்போது அல்லது ஃபிலிப் மில்க் ஒவ் மக்னீசியாவோ றெசின்டோலோ பருகும்போது அல்லது நியூட்ரோபெரோல் போன்ற இரும்புச் சத்து-விட்டமின் பானம் அருந்தும்போது எங்களைப் பற்றி அறிந்திருப்பீர்கள். நீங்கள் அறியாமலே நாம் உங்களுக்கு உதவிய சந்தர்ப்பங்களும் இருக்கலாம். உதாரணமாக, வைத்தியர்கள் உங்களுக்குச் சிகிச்சை அளிக்கும் வேளைகளில் எங்கள் சேவை உங்களுக்கு கிடைத்திருக்கும். எனவே, உங்கள் உடலியந்திரத்தைச் செம்மையாகப் பேணுங்கள். அளவோடு உண்ணுங்கள். உடற்பயிற்சி செய்யுங்கள். ஓய்வெடுங்கள். இழக்கும் சக்தியை மீள வழங்குங்கள். இயந்திரத்தைப் பராமரிப்பது போல உடலையும் கிரமமாகக் கவனித்து வாருங்கள். உங்கள் உடலியந்திரம் வலுவிழப்பதற்கான அறிகுறிகள் தென்படுமானால் உங்களுக்கு உதவ விந்ரெப் காத்திருக்கிறது.

**நலமான வாழ்வுக்கு வழிகாட்டும்**

**Winthrop**

இலங்கையில் பிரதிநிதித்துவம் செய்வோர
மக்வூட்ஸ் விந்ரெப் லிமிட்டெட

இப் பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டது இன்டிபென்டன்ட் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் 5 குணசேன மாவத்தை கொழும்பு 12 (இலங்கை). தபால் பெட்டி இல. 1613. வெளியிட்ட திகதி9 ஜூலை 1989.
CHINTAMANI, 5 Gunasena Mawatha, Colombo 12 — P.O. Box 1613.